


KEMENTERIAN PENDIDIKAN MALAYSIA

# தமிழ்மொழி
# BAHASA TAMIL

SEKOLAH JENIS KEBANGSAAN TAMIL

ஆண்டு
TAHUN
3

தமிழ்மொழி ஆண்டு 3

BAHASA TAMIL TAHUN 3 SJKT

KURIKULUM STANDARD SEKOLAH RENDAH
KSSR (SEMAKAN 2017)
KEMENTERIAN PENDIDIKAN MALAYSIA

RM26.70
ISBN 978 - 967 - 2046 - 14 - 1
9 789672 046141
ET043003

# RUKUN NEGARA

**Bahawasanya Negara Kita Malaysia**
mendukung cita-cita hendak;

Mencapai perpaduan yang lebih erat dalam kalangan
seluruh masyarakatnya;

Memelihara satu cara hidup demokrasi;

Mencipta satu masyarakat yang adil di mana kemakmuran negara
akan dapat dinikmati bersama secara adil dan saksama;

Menjamin satu cara yang liberal terhadap
tradisi-tradisi kebudayaannya yang kaya dan pelbagai corak;

Membina satu masyarakat progresif yang akan menggunakan
sains dan teknologi moden;

MAKA KAMI, rakyat Malaysia,
berikrar akan menumpukan
seluruh tenaga dan usaha kami untuk mencapai cita-cita tersebut
berdasarkan prinsip-prinsip yang berikut:

**KEPERCAYAAN KEPADA TUHAN**
**KESETIAAN KEPADA RAJA DAN NEGARA**
**KELUHURAN PERLEMBAGAAN**
**KEDAULATAN UNDANG-UNDANG**
**KESOPANAN DAN KESUSILAAN**

**(Sumber: Jabatan Penerangan, Kementerian Komunikasi dan Multimedia Malaysia)**

KURIKULUM STANDARD SEKOLAH RENDAH (SEMAKAN 2017)

# தமிழ்மொழி
# BAHASA TAMIL

ஆண்டு
TAHUN
# 3

SEKOLAH JENIS KEBANGSAAN TAMIL
தேசிய வகைத் தமிழ்ப்பள்ளி





**Penulis**
Saraswathy Kannan
Tamilmathi Arumugam

**ஆசிரியர்கள்**
சரஸ்வதி கண்ணன்
தமிழ்மதி ஆறுமுகம்

**Editor**
Pithaullah Hayath Basha
Dr. Richard Samy Pakari
Letchumy Suppiah

**பதிப்பாசிரியர்கள்**
பிதாவுல்லாஹ் ஹயாத் பாஷா
முனைவர் ரிச்சர்ட் சாமி பக்கிரி
லட்சுமி சுப்பையா

**Pereka Bentuk**
Prabu Palani

**வடிவமைப்பாளர்**
பிரபு பழனி

**Illustrator**
Azrul Helmi Bin Abd. Wahab
Maseh Bin Supian

**ஓவியர்கள்**
அஸ்ருல் ஹெல்மி பின் அப்துல் வஹாப்
மாசேஹ் பின் சுப்பியான்



**Multi Educational Book Enterprise**
2018

KEMENTERIAN
PENDIDIKAN
MALAYSIA

No Siri Buku: 0054

KPM2018 ISBN 978-967-2046-14-1

Cetakan Pertama 2018

**© Kementerian Pendidikan Malaysia**

Hak Cipta Terpelihara. Mana-mana bahan dalam buku ini tidak dibenarkan diterbitkan semula, disimpan dalam cara yang boleh dipergunakan lagi, ataupun dipindahkan dalam sebarang bentuk atau cara, baik dengan cara bahan elektronik, mekanik, penggambaran semula mahupun dengan cara perakaman tanpa kebenaran terlebih dahulu daripada Ketua Pengarah Pelajaran Malaysia, Kementerian Pendidikan Malaysia. Perundingan tertakluk kepada perkiraan royalti atau honorarium.

**Diterbitkan untuk**
**Kementerian Pendidikan Malaysia oleh:**

**Multi Educational Book Enterprise**
No. 22A-2, Jalan PJS 8/4,
Dataran Mentari, Bandar Sunway,
46150 Petaling Jaya,
Selangor Darul Ehsan.
Tel: 03-5636 2568
Faks: 03-5636 0825
Laman Web: http://www.multiedu.com.my

**Reka Letak dan Atur Huruf:**

**Multi Educational Book Enterprise**

Muka Taip Teks: Dhanyeta
Saiz Muka Taip Teks:18 poin

**Dicetak oleh:**

**Aslita Sdn. Bhd. (146102-U)**
No. 20, Jalan 4/10B, Spring Crest Industrial Park
Batu Caves, 68100 Kuala Lumpur.
Tel:03-61867645
Faks:03-61867635

# PENGHARGAAN

Penerbitan buku teks ini melibatkan kerjasama banyak pihak. Sekalung penghargaan dan terima kasih ditujukan kepada semua pihak yang terlibat:

- Jawatankuasa Penambahbaikan Pruf Muka Surat, Bahagian Buku Teks, Kementerian Pendidikan Malaysia.
- Jawatankuasa Penyemakan Pembetulan Pruf Muka Surat, Bahagian Buku Teks, Kementerian Pendidikan Malaysia.
- Jawatankuasa Penyemakan Naskhah Sedia Kamera, Bahagian Buku Teks, Kementerian Pendidikan Malaysia.
- Pegawai-pegawai Bahagian Buku Teks dan Bahagian Pembangunan Kurikulum, Kementerian Pendidikan Malaysia.
- Jawatankuasa Peningkatan Mutu Penerbit.
- Jabatan Kebudayaan dan Kesenian Negara.
- SJKT West Country Timur, Kajang, Selangor.
- SJKT Bandar Springhill, Negeri Sembilan.
- SJKT West Country Barat, Kajang, Selangor.
- Dakshra Fine Arts, Subang Jaya, Selangor.

# உள்ளடக்கம்


முன்னுரை V

**தொகுதி 1 : மொழி**
1. மொழி விழா 1
2. செய்தித் துணுக்குகள் 2
3. மொழியின் இனிமை 3
4. செய்யுளும் மொழியணியும் 4
5. இலக்கணம் 5

**தொகுதி 2 : நன்னெறி**
1. கட்டொழுங்கு 6
2. நற்பண்புகளை அறிவோம் 7
3. மனத்தின் பலம் 8
4. செய்யுளும் மொழியணியும் 9
5. இலக்கணம் 10

**தொகுதி 3 : கலை**
1. கலைகளைக் கற்போம் 11
2. பரதக் கலை 12
3. கதம்ப மாலை 13
4. செய்யுளும் மொழியணியும் 14
5. இலக்கணம் 15

**தொகுதி 4 : சுகாதாரம்**
1. நலம் பேணுவோம் 16-17
2. உணவுப் பழக்கம் 18
3. சுகமான வாழ்வு 19
4. செய்யுளும் மொழியணியும் 20
5. இலக்கணம் 21

**தொகுதி 5 : சுற்றுச்சூழல்**
1. இனிய உலகம் 22-23
2. ஒற்றுமையே வலிமை 24
3. எண்ணத்தின் வெற்றி 25
4. செய்யுளும் மொழியணியும் 26
5. இலக்கணம் 27

**தொகுதி 6 : போக்குவரத்து**
1. எங்கள் பயணம் 28
2. பொதுப் போக்குவரத்து 29
3. திரட்டேடு 30
4. செய்யுளும் மொழியணியும் 31
5. இலக்கணம் 32

**தொகுதி 7 : உணவு**
1. பழங்களைச் சுவைப்போம் 33
2. சுவையோ சுவை 34
3. எங்கள் கொண்டாட்டம் 35
4. செய்யுளும் மொழியணியும் 36
5. இலக்கணம் 37

**தொகுதி 8 : சமூகம்**
1. விருந்து உபசரிப்பு 38-39
2. எங்கள் புத்தாண்டு 40-41
3. சமூக நிகழ்ச்சிகள் 42
4. செய்யுளும் மொழியணியும் 43
5. இலக்கணம் 44

**தொகுதி 9 : இயற்கை**
1. இன்பச் சுற்றுலா 45
2. பொருள் அறிவோம் 46
3. பசுமைத் தோட்டம் 47
4. செய்யுளும் மொழியணியும் 48-49
5. இலக்கணம் 50-51

**தொகுதி 10 : அறிவியல்**
1. அறிவியல் விழா 52-53
2. தண்ணீரின் மகிமை 54
3. நான் ஒரு பள்ளிக் காலணி 55
4. செய்யுளும் மொழியணியும் 56-57
5. இலக்கணம் 58

**தொகுதி 11 : பொருளாதாரம்**
1. கைத்திறன் 59
2. சிறுதொழில் செய்வோம் 60-61
3. வருமானம் 62
4. செய்யுளும் மொழியணியும் 63
5. இலக்கணம் 64-65

**தொகுதி 12 : விளையாட்டு**
1. இசை நாற்காலி 66
2. ஆடுவோம் வாரீர் 67
3. பாரம்பரிய விளையாட்டு 68
4. செய்யுளும் மொழியணியும் 69
5. இலக்கணம் 70

**தொகுதி 13 : பண்பாடும் பண்பும்**
1. பண்பாட்டு விழுமியங்கள் 71
2. உலகம் நமக்கு 72
3. பண்பும் நாமும் 73
4. செய்யுளும் மொழியணியும் 74
5. இலக்கணம் 75-77

**தொகுதி 14 : குடியியல்**
1. ஒற்றுமையே பலம் 78
2. கூடி விளையாடுவோம் 79
3. குடும்ப தினம் 80-81
4. செய்யுளும் மொழியணியும் 82
5. இலக்கணம் 83

**தொகுதி 15 : குடும்ப விழா**
1. அன்பான உறவுகள் 84
2. நாடக விழா 85-86
3. குடும்பச் சுற்றுலா 87
4. செய்யுளும் மொழியணியும் 88
5. இலக்கணம் 89

**தொகுதி 16 : எங்கள் கதை**
1. நடித்துக் காட்டுக 90
2. வரலாறு 91
3. நான் ஒரு குடை 92
4. செய்யுளும் மொழியணியும் 93
5. இலக்கணம் 94

**தொகுதி 17 : நேசம் வளர்ப்போம்**
1. இனிய நினைவுகள் 95
2. உயர் குணங்கள் 96-97
3. மனித நேயம் 98
4. செய்யுளும் மொழியணியும் 99
5. இலக்கணம் 100

**தொகுதி 18 : அனுபவங்கள்**
1. சிரித்து மகிழ்வோம் 101
2. புதுமை கண்டேன் 102
3. முதல் கதை 103
4. செய்யுளும் மொழியணியும் 104-105
5. இலக்கணம் 106-107

**தொகுதி 19 : மனமகிழ் நடவடிக்கைகள்**
1. சிறப்புகள் அறிவோம் 108-109
2. சதுரங்கம் 110
3. உடற்பயிற்சி 111
4. செய்யுளும் மொழியணியும் 112
5. இலக்கணம் 113-114

**தொகுதி 20 : பாதுகாப்பு**
1. எங்கும் பாதுகாப்பு 115
2. சாலை விதிமுறைகள் 116
3. சமிக்ஞை விளக்கு 117
4. செய்யுளும் மொழியணியும் 118
5. இலக்கணம் 119

**தொகுதி 21 : சமயம்**
1. எங்கள் பண்டிகைகள் 120-121
2. திருமுறை விழா 122
3. இறைபக்தி 123
4. செய்யுளும் மொழியணியும் 124-125
5. இலக்கணம் 126

**தொகுதி 22 : இலக்கியம்**
1. குழந்தைக் கவிஞர் 127
2. ஐம்பெரும் காப்பியங்கள் 128
3. நெல்லிக்கனி 129
4. செய்யுளும் மொழியணியும் 130-131
5. இலக்கணம் 132-133

**தொகுதி 23 : தகவல் தொடர்புத் தொழில்நுட்பம்**
1. கணினியின் தேவை 134-135
2. உலகம் நம் கைகளில் 136
3. நன்மையும் தீமையும் 137
4. செய்யுளும் மொழியணியும் 138-139
5. இலக்கணம் 140-141

**தொகுதி 24 : போதைப் பொருள்**
1. வேண்டாம் நமக்கு 142-143
2. கருத்தரங்கு 144
3. அறிவுரை கேளீர் 145
4. செய்யுளும் மொழியணியும் 146
5. இலக்கணம் 147-148

**தொகுதி 25 : கல்வி**
1. தெளிவு வேண்டும் 149
2. கோள்களை அறிவோம் 150
3. கற்போம் சிறப்போம் 151
4. செய்யுளும் மொழியணியும் 152
5. இலக்கணம் 153-154

# முன்னுரை

**தமிழ் எங்கள் உயிர் என்பதாலே**
**வெல்லும் தரமுண்டு தமிழர்க்கு இப்புவிமேலே**

- பாவேந்தர் பாரதிதாசன்

தொடக்கக் கல்வி என்பது எழுத்தறிவை மட்டுமே தருவது அல்ல. மாறாக, மாணவர்கள் தங்களின் அன்றாட வாழ்வின் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளவும் சமூகத் தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளவும் சிறந்ததொரு வழிகாட்டியாக அமைகிறது. இவ்வகையில், கற்பது மாணவர்களைச் செம்மைப்படுத்திச் சிறந்த இலக்கை அடைய தமிழ்மொழி ஒரு கருவியாக அமைகின்றது.

மாணவர்களின் தனி ஆற்றலையும் மொழித் திறனையும் மேலோங்கச் செய்வது தமிழ்மொழிக் கல்வி என்றால் அது மிகையாகாது. மேலும், இவ்வினிய மொழியைக் கற்றுத் தங்களின் உயர்ந்த எண்ணங்களைச் சிறந்த மொழிநடையில் பண்புடன் வெளிப்படுத்த தமிழ்மொழி அடித்தளமாக விளங்குகின்றது.

இருபத்து ஐந்து தொகுதிகளைக் கொண்ட இப்பாடநூல், தமிழ்மொழியைத் திறம்படக் கற்க வழிகாட்டியாக அமைகிறது. ஒவ்வொரு தொகுதியும் வெவ்வேறு கருப்பொருளைத் தாங்கி கேட்டல் பேச்சு, வாசிப்பு, எழுத்து ஆகிய கூறுகளை உணர்த்துகின்றது. செய்யுள் மொழியணி, இலக்கணம் ஆகிய கூறுகள், நன்னெறிப் பண்புகளையும் முறையான இலக்கண விதிகளையும் எடுத்துரைக்கின்றன. மாணவர்களின் தரத்தை மேம்படுத்த மொழி விளையாட்டும் இடம்பெற்றுள்ளது.

பாடநூலில் கற்றதை மதிப்பீடு செய்யும் பொருட்டு இரண்டு நடவடிக்கை நூல்கள் வழங்கப்பட்டுள்ளன. முதல் பாகம் பதின்மூன்று தொகுதிகளையும் இரண்டாம் பாகம் பன்னிரண்டு தொகுதிகளையும் உள்ளடக்கியுள்ளன.

கற்றலுக்கு மேலும் சிறப்புச் சேர்க்க உயர்நிலைச் சிந்தனைக் கேள்விகளும் ஆங்காங்கே இடம்பெற்றுள்ளன. தமிழ்ப்பள்ளி ஆசிரியர்கள் உலகச் சவால்களுக்கு ஏற்ப கணினி இயக்கத் திறமைகளை நிறைவாகப் பெற்று சிறந்த மாணவர் சமுதாயத்தை உருவாக்குதல் வேண்டும்.

இறுதியாக, இப்பாடநூலைப் படைப்பதற்குப் பெரிதும் உதவியாகவும் வழிகாட்டியாகவும் இருந்த மலேசியக் கல்வி அமைச்சுக்கு மனமார்ந்த நன்றியைச் சமர்ப்பிக்கின்றோம்.

**தமிழுண்டு தமிழ்மக் களுண்டு - இன்பத்**
**தமிழுக்கு நாளும் செய்வோம் நல்ல தொண்டு!**

- பாவேந்தர் பாரதிதாசன்.

அன்புடன்,
ஆசிரியர்கள்.

# மொழிக்கூறுகளுக்கான படவுருக்கள்

தொகுதிகள்

பாடம்

கேட்டல் பேச்சு

வாசிப்பு

எழுத்து

செய்யுளும் மொழியணியும்

இலக்கணம்

சொற்களஞ்சியம்

தகவல் களம்

உயர்நிலைச் சிந்தனை (உ.சி.தி)

ஆசிரியர் குறிப்பு

பாடி மகிழ்க

## ஜாப்பரைப் (ZAPPAR) பெறவும்

App Store Google play

முன்கூட்டியே ஜாப்பர் (Zappar) எனும் செயலியைப் பதிவிறக்கம் செய்து இந்நோக்குக் குறியீட்டை அடையவும்.

**இங்கு நோக்குக**

Zappar நோக்குக் குறியீடு

## இணையத் தளம்

QR நோக்குக் குறியீடு

App Store Google play

ஒரு தலைப்பின் உள்ளடக்கத்திற்குத் தொடர்புடைய அகப்பக்கத்தைத் தேட மாணவர்களை ஊக்குவித்தல்.

தொடர்புடைய தேடுபொருளைப் பயனீட்டாளர்கள் விரைவில் தேட (QR) நோக்குக் குறியீடு துணைப்புரிகிறது.

# தொகுதி 1 மொழி

## பாடம் 1 மொழி விழா

### போலித்தம் செய்க.




1.3.3 - செவிமடுத்தவற்றைப் போலித்தம் செய்வர்.

**ஆசிரியர் குறிப்பு**

- மொழியறிஞர்கள் பற்றி அறியச் செய்தல்.
- மொழியறிஞர்கள் பேசுவது போல் போலித்தம் செய்து காட்டப் பணித்தல்.
- மொழிக்குத் தொடர்பான வேறு அறிஞர்கள் போல் போலித்தம் செய்து காட்டப் பணித்தல்.

**வி.வ.கூ:** மொழி **உ.சி.தி:** ஆக்கச் சிந்தனை **21 ஆம் நூற்றாண்டு:** அறியும் ஆர்வம்

நடவடிக்கை நூல் 1 பக்கம் : 1

# பாடம் 2 செய்தித் துணுக்குகள்

## வாசித்து அறிக.

### தொல்காப்பியம்




தொல்காப்பியம் ஓர் இலக்கண நூலாகும். இதனை எழுதியவர் தொல்காப்பியர். அகத்தியரின் பன்னிரண்டு மாணவர்களில் இவரும் ஒருவர். தொல்காப்பியம், எழுத்து அதிகாரம், சொல் அதிகாரம், பொருள் அதிகாரம் எனும் மூன்று பெரும் பிரிவுகளைக் கொண்டது. பொருள் இலக்கணம் தருவது இந்நூலின் தனிச்சிறப்பாகும். இந்நூல் தமிழுக்குத் தனிப்புகழ் சேர்க்கும் நூல் எனவும் பெயர் பெற்றுள்ளது. மேலும், பழந்தமிழர் வாழ்வு கூறும் வரலாற்றுக் கருவூலம் என்றும் இதனை அழைக்கலாம்.

### முத்தமிழ்




இயல், இசை, நாடகம் ஆகிய மூன்றையும் முத்தமிழ் என்கிறோம். இயல் என்பது எழுதப்படுவதும் பேசப்படுவதுமாகும். இசை என்பது பண்ணிசைத்துப் பாடப்படும் தமிழாகும். ஆடல் பாடல்களுடன் உணர்த்தப்படுவது நாடகத் தமிழாகும். தெருக்கூத்து, மேடை நாடகங்கள் போன்றவையும் இவற்றில் அடங்கும். இசைத் தமிழ் தொடர்பான செய்திகள் தொல்காப்பிய நூலில் கூறப்பட்டிருக்கின்றன. மேலும், தோலிசைக் கருவி பறை என்றும், இன்ப இசைக் கருவி யாழ் என்றும் தொல்காப்பிய நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2.3.4 - துணுக்குகளைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப வாசிப்பர்.

**ஆசிரியர் குறிப்பு**

- துணுக்குகளைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப வாசிக்கப் பணித்தல்.
- துணுக்குகளில் வாசித்த கருத்துகளைக் கூறச் செய்தல்.
- குழு முறையில் வாசித்துக் குறிப்புகளைச் சேகரிக்கச் செய்தல்.


**வி.வ.கூ:** மொழி **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21 ஆம் நூற்றாண்டு:** தகவல் நிறைந்தவர்

நடவடிக்கை நூல் | பக்கம் : 2

# பாடம் 3 மொழியின் இனிமை

## வாசித்து எழுதுக.

| | |
|---|---|
| மாணவி | மாணவி கவிதை படித்தாள். |
| சிறுவன் | சிறுவன் கட்டுரை எழுதுகிறான். |
| நூல் | திருக்குறள் சிறந்த அறநூலாகும். |
| மொழி | தமிழ்மொழி இனிமையான மொழி. |
| நூல்கள் | தமிழ்மொழியில் பல அரிய நூல்கள் உள்ளன. |
| காப்பியங்கள் | சீவகசிந்தாமணி, மணிமேகலை, குண்டலகேசி, சிலப்பதிகாரம், வளையாபதி ஆகியவை ஐம்பெருங்காப்பியங்களாகும். |
| கட்டுரைகள் | மாதிரிக் கட்டுரைகள் வாசிப்பதனால் எழுதும் திறனை மேம்படுத்தலாம். |



3.4.8 - ஒருமை, பன்மைச் சொற்களைக் கொண்டு வாக்கியம் அமைப்பர்.

**ஆசிரியர் குறிப்பு**


- ஒருமை, பன்மைச் சொற்களை வாசிக்கச் செய்தல்
- ஒருமை, பன்மை வாக்கியங்களை வாசிக்கச் செய்தல்.
- மாணவர்கள் சுயமாக ஒருமை, பன்மை வாக்கியங்களை உருவாக்கிக் கூறப் பணித்தல்.

**வி.வ.கூ:** மொழி **உ.சி.தி:** செயல்திட்ட அடிப்படையான கற்றல் **21 ஆம் நூற்றாண்டு:** அறியும் ஆர்வம்

நடவடிக்கை நூல் | பக்கம் : 3-4

# பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

## உலகநீதியையும் பொருளையும் அறிக.







### உலகநீதியும் பொருளும்

- **ஓதாம லொருநாளு மிருக்க வேண்டாம்.**
  படிக்காமல் ஒரு நாளும் இருக்கக்கூடாது.
- **ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்.**
  யாரைப் பற்றியும் தீமை பயக்கும் சொற்களைச் சொல்லக்கூடாது.

4.7.1 - மூன்றாம் ஆண்டுக்கான உலகநீதியையும் அதன் பொருளையும் அறிந்து கூறுவர்; எழுதுவர்.

**ஆசிரியர் குறிப்பு**
- உரையாடலைப் பாகமேற்று வாசிக்கப் பணித்தல்.
- உலகநீதியையும் பொருளையும் வாசித்து அறியச் செய்தல்.
- மாணவர்கள் பொருத்தமான வேறு சூழலைக் குழு முறையில் உருவாக்குதல்.

நடவடிக்கை நூல் பக்கம் : 5

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** சீர்தூக்கிப் பார்த்தல் **21 ஆம் நூற்றாண்டு:** தொடர்பு கொள்ளும் திறன்

## பாடம் 5 இலக்கணம்

### பொருட்பெயரை அறிக.




பொருளின் பெயரைக் குறிப்பது **பொருட்பெயர்** எனப்படும்.
**எடுத்துக்காட்டு:** அத்தை, யானை, குருவி, ஆசிரியர், பட்டம்.

| செடி | தம்பி | தேனீ | பந்து | சிலை |
|---|---|---|---|---|

- வளவன் மத்தளம் வாசித்தான்.
- மான் இலை தழைகளைத் தின்றது.
- தாத்தா உடற்பயிற்சி செய்தார்.
- யானை கரும்பைத் தின்கின்றது.
- சிறுமி உண்டியல் வாங்கினாள்.
- மாணவன் ஆசிரியருக்கு வணக்கம் கூறினான்.
- புழு இலையைத் தின்றது.
- பருந்து உயரே பறந்தது.
- வேடன் அம்பை எய்தான்.
- அருந்ததி கிளியை வளர்க்கின்றாள்.
- காவேரி புத்தாடை அணிந்தாள்.
- அன்னம் நீந்தி மகிழ்ந்தது.

5.3.11 - பொருட்பெயர் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

**ஆசிரியர் குறிப்பு**
- பொருட்பெயர் பற்றிய உரையாடலை வாசிக்கச் செய்தல்.
- பொருட்பெயர்களைச் சரியாக வாசிக்கப் பணித்தல்.
- மாணவர்கள் பொருட்பெயர்களை வாக்கியத்தில் பயன்படுத்திக் கூறச் செய்தல்.


**வி.வ.கூ:** மொழி **உ.சி.தி:** கட்டுவியம் **21 ஆம் நூற்றாண்டு:** அறியும் ஆர்வம்

நடவடிக்கை நூல் I பக்கம் : 6-7

# தொகுதி 2 நன்னெறி

## பாடம் 1 கட்டொழுங்கு

### வாசித்து அறிக.




1.4.3 - செவிமடுத்த உரையாடலிலுள்ள முக்கியக் கருத்துகளைக் கூறுவர்.

**ஆசிரியர் குறிப்பு**


- கட்டொழுங்கு தொடர்பான உரையாடலை வாசிக்கச் செய்தல்.
- உரையாடலில் கூறப்பட்ட முக்கியக் கருத்துகளைக் கூறச் செய்தல்.
- உரையாடலை மாணவர்கள் நடித்துக் காட்டப் பணித்தல்.

நடவடிக்கை நூல் 1 பக்கம் : 8-9

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** ஆய்ந்தறிதல்வழி கற்றல் **21 ஆம் நூற்றாண்டு:** அன்பானவர்/ பரிவுள்ளவர்

# பாடம் 2 நற்பண்புகளை அறிவோம்

## வாசித்து அறிக.




- வகுப்பறையைச் சுத்தம் செய்கின்றனர்.
- திலகம் தரையைக் கூட்டுகிறாள்.
- காவியன் எழுது பலகையைச் சுத்தம் செய்கின்றான்.
- யாழினியும் கண்ணனும் வாசிப்பு அட்டைகளை அடுக்கி வைக்கின்றனர்.
- அறிவழகன் குப்பைக் கூடையில் குப்பைகளைப் போடுகிறான்.
- ஆசிரியருக்கு நாங்கள் வணக்கம் கூறுகிறோம்.
- ஆசிரியர் எங்களைப் பாராட்டுகிறார்.

வகுப்பறையைச் சுத்தம் செய்ய புதுமையான முறை எதுவாக இருக்கும்?

2.4.5 - வாக்கியத்தை வாசித்துப் புரிந்து கொள்வர்.

**ஆசிரியர் குறிப்பு**

- வாக்கியங்களைப் பிழையற வாசிக்கப் பணித்தல்.
- மாணவர்கள் பாகமேற்றுச் சில வாக்கியங்களை வாசிக்கச் செய்தல்.
- சுயமாகச் சில வாக்கியங்களை உருவாக்க கூறச் செய்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** சூழலமைவுக் கற்றல் **21 ஆம் நூற்றாண்டு:** கொள்கையுள்ளவர்


நடவடிக்கை நூல் 1 பக்கம் : 10

## பாடம் 3 மனத்தின் பலம்

### வாசித்து எழுதுக.

அ

**வெள்ளை** நிறக் குதிரை ஒன்று **வேகமாக** ஓடி வந்தது. **கறுப்பு** நிற நரி ஒன்று **மெதுவாக** நடந்தது. இரண்டு விலங்குகளும் சந்தித்துக் கொண்டன. குதிரை, தான் அதிக **உழைப்பாளி** என்றும் நரி **சோம்பேறி** என்றும் கூறியது. மேலும், குதிரை மனிதர்களுக்கு **நன்மை** செய்யும் பிராணி எனவும் நரி **தீமை** செய்யும் குணம் கொண்டது எனவும் கூறியது. **பெரிய** உருவம் கொண்ட குதிரை **சிறிய** உருவமான நரியை உதைக்க நினைத்தது. ஆனால், நரியோ குதிரையின் காலைக் கடித்துவிட்டு ஓடியது.



ஆ



**சிற்றூரில்** வசித்து வந்த ஒரு வாலிபன் **பேரூர்** ஒன்றுக்குச் சென்றான். அங்குச் சென்று பொருள்களை **ஏற்றுமதி**, **இறக்குமதி** தொழில் செய்ய விரும்பினான். வாழ்வில் **வெற்றி தோல்வி** என்பது இயல்பானது என்பதை அறிந்திருந்தான். என்ன நேர்ந்தாலும் **உண்மை** மட்டுமே இன்றி **பொய்மை** கூறலாகாது எனும் தன் தந்தையின் அறிவுரையையும் பின்பற்றி வாழ்ந்தான். கடின உழைப்பினால் வாழ்வில் முன்னேறினான். **அன்று** அவனை **இகழ்ந்த** பலர் **இன்று புகழ்ந்து** பேசுகின்றனர். வாலிபன் அகம் மகிழ்ந்தான். விடாமுயற்சி வெற்றி தரும் என்பதை உணர்ந்தான்.

3.3.24 - எதிர்ச்சொற்களை அறிந்து எழுதுவர்.

நடவடிக்கை நூல் பக்கம் : 11

**ஆசிரியர் குறிப்பு**

- வாசிப்புப் பகுதியைப் பிழையற வாசிக்கப் பணித்தல்..
- எதிர்ச்சொற்களைப் பட்டியலிட்டு வாசிக்கப் பணித்தல்.
- மாணவர்கள் குழு முறையில் எதிர்ச்சொற்கள் அடங்கிய வரிபடம் தயாரிக்கப் பணித்தல்.

**வி.வ.கூ:** ஆக்கமும் புத்தாக்கமும் **உ.சி.தி:** சிந்தனை வியூகம் **21 ஆம் நூற்றாண்டு:** அறியும் ஆர்வம்

## பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

### திருக்குறளையும் பொருளையும் அறிக.




**இணையத் தளம்**
https://www.youtube.com/watch?v=IBY7jrwYXUY

### திருக்குறளும் பொருளும்

**உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே**
**இடுக்கண் களைவதாம் நட்பு. (788)**

உடுத்திய ஆடை நழுவும்போது ஒருவருடைய கை அவரறியாமல் உடனே ஆடையை இழுத்து மானத்தைக் காப்பது போன்று நண்பருக்குத் துன்பம் வந்தகணமே ஓடிச்சென்று அதனைப் போக்குவதே நட்பாகும்.

4.3.3 - மூன்றாம் ஆண்டுக்கான திருக்குறளையும் அதன் பொருளையும் அறிந்து கூறுவர்; எழுதுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- சூழலில் உள்ள உரையாடலை வாசிக்கப் பணித்தல்.
- திருக்குறளையும் பொருளையும் வாசித்து அறியப் பணித்தல்.
- திருக்குறளை மனனம் செய்து ஒப்புவிக்கச் செய்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** சீர்தூக்கிப் பார்த்தல் **21 ஆம் நூற்றாண்டு:** அன்பானவர்/ பரிவுள்ளவர்

# பாடம் 5 இலக்கணம்

## இடப்பெயரை அறிக.



கமலம், உன் அண்ணன் எங்கே?

அவர் அஞ்சல் நிலையம் சென்றுள்ளார், தேவி.

உன் தம்பியும் உடன் சென்றுள்ளானா?

இல்லை... இல்லை. என் தம்பி பள்ளியில் நடைபெறும் சதுரங்கப் போட்டிக்குச் சென்றுள்ளான்.



**இடப்பெயர்** : ஓர் இடத்தின் பெயரைக் குறிப்பது.
**எடுத்துக்காட்டு** : திடல், அலுவலகம், மலேசியா, திரங்கானு.

- மாணவர்கள் **வகுப்பறையில்** அமர்ந்திருக்கின்றனர்.
- மாமா **அலுவலகம்** சென்றுள்ளார்.
- விருந்தினர்கள் **பொதுமண்டபத்திற்கு** வந்தனர்.
- இளைஞர்கள் **முதியோர் இல்லத்தைத்** தூய்மைப்படுத்தினர்.
- **பேரங்காடியில்** புத்தாடைகள் வாங்கினோம்.

**தகவல் களம்**

| பிழை | திருத்தம் |
|---|---|
| சில்லரை | சில்லறை |
| ரொம்ப | நிரம்ப |
| சிகப்பு | சிவப்பு |

5.3.12 - இடப்பெயர் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

**ஆசிரியர் குறிப்பு**
- உரையாடலைப் பாகமேற்று வாசிக்கப் பணித்தல்.
- வாக்கியங்களைப் பிழையற வாசிக்கச் செய்தல்.
- இடப்பெயர்களை வாசித்துப் பட்டியலிடச் செய்யப் பணித்தல்.

நடவடிக்கை நூல் பக்கம் : 13

**வி.வ.கூ:** மொழி **உ.சி.தி:** ஆய்வுச் சிந்தனை **21 ஆம் நூற்றாண்டு:** அறியும் ஆர்வம்

# தொகுதி 3 கலை

## பாடம் 1 கலைகளைக் கற்போம்

### பார்த்து உரையாடுக.



தையற்கலை



கோலம் இடுதல்

ஏன் | எவ்வாறு

எப்படி | எதற்கு



யோகாசனம்



சிலம்பம்

### வினாக்களுக்கு விடையளித்திடுக.

1. தையற்கலையை ஏன் கற்க வேண்டும்?
2. வாசலில் எவ்வாறு கோலமிடுவர்?
3. யோகாசனத்தை எப்படிச் செய்வர்?
4. சிலம்பக் கலையைக் கற்பது எதற்கு?

**சொற்களஞ்சியம்**

- கோலம்
- சிலம்பம்
- யோகாசனம்
- கலை
- ஆரோக்கியம்

வீட்டில் இருந்தபடியே பல கலைகள் கற்க என்ன செய்யலாம்?

1.5.4 - ஏன், எப்படி, எவ்வாறு, எதற்கு எனும் கேள்விகளுக்கேற்பப் பதில் கூறுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- கொடுக்கப்பட்ட கலைகளைப் பற்றி உரையாடச் செய்தல்.
- வினாக்களுக்கு ஏற்ற விடைகளைக் கூறச் செய்தல்.
- குழு முறையில் வினாச் சொற்களைப் பயன்படுத்திக் கேள்விகள் கேட்டு விடையளிக்கப் பணித்தல்.

**வி.வ.கூ:** உலகளாவிய நிலைத்தன்மை **உ.சி.தி:** சூழலமைவுக் கற்றல் **21 ஆம் நூற்றாண்டு:** தகவல் நிறைந்தவர்

நடவடிக்கை நூல் 1 பக்கம் : 14



KPM

# பாடம் 2 பரதக் கலை

## வாசித்து அறிக.



நடனக் கலையில் மிகவும் தொன்மையானது பரதக் கலையே. பழந்தமிழர்கள் இக்கலையைக் கூத்து என்று அழைத்தனர்.

பரத நாட்டியத்தில் அபிநயம் மிக முக்கியமானதாகும். பாடலில் கூறப்பட்ட கருத்துகளை முகத்திலும் அங்க அசைவுகளின் மூலமும் காண்பிப்பர். இதையே அபிநயம் என்பர். கைகளால் காட்டப்படும் அசைவுகளை முத்திரை என்பார்கள்.

வண்டின் உருவம், கிளியின் உருவம், அன்னப்பறவையின் உருவம், நாகப்பாம்பின் உருவம், மானின் உருவம், நீந்தும் மீனின் உருவம் போன்றவை மிகவும் பிரசித்திப் பெற்ற முத்திரைகளாகும்.

பரத நாட்டியத்தை முறையாகக் கற்றுக்கொள்ள வேண்டும். கற்ற கலையை முறை பிறழாமல் பலர் முன்னிலையில் படைக்க வேண்டும். இதனையே அரங்கேற்றம் என்பார்கள். அரங்கேற்றம் என்பது ஒருவர் பரதக் கலையில் தேர்ச்சி பெற்றவர் என்பதற்கு அங்கீகாரம் வழங்கும் நிகழ்ச்சியாகும்.

இக்கலை, சிந்தனையைச் சிதறவிடாமல் மனத்தை ஒரு நிலைப்படுத்தும். மேலும், சிறந்த உடற்பயிற்சியும் மகிழ்வும் ஆகும். தமிழர்களின் பாரம்பரியக் கலையான இது மன உளைச்சலையும் போக்கும் வல்லமை பெற்றது எனலாம்.

அருமையும் பெருமையும் பெற்ற இந்நாட்டியம் உலக மக்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றுப் பிரபலமாகி வருகிறது.

**சொற்களஞ்சியம்**
- தொன்மையான
- அபிநயம்
- முத்திரைகள்
- அங்கீகாரம்
- அரங்கேற்றம்

2.6.2 - கலை தொடர்பான உரைநடைப் பகுதியை வாசித்துக் கருத்துணர் கேள்விகளுக்குப் பதிலளிப்பர்.


**ஆசிரியர் குறிப்பு**
- உரைநடைப் பகுதியைப் பிழையற வாசிக்கப் பணித்தல்.
- பத்தியில் கூறப்பட்ட முக்கியக் கருத்துகள் பற்றி உரையாடச் செய்தல்.
- வாய்மொழியாகக் கேள்விகள் கேட்கப் பணித்தல்.

**வி.வ.கூ:** சுற்றுச்சூழல் நிலைத்தன்மையைப் பராமரித்தல் **உ.சி.தி:** ஆக்கச் சிந்தனை **21 ஆம் நூற்றாண்டு:** சிந்தனையாளர்

நடவடிக்கை நூல் 1 பக்கம் : 15-16

# பாடம் 3 கதம்ப மாலை

## வாசித்து எழுதுக.




- மேடை அலங்காரம் செய்தனர்.
- குத்து விளக்கு ஏற்றப்பட்டது.
- நடனமணிகள் கோலாட்டம் ஆடினர்.
- விளக்கு நடனம் மனத்தைக் கவர்ந்தது.
- கலாச்சார உடைகள் அணியும் போட்டி நடைபெற்றது.
- வண்ண விளக்குகள் மண்டபத்தை அலங்கரித்தன.
- பரிசளிப்பு நிகழ்ச்சி நடைபெற்றது.
- பிரமுகருக்கு மலர் மாலை அணிவித்தனர்.
- கலை நிகழ்ச்சி இனிதே முடிவுற்றது.
- மன மகிழ்ச்சியுடன் எல்லாரும் இல்லம் திரும்பினர்.

### தகவல் களம்

**கலை** - நுணுக்கமான திறன்
**கழை** - மூங்கில் குழாய்
**களை** - பயிர் அல்லாத தாவரங்கள்

3.3.25 - லகர, ழகர, ளகர எழுத்துகளைக் கொண்ட சொற்றொடர்களை உருவாக்கி எழுதுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- தொடர்படங்களைப் பார்த்து உரையாடப் பணித்தல்.
- சொற்றொடர்களை வாசித்து அறியச் செய்தல்.
- லகர, ழகர, ளகர எழுத்துச் சொற்றொடர்களை வாசிக்கப் பணித்தல்.

**வி.வ.கூ:** சுற்றுச்சூழல் நிலைத்தன்மையைப் பராமரித்தல்
**உ.சி.தி:** சூழலமைவுக் கற்றல்
**21 ஆம் நூற்றாண்டு:** நிலைத்தன்மையைக் குழுவாகச் செயல்படுதல்

நடவடிக்கை நூல் I பக்கம் : 17-19

## பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

### இணைமொழியையும் பொருளையும் அறிக.




### இணைமொழியும் பொருளும்

**ஆடை அணிகலன்**

- உடையும் ஆபரணமும்

4.4.3 - மூன்றாம் ஆண்டுக்கான இணைமொழிகளையும் அவற்றின் பொருளையும் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- உரையாடலைப் பாகமேற்று வாசிக்கப் பணித்தல்.
- இணைமொழியையும் பொருளையும் வாசித்து அறியச் செய்தல்.
- இணைமொழிக்குப் பொருத்தமான வாக்கியங்களை அமைக்கப் பணித்தல்.

நடவடிக்கை நூல் பக்கம் : 20

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** கட்டுவியம் **21 ஆம் நூற்றாண்டு:** கொள்கையுள்ளவர்

## பாடம் 5 இலக்கணம்

### காலப்பெயர் அறிக.




**காலப்பெயர்** : காலத்தைக் குறிப்பது
**எடுத்துக்காட்டு** : மாலை, கோடை, வாரம், புதன், மாதம்

- **கோடை காலத்தில்** வெயில் கடுமையாக இருந்தது.
- சென்ற **மாதம்** நாங்கள் வெளியூர் சென்றோம்.
- **பொதுவிடுமுறையின்** போது சாலையில் வாகனங்கள் அதிகமாகச் சென்றன.
- ஒவ்வொரு **வெள்ளிக்கிழமையன்றும்** நாங்கள் சிறப்பு வகுப்பிற்குச் செல்வோம்.

### தகவல் களம்

**ஒரு நாளின் ஆறு சிறுபொழுதுகள்**

- வைகறை 2:00 a.m. - 6:00 a.m.
- காலை 6:00 a.m. - 10:00 a.m.
- நண்பகல் 10:00 a.m. - 2:00 p.m.
- மதியம்/ஏற்பாடு 2:00 p.m. - 6:00 p.m.
- பிற்பகல்/மாலை 6:00 p.m. - 10:00 p.m.
- யாமம் 10:00 p.m. - 2:00 a.m.

5.3.13 - காலப்பெயர் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- உரையாடலைப் பாகமேற்று வாசிக்கச் செய்தல்.
- வாக்கியங்களை வாசிக்கப் பணித்தல்.
- காலப்பெயர்களை வாசித்துப் பட்டியலிடப் பணித்தல்.

**வி.வ.கூ:** மொழி **உ.சி.தி:** சூழலமைவுக் கற்றல் **21 ஆம் நூற்றாண்டு:** அறியும் ஆர்வம்

நடவடிக்கை நூல் 1 பக்கம் : 21-23


# தொகுதி 4 சுகாதாரம்

## பாடம் 1 நலம் பேணுவோம்

### வினாக்களைக் கேட்டு உரையாடுக.



ஏன்



எதற்கு




உடல் நலத்தைப் பற்றி அக்கறை கொள்ளாத உன் நண்பனை எப்படி உணர வைப்பாய்?



எப்படி



எவ்வாறு



ஆறு மாதத்திற்கு ஒருமுறை மருத்துவப் பரிசோதனை செய்வது மிகச் சிறந்தது.

1.6.4 - ஏன், எப்படி, எவ்வாறு, எதற்கு எனும் வினாச் சொற்களைச் சரியாகப் பயன்படுத்திக் கேள்விகள் கேட்பர்.

**ஆசிரியர் குறிப்பு**


- படங்களைப் பார்த்து உரையாடப் பணித்தல்.
- படங்களுக்குப் பொருத்தமான வினாச் சொற்களைப் பயன்படுத்திக் கேள்விகள் கேட்கச் செய்தல்.
- சுயமாக வினாக்களைத் தயாரித்துக் கேட்கப் பணித்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** மதிப்பிடுதல் **21 ஆம் நூற்றாண்டு:** கொள்கையுள்ளவர்

நடவடிக்கை நூல் 1 பக்கம் : 24

# பாடம் 2 உணவுப் பழக்கம்

## செய்தியை வாசித்து அறிக.




ஆயர் தாவார், 16 மே-
வள்ளுவர் தமிழ்ப்பள்ளியில் உடல் பருமன் பற்றிய கருத்தரங்கு ஒன்று நடைபெற்றது. அண்மைக் காலமாக மாணவர்களிடையே ஏற்படும் உடல் பருமன் பற்றியும் அதன் விளைவுகள் பற்றியும் இக்கருத்தரங்கில் பேசப்பட்டது.

இக்கருத்தரங்கு சுகாதார அமைச்சின் ஆதரவில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. உடல் பருமன் என்பது நோயல்ல என்றாலும், பல வகையில் மாணவர்களுக்குப் பாதிப்புகளைத் தருகின்றது எனக் கூறப்பட்டது.

உடல் பருமனாக இருக்கும் மாணவர்கள் விரைவில் சோர்வு அடைவர். மேலும், சுவாசக் கோளாறு, வாத நோய், முதுகுத் தண்டு வலி என பல இன்னல்களைச் சந்திக்கின்றனர். இக்கருத்தரங்கில் மாணவர்கள் மட்டுமன்றிப் பெற்றோர்களும் கலந்து பயனடைந்தனர்.

மாணவர்களின் உணவுப் பழக்கத்தைச் சீராக்குவதில் பெற்றோர் பெரும் பங்காற்ற வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டது.

இந்நிகழ்ச்சி மாணவர்களிடையேயும் பெற்றோர்களிடையேயும் விழிப்புணர்வை ஏற்படுத்தியது.

**சொற்களஞ்சியம்**

- கருத்தரங்கு
- பாதிப்பு
- இன்னல்
- சீராக்குவதில்
- விழிப்புணர்வு

2.3.5 - செய்தியைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப வாசிப்பர்.

**ஆசிரியர் குறிப்பு**


- செய்தியைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் வாசிக்கச் செய்தல்.
- செய்தியில் கூறப்பட்ட விவரங்களைப் பற்றி உரையாடச் செய்தல்.
- வாய்மொழியாகக் கேள்விகள் கேட்டு உரையாடப் பணித்தல்.

நடவடிக்கை நூல் பக்கம் : 25

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** ஆய்வுச் சிந்தனை **21 ஆம் நூற்றாண்டு:** அறியும் ஆர்வம்

## பாடம் 3 சுகமான வாழ்வு

### சொற்களை வாசித்து எழுதுக.




3.3.28 - அடிச்சொல்லைக் கொண்டு சொற்களை உருவாக்கி எழுதுவர்.

**ஆசிரியர் குறிப்பு**


- அடிச்சொற்களை வாசிக்கப் பணித்தல்.
- அடிச்சொற்களைக் கண்டறியும் முறையை அறியச் செய்தல்.
- வேறு அடிச்சொற்களை மாணவர்கள் உருவாக்கிக் கூறப் பணித்தல்.

**வி.வ.கூ:** மொழி **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21 ஆம் நூற்றாண்டு:** தகவல் நிறைந்தவர்

நடவடிக்கை நூல் 1 பக்கம் : 26

# பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

## பழமொழியையும் பொருளையும் அறிக.




வகுப்பு மாணவர்கள் அனைவரும் திரட்டேடு தயாரிப்பதில் மும்முரம் காட்டினர். தயாளன் மட்டும் ஆழ்ந்து யோசித்துக் கொண்டிருந்தான். குழப்பங்கள் பல அவனை ஆட்கொண்டன.

அருகில் அமர்ந்திருந்த தேன்மொழியிடம் தன் சந்தேகத்தைக் கேட்டான். ஆனால், தேன்மொழியோ சட்டென முகத்தைச் சுளித்துக் கொண்டு தன் வேலையில் ஈடுபட்டாள்.

சில நிமிடங்களுக்குப் பிறகு தயாளன் தன்னைத் தைரியப்படுத்திக் கொண்டான். வகுப்பறையின் முன் சென்றான். தனக்கு ஏற்பட்ட சந்தேகங்களை ஆசிரியரிடம் கேட்டான். தயாளனின் தைரியத்தை ஆசிரியர் பாராட்டினார். அவன் குழப்பங்களுக்கும் சந்தேகங்களுக்கும் தெளிவான விளக்கம் கொடுத்தார் ஆசிரியர். தனக்கு வேண்டிய தெளிவைப் பெற்றுக் கொண்ட தயாளன் சிறப்பான திரட்டேடு ஒன்றனைத் தயாரித்தான். அவன் முயற்சியை ஆசிரியர் வெகுவாகப் பாராட்டினார்.

### பழமொழியும் பொருளும்

**அழுத பிள்ளை பால் குடிக்கும்.**

- ஒவ்வொருவரும் தமக்கு வேண்டியவற்றைப் பெற்றுக்கொள்ள தாமே முயற்சி செய்ய வேண்டும்.

4.7.3 - மூன்றாம் ஆண்டுக்கான பழமொழிகளையும் அவற்றின் பொருளையும் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.


**ஆசிரியர் குறிப்பு**

- வாசிப்புப் பகுதியை வாசித்து அறியப் பணித்தல்.
- பழமொழியையும் பொருளையும் விளங்கிக் கொள்ளப் பணித்தல்.
- பழமொழிக்கு ஏற்ப ஒரு சூழலை மாணவர்கள் உருவாக்கிக் கூறப் பணித்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21 ஆம் நூற்றாண்டு:** அன்பானவர்/ பரிவுள்ளவர்

# பாடம் 5 இலக்கணம்

## சினைப்பெயர் அறிக.




**சினைப்பெயர்** : ஒரு பொருளின் பகுதிகளை அல்லது உறுப்புகளைக் குறிப்பது

**எடுத்துக்காட்டு** : கிளை, பழம், இலை, தலை, வால்

- பழங்கள் உண்ணுவது சிறந்த பழக்கமாகும்.
- கிளியின் அலகு வளைந்து இருக்கும்.
- காற்றில் மரக் கிளைகள் அசைந்தன.
- தம்பி கை, கால்களை நீட்டி உடற்பயிற்சி செய்தான்.
- குழந்தையின் கண்களைப் பார்த்து இரசித்தேன்.
- பறவை சிறகை விரித்துப் பறந்தது.
- தங்கை பாடலுக்கு ஏற்ப தலையை அசைத்தாள்.
- மீன்களின் உடலில் செதில்கள் உள்ளன.
- குரங்கின் வால் நீளமாக இருக்கும்.

**தகவல் களம்**

**ஐம்பொறி**
- மெய்
- வாய்
- கண்
- மூக்கு
- செவி

5.3.14 - சினைப்பெயர் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

**ஆசிரியர் குறிப்பு**
- உரையாடலைப் பாகமேற்று வாசிக்கப் பணித்தல்
- கொடுக்கப்பட்ட வாக்கியங்களை வாசித்துச் சினைப்பெயரை அறியச் செய்தல்.
- சுயமாகச் சினைப்பெயர்களை வரிபடத்தில் எழுதப் பணித்தல்.

**வி.வ.கூ:** மொழி **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21 ஆம் நூற்றாண்டு:** அறியும் ஆர்வம்


நடவடிக்கை நூல் I பக்கம் : 28


KPM

## தொகுதி 5 சுற்றுச்சூழல்

### பாடம் 1 இனிய உலகம்

படத்தைப் பார்த்துக் கலந்துரையாடுக.






உன் பள்ளிச் சுற்றுச் சூழலை அழகுபடுத்த என்ன செய்வாய்?

1.7.7 - தனிப்படத்தையொட்டி பொருத்தமான சொல், சொற்றொடர், வாக்கியம் ஆகியவற்றைப் பயன்படுத்திப் பேசுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- தனிப்படத்தைப் பார்த்து உரையாடப் பணித்தல்.
- தனிப்படத்தை அடிப்படையாகக் கொண்டு பொருத்தமான சொல், சொற்றொடர், வாக்கியம் ஆகியவற்றை உருவாக்கச் செய்தல்.

**வி.வ.கூ:** சுற்றுச்சூழல் நிலைத்தன்மையைப் பராமரித்தல் **உ.சி.தி:** ஆய்வுச் சிந்தனை **21 ஆம் நூற்றாண்டு:** குழுவாகச் செயல்படுதல்

நடவடிக்கை நூல் 1 பக்கம் : 29


KPM

# பாடம் 2 ஒற்றுமையே வலிமை

## ஏற்றத் தொனியுடன் வாசித்திடுக.

அல்லிமலர் குடியிருப்புப் பகுதியில் வசிக்கும் பொது மக்கள் அனைவருக்கும் ஒரு நற்செய்தி. வரும் ஞாயிற்றுக்கிழமை நம் வசிப்பிடத்தைச் சுத்தம் செய்து அழகுபடுத்தும் கூட்டுப்பணி நடைபெறவுள்ளது. அந்நிகழ்ச்சியின் நிரல் பின்வருமாறு:

### நிகழ்ச்சி நிரல்

| | | |
|---|---|---|
| காலை | 9:00 மணி | - பொதுமண்டபத்தில் ஒன்று கூடுதல் |
| காலை | 9:10 மணி | - கூட்டுப்பணி ஏற்பாட்டுக் குழுத் தலைவர் விளக்க உரை |
| காலை | 9:30 மணி | - குழுவாகப் பிரித்தலும் கூட்டுப்பணி பொருள்களை வழங்குதலும் |
| காலை | 9:45 மணி | - கூட்டுப்பணி ஆரம்பம் |
| காலை | 11:00 மணி | - தேநீர் விருந்து |
| காலை | 11:20 மணி | - கூட்டுப்பணி தொடர்தல் |
| பிற்பகல் | 1:30 மணி | - நன்றியுரை |
| பிற்பகல் | 1:40 மணி | - மதிய உணவு |



பொதுமக்கள் அனைவரும் திரளாக வருகை புரிந்து நம் வசிப்பிடத்தை அழகு செய்ய ஆதரவு நல்கவும்.

**உங்களின் ஆதரவே நமது வெற்றி!**

2.3.6 - நிகழ்ச்சி நிரலைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப வாசிப்பர்.

நடவடிக்கை நூல் I பக்கம் : 30

**ஆசிரியர் குறிப்பு**

- நிகழ்ச்சி நிரலைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப வாசிக்கப் பணித்தல்.
- நிகழ்ச்சி நிரலில் கூறப்பட்ட விவரங்களை அறியச் செய்தல்.
- வாய்மொழியாகக் கேள்விகள் கேட்டு உரையாடச் செய்தல்.

**வி.வ.கூ:** ஆக்கமும் புத்தாக்கமும் **உ.சி.தி:** ஆய்வுச் சிந்தனை **21 ஆம் நூற்றாண்டு:** தொடர்பு கொள்ளும் திறன்

# பாடம் 3 எண்ணத்தின் வெற்றி

## படத்தைப் பார்த்துக் கதையை எழுதுக.




3.6.2 - 60 சொற்களில் தனிப்படத்தைக் கொண்டு கதை எழுதுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- படத்தைப் பார்த்து உரையாடப் பணித்தல்.
- குறிப்புகளைப் பயன்படுத்திக் கதையைக் கூறச் செய்தல்.

நடவடிக்கை நூல் I பக்கம் : 31-33

**வி.வ.கூ:** ஆக்கமும் புத்தாக்கமும் **உ.சி.தி:** ஆக்கச் சிந்தனை **21 ஆம் நூற்றாண்டு:** தகவல் நிறைந்தவர்

## பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

### உலகநீதியையும் பொருளையும் அறிக.



பள்ளிப்பாடங்கள் ஏதேனும் புரியாவிட்டால், உடனே நான் தேடிச் செல்வது என் அம்மாவைத்தான். மிகவும் பொறுமையாக எனக்குச் சொல்லிக் கொடுத்துப் புரிய வைப்பார். அன்றொரு நாள் எனக்குக் காய்ச்சல் கண்டது. அம்மா என் வாடிய முகத்தைப் பார்த்துத் துடித்துப் போனார்.

உடனடியாக மருத்துவரிடம் அழைத்துச் சென்றார். மருத்துவரின் மருந்துகளைவிட அம்மாவின் அன்பான கவனிப்பே என் காய்ச்சலை விரைவாகக் குணப்படுத்தியது. என்னை ஈன்றெடுத்த அன்பு அன்னையை என்றும் மறவேன்.

தீய செயல்கள் செய்பவரோடு நட்பு கொள்ளக்கூடாது என்பது என் அம்மா அடிக்கடி கூறும் அறிவுரைகளில் ஒன்றாகும். எனவே, என் அன்னையின் சொற்படி கேட்டு நடந்து வாழ்வில் வெற்றி பெறுவேன்.

**சொற்களஞ்சியம்**

- பொறுமை
- துடிதுடித்து
- கவனிப்பு
- ஈன்றெடுத்த
- சொற்படி

### உலகநீதியும் பொருளும்

**மாதாவை யொருநாளு மறக்க வேண்டாம்.**

- பெற்றெடுத்த தாயை எவ்வேளையிலும் மறந்து விடக்கூடாது.

**வஞ்சனைகள் செய்வாரோ டிணங்க வேண்டாம்.**

- தீய செயல்கள் செய்பவரோடு நட்பு கொள்ளுதல் கூடாது.

4.9.1 - மூன்றாம் ஆண்டுக்கான உலகநீதியையும் அதன் பொருளையும் அறிந்து கூறுவர்; எழுதுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- வாசிப்புப் பகுதியை வாசிக்கச் செய்தல்.
- உலகநீதியையும் பொருளையும் வாசித்து அறியச் செய்தல்.
- உலகநீதியையும் பொருளையும் மனனம் செய்து கூறப் பணித்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** சீர்தூக்கிப் பார்த்தல் **21 ஆம் நூற்றாண்டு:** அன்பானவர்/ பரிவுள்ளவர்

# பாடம் 5 இலக்கணம்

## பண்புப்பெயரை அறிக.




**பண்புப்பெயர்** : குணத்தை அல்லது பண்பைக் குறிப்பது.
**எடுத்துக்காட்டு** : அன்பு, பரிவு, பசுமை, கருமை.

- கருமை நிறக் காகம் கரைந்தது.
- தென்னை மரம் உயரமாக வளர்ந்தது.
- பெற்றோர் மிகவும் அன்பானவர்கள்.
- இயலாதவர்களிடம் பரிவு காட்ட வேண்டும்.
- பட்டுத் துணி மென்மையாக இருக்கும்.
- பள்ளித் திடலில் பசுமையான புற்கள் வளர்ந்திருந்தன.
- குட்டையான வாழை மரம் குலை தள்ளியது.

### தகவல் களம்

**பண்புப்பெயர்கள்**
- அளவு : குட்டை
- நிறம் : நீலம்
- குணம் : கருணை
- வடிவம் : நீள் உருளை
- சுவை : இனிப்பு

5.3.15 - பண்புப்பெயர் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

**ஆசிரியர் குறிப்பு**
- உரையாடலைப் பாகமேற்று வாசிக்கச் செய்தல்.
- வாக்கியங்களை வாசித்து அறியச் செய்தல்.
- பண்புப்பெயரைத் தெரிவு செய்து கூறப் பணித்தல்.


**வி.வ.கூ:** மொழி **உ.சி.தி:** ஆய்வுச் சிந்தனை **21 ஆம் நூற்றாண்டு:** அறியும் ஆர்வம்

நடவடிக்கை நூல் பக்கம் : 35-36

# தொகுதி 6 போக்குவரத்து

## பாடம் 1 எங்கள் பயணம்

### திசைகளைக் கூறிக் கலந்துரையாடுக.




எந்தெந்த நடவடிக்கைகளுக்குத் திசைகாட்டி தேவைப்படுகிறது?

1.7.8 - திசைகளின் பெயர்களை வாக்கியங்களில் சரியாகப் பயன்படுத்திப் பேசுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- திசைகளின் பெயர்களை வாசித்துக் கூறச் செய்தல்.
- திசைகளின் பெயர்களைப் பயன்படுத்தி வாக்கியங்கள் அமைக்கப் பணித்தல்.
- படங்களைத் தொடர்புபடுத்தித் திசைகளைக் கூறப் பணித்தல்.

**வி.வ.கூ:** அறிவியலும் தொழில்நுட்பமும் **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21 ஆம் நூற்றாண்டு:** அறியும் ஆர்வம்

நடவடிக்கை நூல் I பக்கம் : 37-38

# பாடம் 2 பொதுப் போக்குவரத்து



## வாசித்து அறிக.

நீர்வழி, வான்வழி, தரைவழிப் போக்குவரத்துச் சாதனங்கள் நல்ல வளர்ச்சியை அடைந்துள்ளன. பேருந்து, தொடர்வண்டி, இலகு இரயில் ஆகியவை பொதுப் போக்குவரத்துச் சாதனங்களாகும். இவை தரைவழிப் போக்குவரத்துச் சாதனங்களாகப் புகழ் பெற்றுள்ளன.

துரித மேம்பாடுகளைக் கண்டு வரும் பல நாடுகளில் நம் நாடும் ஒன்றாகும். இங்குப் பொதுப்போக்குவரத்துச் சாதனங்கள் துரித வளர்ச்சி கண்டு வருகின்றன. பொதுப் போக்குவரத்துச் சாதனங்கள் மக்களுக்குப் பல நன்மைகளை அளிக்கின்றன. குறைந்த விலையில் மக்கள் பயணச் சீட்டுகளை வாங்கிப் பயணிக்கலாம். மேலும், நிறைவான சேவையையும் பெறலாம்.

சிறந்த போக்குவரத்து வசதிகள், மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துகின்றன. இதனால், மக்களிடையே விவேக சிந்தனையும் உருவாகின்றது. பட்டணங்களில் வாழும் மக்களுக்குப் பொதுப் போக்குவரத்துச் சாதனங்கள் அனைத்தும் உயிர்நாடியாய் உலா வருகின்றன. இதன் மூலம் பயணிகள் நேரத்தைச் சிக்கனப்படுத்துகின்றனர். மேலும், வாகன நெரிசலிலிருந்தும் விடைபெறுகின்றனர்.

சொந்த வாகனங்களை நிறுத்துவதற்காகவும் பயனீட்டாளர்கள் குறிப்பிட்ட கட்டணத்தைச் செலவழிக்கின்றனர். பயனீட்டாளர் பொதுப் போக்குவரத்துகளைப் பயன்படுத்தினால் இச்செலவைக் குறைக்கலாம். உணவிற்கு அடுத்ததாக மக்கள் அதிகம் செலவழிப்பது போக்குவரத்துக்காகவே. எனவே, முற்போக்குச் சிந்தனையுடன் செயல்பட்டுப் பொதுப் போக்குவரத்தைப் பயன்படுத்திப் பலனடைய வேண்டும்.

### சொற்களஞ்சியம்

- சாதனங்கள்
- துரித
- பயணச் சீட்டு
- பயனீட்டாளர்
- செயல்பட்டு

2.4.6 - பத்தியை வாசித்துப் புரிந்து கொள்வர்.

**ஆசிரியர் குறிப்பு**

- வாசிப்புப் பகுதியை வாசிக்கப் பணித்தல்.
- வாசிப்புப் பகுதியில் கூறப்பட்ட கருத்துகளை விளக்கப் பணித்தல்.
- வாய்மொழியாகக் கருத்துணர் கேள்விகளுக்கு விடையளிக்கப் பணித்தல்.

**வி.வ.கூ:** அறிவியலும் தொழில்நுட்பமும் **உ.சி.தி:** சீர்தூக்கிப் பார்த்தல் **21 ஆம் நூற்றாண்டு:** சிந்தனையாளர்

நடவடிக்கை நூல் I பக்கம் : 39-40

# பாடம் 3 திரட்டேடு

## வாசித்துக் கோவையாக எழுதுக.

- நாங்கள் குழுவில் அமர்ந்து உரையாடினோம்.
- அப்பாவின் துணையுடன் படங்களையும் குறிப்புகளையும் தரவிறக்கம் செய்தேன்.
- ஆசிரியர் போக்குவரத்துச் சாதனங்கள் எனும் தலைப்பில் பாடம் நடத்தினார்.
- படங்கள், குறிப்புகள் அனைத்தையும் அப்பா நகலெடுத்துக் கொடுத்தார்.
- குழு முறையில் உரையாடி திரட்டேடு செய்ய ஆசிரியர் பணித்தார்.
- போக்குவரத்துச் சாதனங்களையும் அவற்றின் முன்னேற்றங்களையும் ஆசிரியர் விளக்கினார்.
- திரட்டேடு செய்யும் வேலைகளை உரையாடிப் பகிர்ந்து கொண்டோம்.
- மறுநாள் திரட்டேடு செய்வதற்கான எல்லாப் பொருள்களையும் தயார்படுத்திக் கொண்டேன்.
- வீட்டிற்குச் சென்றபின் இணையத்தில் போக்குவரத்துச் சாதனங்களின் படங்களைத் தேடினேன்.
- தரைப் போக்குவரத்துச் சாதனங்களின் படங்களைத் தேடும் பணியை நான் ஏற்றுக் கொண்டேன்.




3.5.2 - வாக்கியங்களைக் கோவையாக எழுதுவர்.

**ஆசிரியர் குறிப்பு**


- வாக்கியங்களைக் கோவையாக்கிக் கூறப் பணித்தல்.
- நிரல்படுத்திய வாக்கியங்களைக் கோவையாக எழுதப் பணித்தல்.
- வாக்கியங்களைச் சரியாக வாசிக்கச் செய்தல்.

**வி.வ.கூ:** ஆக்கமும் புத்தாக்கமும் **உ.சி.தி:** பயன்படுத்துதல் **21ஆம் நூற்றாண்டு:** குழுவாகச் செயல்படுதல்

நூல் | பக்கம் : 41-42

## பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

### திருக்குறளையும் பொருளையும் அறிக.



எண் 6, ஜாலான் மெலோர்,
88000 கோத்தா கினபாலு,
சபா.
25.05.2019

அன்புத் தோழி கனிமொழிக்கு,

வணக்கம். நாங்கள் இங்கு நலம். நீயும் உன் குடும்பத்தினரும் நலமாக இருக்க இறைவனை வேண்டுகிறேன். நாங்கள் தீபகற்ப மலேசியாவிலிருந்து சபா மாநிலத்திற்கு மாற்றலாகி வந்து ஒரு சில வருடங்கள் ஆகிவிட்டன. என் பெற்றோர் சொந்தத் தொழில் செய்பவர்கள் என்றும், கடின உழைப்பாளிகள் என்றும் உனக்குத் தெரியும். அவர்களின் விடாமுயற்சியால் மட்டுமே எங்களுக்குப் பல வசதிகளும் செல்வமும் பெருகின.

சென்ற வாரம் கூட என் அப்பா மேலும் ஒரு புதிய சுற்றுலாப் பேருந்தை வாங்கினார். இந்த மகிழ்ச்சியை உன்னிடம் பகிர்ந்து கொள்ளவே இக்கடிதத்தை எழுதுகிறேன். முயற்சி இல்லாமல் வாழ்ந்தால் ஒருவர் நிச்சயம் வறுமையில்தான் தள்ளப்படுவார் என்று அப்பா அடிக்கடி கூறுவார். அவரின் அயராத உழைப்பே நாங்கள் கல்வியில் வெற்றிபெற உந்துதலாக இருக்கிறது.

எதிர்வரும் பள்ளி விடுமுறையில் நீ ஒரு முறை இங்கு வருவாய் எனப் பெரிதும் எதிர்பார்க்கிறேன். இத்துடன் விடைபெறுகிறேன், நன்றி.

தங்களன்புள்ள,
*தாமரை*



### திருக்குறளும் பொருளும்

**முயற்சி திருவினை யாக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும். (616)**

- முயற்சி ஒருவனுக்குச் செல்வத்தைப் பெருகச்செய்யும்; முயற்சி இல்லாமை அவனை வறுமையில் தள்ளிவிடும்.

4.3.3 - மூன்றாம் ஆண்டுக்கான திருக்குறளையும் அதன் பொருளையும் அறிந்து கூறுவர்; எழுதுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- கடிதத்தை வாசித்துப் புரிந்து கொள்ளச் செய்தல்.
- திருக்குறளையும் பொருளையும் வாசித்து அறியச் செய்தல்.
- திருக்குறளையும் பொருளையும் மனனம் செய்து கூறப் பணித்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** ஆக்கச் சிந்தனை **21 ஆம் நூற்றாண்டு:** கொள்கையுள்ளவர்

நடவடிக்கை நூல் 1 பக்கம் : 43

## பாடம் 5 இலக்கணம்

### தொழிற்பெயர் அறிக.




**தொழிற்பெயர்** : தொழிலைக் குறிப்பது.
**எடுத்துக்காட்டு** : படிப்பு, ஏற்றுமதி, விளையாடுதல், கற்பித்தல்.

- வீட்டை அழகுபடுத்துதல் அம்மாவின் அன்றாட நடவடிக்கையாகும்.
- பாரம்பரிய உணவு சமைத்தல் பாட்டிக்குப் பிடித்த மகிழியாகும்.
- குழந்தைக் கவிதைகள் வாசித்தல் என்பது தம்பிக்குப் பிடித்த நடவடிக்கையாகும்.
- நாட்டுப்புறப் பாடல்களைப் பாடுதல் தாத்தாவிற்குப் பிடித்த செயலாகும்.
- மறுபயனீட்டுப் பொருள்களின் மூலம் புதிய பொருள் உருவாக்குதல் பள்ளி மாணவர்களுக்கு மிகவும் பயனளிக்கும்.

5.3.16 - தொழிற்பெயர் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

**ஆசிரியர் குறிப்பு**
- உரையாடலைப் பாகமேற்று வாசிக்கப் பணித்தல்.
- தொழிற்பெயர்களை வாசிக்கச் செய்தல்.
- மாணவர்கள் சில தொழிற்பெயர்களை வாக்கியங்களில் கூறப் பணித்தல்.

நடவடிக்கை நூல் பக்கம் : 44

**வி.வ.கூ:** மொழி **உ.சி.தி:** சிந்தனை வியூகம் **21 ஆம் நூற்றாண்டு:** அறியும் ஆர்வம்


# தொகுதி 7 உணவு

## பாடம் 1 பழங்களைச் சுவைப்போம்

### தொகுதிப் பெயர்களை அறிந்து பேசுக.

1


சிவா கொத்துக் கொத்தாய்ப் பறித்த ரம்புத்தான் பழத்தைச் சந்தைக்குக் கொண்டு வந்தார்.

2


கோமகன் குலை குலையாய்க் காய்த்திருந்த திராட்சைப் பழங்களைப் பார்த்து மகிழ்ந்தார்.

3


முத்தழகி முத்துப் போல இருந்த முற்றிய சோளக் கதிர்களை வாங்கி வந்தாள்.

4


சிவகாமி சீப்புச் சீப்பாய் செவ்வாழைப் பழங்களைச் சிரித்துக் கொண்டே விற்றாள்.

5


மருதன் வயல் ஓரமாக வளர்ந்த வாழை மரத்தில் வாழைத்தார் ஒன்றை வெட்டினார்.

**தகவல் களம்**

**முக்கனிகள்**
- மா
- பலா
- வாழை

1.7.9 - தார், சீப்பு, குலை, கொத்து, கதிர் ஆகிய தொகுதிப் பெயர்களை வாக்கியங்களில் சரியாகப் பயன்படுத்திப் பேசுவர்.

**ஆசிரியர் குறிப்பு**
- பகுதியை வாசித்துத் தொகுதிப் பெயர்களை அறியச் செய்தல்.
- மாணவர்கள் தொகுதிப் பெயர்களைக் கொண்டு சுயமான வாக்கியங்கள் அமைக்கப் பணித்தல்.

நடவடிக்கை நூல் 1 பக்கம் : 45

**வி.வ.கூ:** சுற்றுச்சூழல் நிலைத்தன்மையைப் பராமரித்தல் **உ.சி.தி:** ஆக்கச் சிந்தனை **21 ஆம் நூற்றாண்டு:** சிந்தனையாளர்

# பாடம் 2 சுவையோ சுவை

## வாசித்து அறிக.

தமிழர் பண்பாடு அறிவியல் பூர்வமானது. அவர்களின் உணவு முறைகளும் அப்படியே! வாழையிலையில் உணவு பரிமாறும் முறை தகுந்த சான்றாகும்!



உண்ணும் உணவு முறைகளை உண்பன, தின்பன, கொறிப்பன, நக்குவன, பருகுவன என ஐந்து வகையாகப் பிரித்துக் கூறப்படுகின்றன. பருகுவன என்பதில் பானகம், பாயசம், கஞ்சி, கூழ் ஆகியனவும் அடங்கும். மேலும், சிற்றுண்டிப் பண்டங்களான தோசை, இட்லி முதலியன தின்பன வரிசையில் கூறப்படுகின்றன.

மொழியைச் சுவைத்து அறியும் பொருட்டு உணவின் சுவைகள்கூட அறுசுவையெனப் பிரித்துக் கூறப்படுகின்றன. அவை கசப்பு, புளிப்பு, துவர்ப்பு, உறைப்பு, கரிப்பு, இனிப்பு என்பனவாகும். சோறு எனும் சொல்லுக்கு ஒரே பொருள் தரும் சொற்களாக அடிசில், அழினி, கூழ், அவிழ், கொன்றி, நிமிரல், புழுங்கல், பொம்மன், மிதவை எனப் பல சொற்களைக் கூறலாம்.

உணவுப் பெயர்களும் உண்ணும் முறைகளும் இவ்வாறு பல சொற்களைக் கொண்டு அழைக்கப்படுவது தமிழ்மொழிக்கு மேலும் சிறப்பை அளிக்கின்றது என்றால் அது மிகையாகாது.

**சொற்களஞ்சியம்**

- சான்றானது
- பானகம்
- அறுசுவை
- பொங்கப்பட்ட
- மிகையாகாது

2.6.3 - மொழி தொடர்பான உரைநடைப் பகுதியை வாசித்துக் கருத்துணர் கேள்விகளுக்குப் பதிலளிப்பர்.

நடவடிக்கை நூல் I பக்கம் : 46

**ஆசிரியர் குறிப்பு**

- வாசிப்புப் பகுதியை வாசிக்கப் பணித்தல்.
- வாசிப்புப் பகுதியில் கூறப்பட்ட கருத்துகளை அறிந்து கூறச் செய்தல்.
- வாய்மொழியான கேள்விகளுக்கும் கருத்துணர் கேள்விகளுக்கும் விடையளிக்கப் பணித்தல்.

**வி.வ.கூ:** உலகளாவிய நிலைத்தன்மை **உ.சி.தி:** சீர்தூக்கிப் பார்த்தல் **21 ஆம் நூற்றாண்டு:** அறியும் ஆர்வம்

# பாடம் 3 எங்கள் கொண்டாட்டம்

## வாசித்து எழுதுக.

1



- அம்மா நெய் உருண்டை செய்தார்.
- பாட்டி பருப்பு வடையை பொரித்தார்.
- அத்தை முந்திரிப் பருப்புகளைக் கேசரியில் போட்டார்.

2

- அண்ணன் காரமுறுக்குப் பிழிந்தார்.
- தங்கை காய்கறிகளைச் சுத்தம் செய்தாள்.
- அக்காள் அரிசிமாவைப் பிசைந்தாள்.



3



- சென்ற வாரம் நண்பர்கள் வந்தனர்.
- தாரணி மீன்குழம்பு சமைத்தாள்.
- அனைவரும் உணவை விரும்பி உண்டோம்.

3.3.26 - ரகர, றகர எழுத்துகளைக் கொண்ட சொற்றொடர்களை உருவாக்கி எழுதுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- வாக்கியங்களை வாசித்து ரகர, றகர எழுத்துகளை அறியச் செய்தல்.
- ரகர, றகர எழுத்துகள் கொண்ட சொற்றொடர்களை அறியச் செய்தல்.
- ரகர, றகர எழுத்துச் சொற்றொடர்களை மாணவர்கள் உருவாக்கிக் கூறப் பணித்தல்.

**வி.வ.கூ:** ஆக்கமும் புத்தாக்கமும் **உ.சி.தி:** ஆக்கச் சிந்தனை **21 ஆம் நூற்றாண்டு:** தகவல் நிறைந்தவர்

நடவடிக்கை நூல் 1 பக்கம் : 47-48

# பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

## பழமொழியையும் பொருளையும் அறிக.

New Message

To meganathan@yahoo.com

Subject இறைநம்பிக்கை

என் அருமை நண்பன் மேகநாதனுக்கு,

வணக்கம். நான் நலம். உன் நலம் அறிய ஆவல். நண்பா, நீ அனுப்பிய மின்னஞ்சல் செய்தியைப் படித்தேன். உன் இறைபக்தியை நினைத்து மிகவும் பெருமையடைகின்றேன்.

அடர்ந்த காட்டுப் பகுதியில் உன் மகிழுந்து பழுதடைந்ததும் நீ எப்படிப் பயந்து போயிருப்பாய் என்பதை என்னால் உணர முடிகிறது. அந்த இரவு நேரத்தில் தனிமையில் நீ தவித்தாய் என்பதைப் படித்தவுடன் நான் கலங்கிப் போனேன். ஆனாலும், மனதார நினைத்து வணங்கிய இறைவன் உன்னைக் கைவிடவில்லை. ஏதேதோ செய்து மீண்டும் மகிழுந்தை இயக்கிவிட்டாய். எல்லாம் அந்த இறைவனின் கருணைதான். நம்பியவர்களை இறைவன் என்றும் கைவிடுவதில்லை.

என்றென்றும் இறைவனை நம்பிச் செயல்படு.

விடைபெறுகிறேன், நன்றி.

Send

### பழமொழியும் பொருளும்

**கடவுளை நம்பினோர் கைவிடப்படார்.**

- இறைவனை நம்பி வழிபடுவோருக்கு அவர் என்றும் துணையிருப்பார்.

4.7.3 - மூன்றாம் ஆண்டுக்கான பழமொழிகளையும் அவற்றின் பொருளையும் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- மின்னஞ்சல் செய்தியைப் பிழையற வாசிக்கச் செய்தல்.
- மின்னஞ்சலில் கூறப்பட்ட பழமொழியையும் பொருளையும் வாசித்து அறியச் செய்தல்.
- பழமொழிக்கான பொருத்தமான வேறு சூழலை உருவாக்கப் பணித்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** சீர்தூக்கிப் பார்த்தல் **21 ஆம் நூற்றாண்டு:** கொள்கையுள்ளவர்

நடவடிக்கை நூல் I பக்கம் : 49

## பாடம் 5 இலக்கணம்

### தனி வாக்கியங்கள் அறிக.

ஓர் எழுவாய் அல்லது பல எழுவாய்கள் ஒரே பயனிலையைப் பெற்று வருவது தனி வாக்கியமாகும்.

**எடுத்துக்காட்டு:**



1. அம்மா உணவு பரிமாறினார்.
   அம்மா (எழுவாய்) பரிமாறினார் (பயனிலை)

2. அன்னபூரணியும் நளனும் பழங்கள் சாப்பிட்டனர்.
   அன்னபூரணியும் (எழுவாய்) நளனும் (எழுவாய்) சாப்பிட்டனர் (பயனிலை)

1

பரிமளா அழகான உடை அணிந்திருந்தாள்.

2

மதுரா தோசை வார்த்தாள்.

3

தம்பியும் தங்கையும் பரிசுகளை வென்றனர்.

4

மான்கள் கூட்டமாக ஓடின.

5.4.6 - தனி வாக்கியம் அறிந்து கூறுவர்; எழுதுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- தனி வாக்கியங்களை அறிந்து கூறச் செய்தல்.
- வாக்கியங்களைப் பிழையற வாசிக்கப் பணித்தல்.
- மாணவர்கள் சுயமாகத் தனி வாக்கியங்களை உருவாக்கிக் கூறப் பணித்தல்.


**வி.வ.கூ:** மொழி **உ.சி.தி:** ஆய்வுச் சிந்தனை **21 ஆம் நூற்றாண்டு:** சிந்தனையாளர்

நடவடிக்கை நூல் 1 பக்கம் : 50-51

## தொகுதி 8 சமூகம்

### பாடம் 1 விருந்து உபசரிப்பு

பேசி உரையாடுக.





## தகவல் களம்

**முப்படை**

- காலாட்படை
- கடற்படை
- விமானப்படை

திறந்த இல்ல உபசரிப்பினால் ஏற்படும் நன்மைகள் யாவை?

- பொது மக்கள் **கூட்டமாகத்** திறந்த இல்ல உபசரிப்பில் கலந்து கொண்டனர்.
- பல்லின மக்கள் **கும்பலாக** அமர்ந்து உணவு உண்டனர்.
- இராணுவப் **படை** வீரர்கள் நுழைவாயிலில் வரிசையாக நின்று கொண்டிருந்தனர்.
- சிறுவர்கள் ஓரிடத்தில் **குழுவாக** அமர்ந்து விளையாடினர்.
- ஆட்டு **மந்தை** அருகிலுள்ள புல்வெளியில் புற்களை மேய்ந்தது.

1.7.10 - கூட்டம், கும்பல், படை, குழு, மந்தை ஆகிய தொகுதிப் பெயர்களை வாக்கியங்களில் சரியாகப் பயன்படுத்திப் பேசுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- சூழல் படத்தைப் பார்த்து உரையாடப் பணித்தல்.
- தொகுதிப் பெயர்களை வாசித்து அறியச் செய்தல்.
- தொகுதிப் பெயர்களைப் பயன்படுத்தி வாக்கியங்கள் உருவாக்கிக் கூறப் பணித்தல்.

**வி.வ.கூ:** சுற்றுச்சூழல் நிலைத்தன்மையைப் பராமரித்தல் **உ.சி.தி:** சூழலமைவுக் கற்றல் **21 ஆம் நூற்றாண்டு:** குழுவாகச் செயல்படுதல்

நடவடிக்கை நூல் 1 பக்கம் : 52

## பாடம் 2 எங்கள் புத்தாண்டு


### வாசித்து அறிக.

அ



ஆ சியோங், லீ மெங் இருவரும் சீன சமூகத்தைச் சார்ந்தவர்கள். சீன வருடப் பிறப்பு அவர்களின் முக்கியப் பண்டிகையாகும். சீனப் புத்தாண்டை, சந்திரமறைப் புத்தாண்டு என்றும் கூறுகின்றனர்.

சீனப் புத்தாண்டுக்கு முதல் நாள் இரவு குடும்பத்தாருடன் பல வகையான உணவை உண்பார்கள். வீட்டு வாசலின் முன் இறை வழிபாடு செய்வர். சிவப்பு வண்ணத்தில் துணியைக் கட்டியும் வைப்பர். பட்டாசுகளை வெடித்து தங்களின் மகிழ்ச்சியை வெளிப்படுத்துவர். 'அங்பாவ்' கொடுத்து அன்பைப் பரிமாறிக் கொள்வர்.



சீன சமூகத்தினர், புத்தாண்டு தினத்தன்று வீட்டைக் கூட்டிப் பெருக்க மாட்டார்கள். அண்டை அயலாருக்குப் பலகாரங்களைக் கொடுத்து மகிழ்வர். இவர்களது பெருநாளில் ஆரஞ்சுப் பழம் முக்கியமாக இடம் பெறும். மற்றவர்களுக்கும் ஆரஞ்சுப் பழங்களைத் தந்து மகிழ்வார்கள். சிலர் குழந்தைக் காப்பகம், முதியோர் இல்லம் போன்ற சமூக இல்லங்களுக்குச் சென்று உணவுகளை அளிப்பர்.

திறந்த இல்ல உபசரிப்பின்வழி மற்ற இனத்தவரையும் உபசரித்து விருந்தளிப்பர். மலேசியர்களின் சிறந்த பண்பை வெளிப்படுத்தும் வகையில் இத்தகைய கொண்டாட்டங்கள் அமைகின்றன.

**சொற்களஞ்சியம்**

- சமூகம்
- இறை வழிபாடு
- பெருநாள்
- அளிப்பர்
- அயலார்

2.4.6 - பத்தியை வாசித்துப் புரிந்து கொள்வர்.

**ஆசிரியர் குறிப்பு**

- வாசிப்புப் பகுதிகளை வாசித்து அறியச் செய்தல்.
- வாசிப்புப் பகுதியில் கூறப்பட்ட கருத்துகளை மீண்டும் கூறப் பணித்தல்.
- மாணவர்களை ஏற்றத் தொனியுடன் வாசிக்கப் பணித்தல்.


**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** மதிப்பிடுதல் **21 ஆம் நூற்றாண்டு:** குழுவாகச் செயல்படுதல்

நடவடிக்கை நூல் பக்கம் : 53-54

## அறிந்து கொள்வோம்

**ஆ) அகராதியைப் பயன்படுத்தும் முறை அறிக.**

| | அ | ஆ | இ | ஈ | உ | ஊ | எ | ஏ | ஐ | ஒ | ஓ | ஔ |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| க் | க | கா | கி | கீ | கு | கூ | கெ | கே | கை | கொ | கோ | கௌ |
| ங் | ங | ஙா | ஙி | ஙீ | ஙு | ஙூ | ஙெ | ஙே | ஙை | ஙொ | ஙோ | ஙௌ |
| ச் | ச | சா | சி | சீ | சு | சூ | செ | சே | சை | சொ | சோ | சௌ |
| ஞ் | ஞ | ஞா | ஞி | ஞீ | ஞு | ஞூ | ஞெ | ஞே | ஞை | ஞொ | ஞோ | ஞௌ |
| ட் | ட | டா | டி | டீ | டு | டூ | டெ | டே | டை | டொ | டோ | டௌ |
| ண் | ண | ணா | ணி | ணீ | ணு | ணூ | ணெ | ணே | ணை | ணொ | ணோ | ணௌ |
| த் | த | தா | தி | தீ | து | தூ | தெ | தே | தை | தொ | தோ | தௌ |
| ந் | ந | நா | நி | நீ | நு | நூ | நெ | நே | நை | நொ | நோ | நௌ |
| ப் | ப | பா | பி | பீ | பு | பூ | பெ | பே | பை | பொ | போ | பௌ |
| ம் | ம | மா | மி | மீ | மு | மூ | மெ | மே | மை | மொ | மோ | மௌ |




## சொல்லும் பொருளும்

- பண் - பாடல்
- பத்தர் - பொற்கொல்லர்
- பயன் - விளைவு
- பிரயாணி - பயணி
- புதல்வன் - மகன்
- புதினம் - நாவல்
- பொழில் - சோலை

2.5.1 - தமிழ் நெடுங்கணக்கை அறிந்து அகராதியைப் பயன்படுத்துவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- தமிழ் நெடுங்கணக்கை அறியச் செய்தல்.
- மாணவர்கள் அகராதியைப் பயன்படுத்தும் முறையை அறியச் செய்தல்.
- சொற்களையும் பொருளையும் அகராதியில் பார்த்து அறியப் பணித்தல்.

**வி.வ.கூ:** மொழி **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21 ஆம் நூற்றாண்டு:** அறியும் ஆர்வம்

நடவடிக்கை நூல் 1 பக்கம் : 55-56

## பாடம் 3 சமூக நிகழ்ச்சிகள்

### சொற்றொடர்களை வாசித்து எழுதுக.

1

இரத்த தானம்

உதவி நல்கினர்

நல்லெண்ணம் வேண்டும்




உயர்ந்த எண்ணம்

நோய்க்கு மருந்து

சிறந்த தானம்

2

பண்புள்ள சமுதாயம்



மனத்தில் உறுதி

துணிவே துணை

கனிவான பேச்சு

நாளைய சமுதாயம்

மாற்றுத் திறனாளிகள்

ஊக்க மனப்பான்மை

இரத்த தானம் செய்ய நினைக்கும் ஒருவர் என்ன செய்ய வேண்டும்?

3.3.27 - ணகர, நகர, னகர எழுத்துகளைக் கொண்ட சொற்றொடர்களை உருவாக்கி எழுதுவர்.

**ஆசிரியர் குறிப்பு**
- ணகர, நகர, னகர எழுத்துகளைக் கொண்ட சொற்றொடர்களை வாசிக்கப் பணித்தல்.
- மேலும் சில சொற்றொடர்களை மாணவர்கள் உருவாக்கிக் கூறப் பணித்தல்.
- சொற்றொடர்களை அழகான கையெழுத்தில் எழுதப் பணித்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** சீர்தூக்கிப் பார்த்தல் **21 ஆம் நூற்றாண்டு:** அன்பானவர்/ பரிவுள்ளவர்

நடவடிக்கை நூல் I பக்கம் : 57

## பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

### உவமைத்தொடர்களையும் பொருளையும் அறிக.




### உவமைத்தொடரும் பொருளும்

**எலியும் பூனையும் போல**
- எப்போதும் பகைமையுணர்ச்சி கொண்டிருத்தல்.

**காந்தம் இரும்பைக் கவர்வது போல**
- ஒன்றைத் தன் வசம் கவர்ந்திழுத்தல்.

4.11.1 - மூன்றாம் ஆண்டுக்கான உவமைத்தொடர்களையும் அவற்றின் பொருளையும் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

**ஆசிரியர் குறிப்பு**
- உரையாடலைப் பாகமேற்று வாசிக்கப் பணித்தல்.
- உரையாடலில் கூறப்பட்ட உவமைத்தொடர்களையும் அவற்றின் பொருளையும் அறியச் செய்தல்.
- மாணவர்கள் உவமைத்தொடர்களுக்கு ஏற்ற வாக்கியங்கள், சூழல் உருவாக்கப் பணித்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21 ஆம் நூற்றாண்டு:** குழுவாகச் செயல்படுதல்

நடவடிக்கை நூல் 1 பக்கம் : 58

# பாடம் 5 இலக்கணம்

## காற்புள்ளி அறிக.




**காற்புள்ளி:**
சொற்களைத் தனித்தனியாகவோ அடுக்கடுக்காகவோ பிரிக்கும்போது காற்புள்ளி இட வேண்டும்.
**எடுத்துக்காட்டு:**
அறம், பொருள், இன்பம் ஆகிய முப்பாலைக் கொண்டது திருக்குறள்.

- அம்மா அணிச்சல் செய்ய மாவு, சீனி, பால், முட்டை முதலிய பொருள்களை வாங்கினார்.
- சந்தையில் கீரை, மீன், கிழங்கு வகை, பழங்கள் போன்றவற்றையும் வாங்கலாம்.
- கபிலன், கார்முகிலன், அமீர், ஆ கோங் ஆகிய நால்வரும் நல்ல நண்பர்கள்.
- என் தந்தை தமிழ், மலாய், ஆங்கிலம் ஆகிய மொழிகளைச் சரளமாகப் பேசுவார்.

5.5.3 - காற்புள்ளி அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

நடவடிக்கை நூல் பக்கம் : 59

**ஆசிரியர் குறிப்பு**
- காற்புள்ளி பயன்பாடு பற்றி விளக்கச் செய்தல்.
- வாக்கியங்களை வாசித்துக் காற்புள்ளியின் பயன்பாட்டை அறியச் செய்தல்.
- மாணவர்கள் காற்புள்ளி பயன்படுத்தும் வாக்கியங்களை உருவாக்கிக் கூறப் பணித்தல்.

**வி.வ.கூ:** மொழி **உ.சி.தி:** உருவாக்குதல் **21 ஆம் நூற்றாண்டு:** தகவல் நிறைந்தவர்


# தொகுதி 9 இயற்கை

## பாடம் 1 இன்பச் சுற்றுலா

### கலந்துரையாடுக.




இவற்றை எப்படி அழைப்போம்?



1.7.11 - தோப்பு, குவியல், கட்டு ஆகிய தொகுதிப் பெயர்களை வாக்கியங்களில் சரியாகப் பயன்படுத்திப் பேசுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- உரையாடலை வாசித்து அறியச் செய்தல்.
- தொகுதிப் பெயர்களின் பயன்பாடு உள்ள வாக்கியங்களை வாசிக்கச் செய்தல்.
- தொகுதிப் பெயர்களைப் பயன்படுத்தி மாணவர்கள் வாக்கியங்கள் உருவாக்கிக் கூறப் பணித்தல்.

**வி.வ.கூ:** சுற்றுச்சூழல் நிலைத்தன்மையைப் பராமரித்தல் **உ.சி.தி:** ஆய்வுச் சிந்தனை **21 ஆம் நூற்றாண்டு:** குழுவாகச் செயல்படுதல்

நடவடிக்கை நூல் 1 பக்கம் : 60-61

# பாடம் 2 பொருள் அறிவோம்

## எழுத்துக்கூட்டலை அறிக.

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ம் | ம | மா | மி | மீ | மு | மூ | மெ | மே | மை | மொ | மோ | மௌ |
| ய் | ய | யா | யி | யீ | யு | யூ | யெ | யே | யை | யொ | யோ | யௌ |
| ர் | ர | ரா | ரி | ரீ | ரு | ரூ | ரெ | ரே | ரை | ரொ | ரோ | ரௌ |
| ல் | ல | லா | லி | லீ | லு | லூ | லெ | லே | லை | லொ | லோ | லௌ |
| வ் | வ | வா | வி | வீ | வு | வூ | வெ | வே | வை | வொ | வோ | வௌ |
| ழ் | ழ | ழா | ழி | ழீ | ழு | ழூ | ழெ | ழே | ழை | ழொ | ழோ | ழௌ |
| ள் | ள | ளா | ளி | ளீ | ளு | ளூ | ளெ | ளே | ளை | ளொ | ளோ | ளௌ |

மடந்தை - பெண்
மாப்பு - மன்னிப்பு
மிகுதி - நிறைய
மீண்டும் - மறுபடியும்
முகிழ் - தோன்றுதல்
மூர்க்கம் - கொடூரம்
மென்னி - குரல்வளை
மேடு - உயரமான பகுதி
மைதானம் - திறந்த வெளி
மொளி - விரல் முட்டி
மோது - பலத்தோடு இடித்தல்
மௌனம் - பேசாமல் இருக்கின்ற நிலை



### சொல்லும் பொருளும்

- வழி - பாதை
- வளி - காற்று
- வாணலி - இரும்புச்சட்டி
- விரியல் - துடைப்பம்
- விசை - தடவை
- வியப்பு - ஆச்சரியம்
- வெட்கம் - நாணம்
- வேம்பு - வேப்பமரம்
- வைத்தியர் - மருத்துவர்

2.5.2 - சரியான எழுத்துக்கூட்டலை அறிய அகராதியைப் பயன்படுத்துவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- சொற்களை வாசித்து அறியச் செய்தல்.
- சொற்களின் சரியான எழுத்துக்கூட்டலை அறியச் செய்தல்.
- சொற்களை எழுத்துக்கூட்டல் பயிற்சியாக எழுதப் பணித்தல்.

நடவடிக்கை நூல் பக்கம் : 62

**வி.வ.கூ:** மொழி **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21 ஆம் நூற்றாண்டு:** அறியும் ஆர்வம்

## பாடம் 3 பசுமைத் தோட்டம்

### வாக்கியங்களை உருவாக்கி எழுதுக.




நாம் வசிக்கும் இடத்தில் பசுமைத் திட்டத்தை உருவாக்க என்ன செய்யலாம்?

- தக்காளிச் செடி செழிப்பாக வளர்ந்தது.
- மண்வெட்டி கூர்மையாக உள்ளது.
- இலையின் மேல் புழு ஒன்றைக் கண்டேன்.
- நத்தைகள் ஊர்ந்து சென்றன.
- மரங்கள் உயரமாக வளர்ந்துவிட்டன.
- கீரைகள் பாத்திகளில் நடப்பட்டன.
- தக்காளிப் பழங்கள் சிவப்பு நிறத்தில் இருந்தன.
- கத்தரிக்காய்கள் முற்றி இருந்தன.

**சொற்களஞ்சியம்**

- கூர்மையாக
- ஊர்ந்து
- பாத்திகள்
- முற்றிய
- செழிப்பாக

3.4.10 - ஒன்றன்பால், பலவின்பால் சொற்களைக் கொண்டு வாக்கியம் அமைப்பர்.

**ஆசிரியர் குறிப்பு**

- சூழல் படத்தைப் பார்த்து உரையாடப் பணித்தல்.
- வாக்கியங்களைப் பிழையற வாசிக்கப் பணித்தல்.
- வாக்கியங்களில் உள்ள ஒன்றன்பால், பலவின்பால் சொற்களைப் பட்டியலிடப் பணித்தல்.

**வி.வ.கூ:** சுற்றுச்சூழல் நிலைத்தன்மையைப் பராமரித்தல் **உ.சி.தி:** ஆக்கச்சிந்தனை **21 ஆம் நூற்றாண்டு:** அறியும் ஆர்வம்

நடவடிக்கை நூல் பக்கம் : 63

## பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

### பழமொழியையும் பொருளையும் அறிக.















## பழமொழியும் பொருளும்

**ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு.**

- சினத்தால் நிதானத்தை இழக்கும் ஒருவன் செய்யும் எக்காரியமும் தவறாகவே போகும்.

4.7.3 - மூன்றாம் ஆண்டுக்கான பழமொழிகளையும் அவற்றின் பொருளையும் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- கதையை வாசித்து அறியச் செய்தல்.
- கதையில் கூறப்பட்ட பழமொழியையும் பொருளையும் வாசித்து அறியச் செய்தல்.
- ஜாப்பர் குறியீட்டின் மூலம் கதையைக் கேட்க ஆசிரியர் பணித்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** சீர்தூக்கிப் பார்த்தல் **21 ஆம் நூற்றாண்டு:** தாங்கும் வலிமை

நடவடிக்கை நூல் 1 பக்கம் : 64

## பாடம் 5 இலக்கணம்

### எழுவாய் - பயனிலை இயைபு அறிக.

1. ஒரு செயல் நிகழ்வதற்குக் காரணமாய் இருப்பது எழுவாய்.
2. பயனிலையில் நின்று யார், எது, எவை, யாவை முதலிய வினாக்களை எழுப்பும்போது கிடைக்கும் விடையே வாக்கியத்தின் எழுவாய் ஆகும்.
3. எழுவாயின் செயலைக் காட்டும் சொல் பயனிலை ஆகும்.
4. வினைமுற்றுகள், பெயர்ச்சொற்கள், வினாப்பெயர் ஆகியவை பயனிலையாக வரும்.
5. எல்லா வாக்கியங்களிலும் பயனிலை இருக்கும்.




நீ கூற நினைக்கும் வாக்கியங்களில் மூன்றனைக் கூறுக.




- ஆசிரியர் வழிகாட்டினார்.
- அதிகாரி வந்தார்.
- சாரணர்கள் முகாமிட்டனர்.
- மாதச் சோதனை நடந்தது.
- நூலகம் திறந்திருக்கிறது.
- மாணவர்கள் கற்கின்றனர்.

5.6.1 - எழுவாய் - பயனிலை இயைபு அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

**ஆசிரியர் குறிப்பு**
- உரையாடலை வாசித்து அறியச் செய்தல்.
- எழுவாய் - பயனிலை இயைபு பற்றி விளக்கம் பெறச் செய்தல்.
- கொடுக்கப்பட்ட வாக்கியங்களை வாசித்து அறியப் பணித்தல்.

**வி.வ.கூ:** ஆக்கமும் புத்தாக்கமும் **உ.சி.தி:** சிந்தனை வியூகம் **21 ஆம் நூற்றாண்டு:** அறியும் ஆர்வம்

நடவடிக்கை நூல் 1 பக்கம் : 65-66

# தொகுதி 10 அறிவியல்

## பாடம் 1 அறிவியல் விழா

கலந்துரையாடுக.




வருக! வருக! நண்பர்களே!

தமது பிள்ளைகளோடு வந்திருக்கும் கிளியாருக்கு எங்களின் வணக்கம்!

மறவாமல் குட்டிகளையும் அழைத்து வந்த குரங்காரே வணக்கம்!

அருகருகே அமர்ந்திருக்கும் ஆட்டுக் குட்டிக்கும் யானைக் கன்றுக்கும் வணக்கம்!

பருந்தைக் கண்டும் பயந்திடாமல் குஞ்சுகளைக் காக்கும் பெட்டைக் கோழிக்கு வணக்கம்!

மிடுக்காய் உடுத்தி அழகாய் வந்த அணிற்பிள்ளைக்கும் வணக்கம்!




1.7.12 - பிள்ளை, குட்டி, குஞ்சு, கன்று ஆகிய மரபுச் சொற்களை வாக்கியங்களில் சரியாகப் பயன்படுத்திப் பேசுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- வரவேற்பு உரையை ஏற்றத் தொனியுடன் வாசிக்கப் பணித்தல்.
- மரபுச் சொற்களின் பயன்பாடு பற்றி அறியச் செய்தல்-.
- வேறு சில வாக்கியங்களை மாணவர்கள் உருவாக்கப் பணித்தல்.

**வி.வ.கூ:** அறிவியலும் தொழில்நுட்பமும் **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21 ஆம் நூற்றாண்டு:** தொடர்புகொள்ளும் திறன்

நடவடிக்கை நூல் 1 பக்கம் : 67

# பாடம் 2 தண்ணீரின் மகிமை

## வாசித்து அறிக.




மனிதர்கள் மட்டுமன்றி தாவரங்களில் ஆரம்பித்து நுண்ணுயிரிகள், விலங்குகள், பறவைகள் என எல்லாவற்றுக்கும் தண்ணீர் தேவை. தண்ணீரின் இரசாயனக் குறியீடு $H_2O$ என்பதாகும்.

பிற இரசாயனங்களுக்கும் தண்ணீருக்கும் ஒரு வித்தியாசம் உண்டு. தண்ணீர் இப்படித்தான் கிடைக்கும் என்று வரையறுத்துச் சொல்ல இயலாது. பூமியிலும் மற்ற சில கிரகங்களிலும் திடப் பொருள், திரவப் பொருள், வாயு என்று மூன்று வடிவங்களிலும் தண்ணீர் கிடைக்கும்.

திடப்பொருள் என்பது பனிக்கட்டி, குளிர்சாதனப் பெட்டியில் உறைய வைக்கின்ற ஐஸ் கட்டி, கடலுக்குள் தென்படும் பெரிய பனிப்பாறைகள் அனைத்தும் நீரின் திட வடிவம்தான்.

திரவ வடிவம் என்பது குழாய் நீர், ஆறு, கடல், அருவி, ஏரி என்று அடுக்கிக் கொண்டே போகலாம்.

வாயு வடிவம் என்பது நீராவி. தண்ணீரைப் பாத்திரத்தில் கொதிக்க வைத்தால் அது வாயு வடிவத்தில் வெளியேறத் தொடங்கும். நம்மைச் சுற்றித் தண்ணீரின் மூன்று வடிவங்களும் இருக்கின்றன. இந்த மூன்று நிலைகளிலும் தண்ணீர் சமையலுக்குப் பயன்படுகிறது. பனிக்கட்டியை வைத்துப் பழரசங்களைக் குளிர வைக்கிறோம். திரவத்தை வைத்துக் காய்கறிகளை வேக வைக்கிறோம். வாயு வடிவத்தில் இட்லி, புட்டு, இடியாப்பம் போன்றவற்றை வேக வைக்கிறோம்.

'தண்ணீர்' என்ற தமிழ்ச் சொல்லே மிக அழகானது. 'தண்மை + நீர்' என்று அதைப் பிரிக்க வேண்டும். அதுதான் குளிர்ச்சியான நீர் எனப் பொருள்படுகின்றது.

**தகவல் களம்**

**முந்நீர்**

- ஆற்று நீர்
- ஊற்று நீர்
- மழை நீர்

2.4.6 - பத்தியை வாசித்துப் புரிந்து கொள்வர்.

**ஆசிரியர் குறிப்பு**

- பத்தியை வாசித்து அறியச் செய்தல்.
- பத்திகளில் கூறப்பட்ட கருத்துகளை மாணவர்கள் கூறப் பணித்தல்.
- வாய்மொழியாகக் கேள்விகள் கேட்டு உரையாடச் செய்தல்.

**வி.வ.கூ:** அறிவியலும் தொழில்நுட்பமும் **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21 ஆம் நூற்றாண்டு:** அறியும் ஆர்வம்

நடவடிக்கை நூல் I பக்கம் : 68

# பாடம் 3 நான் ஒரு பள்ளிக் காலணி

## வாசித்து மகிழ்க



நான் ஒரு பள்ளிக் காலணி. என் பெயர் 'பாலாஸ்'. நான் துணியாலும் நெகிழியாலும் செய்யப்பட்டேன். பேராக்கிலுள்ள ஒரு தொழிற்சாலையில் தயாரிக்கப்பட்டேன். என்னுடன் பல சகோதரர்கள் பிறந்தனர்.

ஒருநாள் எங்களைப் பெட்டியில் அடைத்துக் கனவுந்தில் ஏற்றினர். விற்பனைக்காகக் கோலாலம்பூர் கொண்டு சென்றனர். அவர்கள் பேரங்காடியில் காலணி விற்கும் இடத்திற்குக் கொண்டு சென்று இறக்கினர். அங்கு எங்கள் மீது விலை அட்டை ஒட்டப்பட்டது. என் விலை RM28.00 ஆகும். அதன்பிறகு எங்களைக் காட்சிக்கு அடுக்கி வைத்தனர். அங்கு எனக்கு நிறைய நண்பர்கள் கிடைத்தனர்.

நாட்கள் கடந்தன. அன்று பெண்மணி ஒருவர் தன் மகனை அழைத்துக் கொண்டு பேரங்காடிக்கு வந்தார். அப்பொழுது அவருடைய மகன் நேரே என்னருகில் வந்தான். என்னை எடுத்துப் பார்த்தான். காலில் அணிந்து பார்த்தான். அவனுக்கு என்னைப் பிடித்துப் போய்விட்டது. அப்பெண்மணி என்னை விலை கொடுத்து வாங்கிக் கொண்டார்.

என் எஜமானரின் பெயர் அமுதவாணன். அவர் என்னைத் தினமும் பள்ளிக்கு அணிந்து செல்வார். அவர் வாரம் ஒரு முறை என்னைச் சுத்தம் செய்வார். அதனால், நான் எப்பொழுதும் சுத்தமாகவே காட்சியளிப்பேன்.

என்னை வாங்கி ஆறு மாதங்களாகிவிட்டன. நான் என் எஜமானருக்கு இன்னும் விசுவாசமாக உழைத்து வருகிறேன்.

### சொற்களஞ்சியம்

- இயக்கம்
- உயிர்வளி
- பணி
- எதிரி
- திணறல்

3.3.1 - 60 சொற்களில் தன்கதை எழுதுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- வாசிப்புப் பகுதியை வாசிக்கப் பணித்தல்.
- தன்கதை கூறுவது போல பாகமேற்று வாசிக்கப் பணித்தல்.
- பத்தியை அழகான கையெழுத்தில் எழுதப் பணித்தல்.

**வி.வ.கூ:** உலகளாவிய நிலைத்தன்மை **உ.சி.தி:** ஆய்வுச் சிந்தனை **21 ஆம் நூற்றாண்டு:** கொள்கையுள்ளவர்

நடவடிக்கை நூல் 1 பக்கம் : 69


## பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

### மரபுத்தொடர்களையும் பொருளையும் அறிக.

ஓர் ஏழை விவசாயிக்கு மன வேதனை ஏற்பட்டது. அவர் மனைவிக்கு ஏதோ தீராத வியாதி வந்துவிட்டது. மனைவியைக் குணப்படுத்த மருத்துவர்களை நாடினார். சேர்த்த பணத்தையெல்லாம் **அள்ளி இறைத்தார்**. அதன் காரணத்தால், அக்கம் பக்கம் உள்ளவர்களிடம் கடனும் வாங்க நேரிட்டது.

விவசாயி அழுது புலம்பினார். கடவுளிடம் முறையிட்டார். “ஏன் என் பக்கத்து வீட்டுப் பண்ணையார் போல நான் செல்வந்தராகவும் துயரம் இல்லாமலும் வாழவில்லை?” என்றார்.

அன்றிரவு அவர் கனவில் கடவுள் தோன்றினார். மறுநாள் மாலைப்பொழுது சூரியன் மறையும் முன் அந்த ஊரிலுள்ள கோவிலுக்கு வர வேண்டும். வரும்பொழுது அவரவர் கவலைகளையும் துயரங்களையும் மூட்டைகளாகக் கட்டிக் கொண்டு வந்து வைத்துவிட வேண்டும். இருட்டான பிறகு, கோவில் மணியோசை கேட்டவுடன் கையில் உடனே அகப்படும் ஒரு மூட்டையை எடுத்துக் கொண்டு சென்றுவிட வேண்டும். இவ்வாறு செய்தால் கவலை நீங்கிவிடும் என்று கூறி கடவுள் மறைந்தார்.




பள்ளியில் ஏற்படும் சிக்கல்களுக்கு நீ எவ்வாறு தீர்வு காண்பாய்?

விவசாயி மனம் மகிழ்ந்தார். தம் கவலையைக் கோவிலில் விட்டுவிட்டுப் பண்ணையாரின் குறைந்த கவலையை மட்டும் எடுத்துக் கொண்டு வரலாம் என எண்ணினார். மறுநாள் பொழுது சாயும் நேரம் **அரக்கப் பரக்க** ஒரு துணிப் பையைத் தூக்கிக் கொண்டு கோவிலுக்கு ஓடினார்.

அங்கே பலரும் பெரிய பெரிய மூட்டைகளைக் கொண்டு வந்திருந்தனர். அவற்றைக் கண்டு விவசாயி பிரமித்துப் போனார். அங்கே வந்தவர்களில் மிகச் சிறிய மூட்டை விவசாயியின் மூட்டை மட்டுமே. அனைவரும் விவசாயி கொண்டு வந்த துணி மூட்டையைப் பார்த்துக் கொண்டே இருந்தனர். தம் மூட்டையை ஓரிடத்தில் வைத்துவிட்டு அதைக் கவனமாகப் பார்த்துக் கொண்டார் விவசாயி.



விளக்கு அணைந்து மணி அடித்ததும் எல்லாரும் அவரவர் மூட்டைகளையே தூக்கிக் கொண்டு வெளியேறினர். புதிய துன்பங்களைவிட பழகிப்போன துன்பங்களே மேல் என்றனர்.

## மரபுத்தொடரும் பொருளும்

**அள்ளி இறைத்தல்**
- அளவுக்கு மேல் செலவழித்தல்

**அரக்கப் பரக்க**
- அவசரமும் பதற்றமும்

## சொற்களஞ்சியம்

- நாடினார்
- புலம்பினார்
- துயரங்கள்
- பிரமித்துப் போனார்
- மணியோசை

4.6.3 - மூன்றாம் ஆண்டுக்கான மரபுத்தொடர்களையும் அவற்றின் பொருளையும் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

**ஆசிரியர் குறிப்பு**
- கதையை வாசித்து அறியச் செய்தல்.
- கதையில் கூறப்பட்ட மரபுத்தொடர்களையும் அவற்றின் பொருளையும் அறியப் பணித்தல்.
- மரபுத்தொடர்களுக்கு ஏற்ப வாக்கியங்களை உருவாக்கிக் கூறப் பணித்தல்.

நடவடிக்கை நூல் I பக்கம் : 70

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** சீர்தூக்கிப் பார்த்தல் **21 ஆம் நூற்றாண்டு:** தாங்கும் வலிமை



# பாடம் 5 இலக்கணம்

## செயப்படுபொருள் அறிக.

வாக்கியங்களில் மூன்று கூறுகள் உள்ளன.

| எழுவாய் | செயப்படுபொருள் | பயனிலை |
|---|---|---|

பயனிலையில் நின்று யாரை, எதை, எவற்றை முதலிய வினாக்களை எழுப்பும்போது கிடைக்கும் விடையே வாக்கியத்தின் செயப்படுபொருள் ஆகும்.

**எடுத்துக்காட்டு:**

1. ஆசிரியர் அறிவியல் பாடத்தைப் **போதித்தார்**.

எதை? → அறிவியல் பாடத்தை → செயப்படுபொருள்

2. தங்கை அண்ணனை **அழைத்தாள்**.

யாரை? → அண்ணனை → செயப்படுபொருள்

3. அத்தை மாம்பழங்களை **வாங்கினார்**.

எவற்றை? → மாம்பழங்களை → செயப்படுபொருள்

4. பூவிழி பழச்சாறு **குடித்தாள்**.

எதை? → பழச்சாறு → செயப்படுபொருள்

5.6.2- செயப்படுபொருள் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

**ஆசிரியர் குறிப்பு**
- செயப்படுபொருள் பற்றிய விளக்கம் பெறச் செய்தல்.
- எடுத்துக்காட்டு வாக்கியங்களை மாணவர்கள் வாசித்து அறியச் செய்தல்.
- வாக்கியங்களில் உள்ள செயப்படுபொருளைக் கூறி விளக்கம் பெறச் செய்தல்.

நடவடிக்கை நூல் I பக்கம் : 71-72

**வி.வ.கூ:** மொழி **உ.சி.தி:** உருவாக்குதல் **21 ஆம் நூற்றாண்டு:** அறியும் ஆர்வம்

# தொகுதி 11 பொருளாதாரம்

## பாடம் 1 கைத்திறன்

### கலந்துரையாடுக.

1



- பூக்களைக் கொய்தல்
- மாலையைத் தொடுத்தல்
- சந்தையில் விற்றல்




2



- கூடைகளை முடைதல்
- வண்ணம் பூசுதல்
- கடையில் விற்றல்




3



- மட்பானைகளை வனைதல்
- காய வைத்தல்
- சாயம் பூசுதல்
- விற்பனைக்கு அனுப்புதல்



4



- தென்னை ஓலைகளை வெட்டுதல்
- நேர்த்தியாகப் பின்னுதல்
- கூரைகளை வேய்தல்
- பகுதி நேரத் தொழிலாகச் செய்தல்



5



- அம்புகளைத் தயார் செய்தல்
- போட்டி நடைபெறுதல்
- அம்பு எய்தல்




1.7.13 - கொய்தல், எய்தல், முடைதல், வனைதல், வேய்தல் ஆகிய வினைமரபுச் சொற்களை வாக்கியங்களில் சரியாகப் பயன்படுத்திப் பேசுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- வாக்கியங்களை வாசித்து அறியச் செய்தல்.
- வாக்கியங்களில் பயன்படுத்திய வினைமரபுச் சொற்களை அறியப் பணித்தல்.
- மாணவர்கள் வினைமரபுச் சொற்களைப் பயன்படுத்தி வாக்கியங்களை அமைக்கச் செய்தல்.

**வி.வ.கூ:** நிதிக் கொள்கை **உ.சி.தி:** பயன்படுத்துதல் **21 ஆம் நூற்றாண்டு:** கொள்கையுள்ளவர்

நடவடிக்கை நூல் 1 பக்கம் : 73

## பாடம் 2 சிறுதொழில் செய்வோம்

### வாசித்து அறிக.

- நாங்கள் அனைவரும் மாற்றுத் திறனாளிகள்.
- நாங்கள் சிறுதொழில் செய்கிறோம்.
- திரு. கீர்த்தனன் மட்பானை வனைவதில் சிறந்தவர்.
- திரு. சலீம் கூடைகள் முடைதலில் மிகவும் திறமையானவர்.






**தகவல் களம்**

**வினைமரபு**

- சோறு உண்டான்
- செய்யுள் இயற்றினார்
- சுவர் எழுப்பினார்
- துணி நெய்தாள்
- முறுக்குத் தின்றான்

மாற்றுத் திறனாளிகளுக்கு எப்படிப்பட்ட தொழில் சிறந்ததாக இருக்கும்?

- திருமதி சாருமதி பூக்களைக் கொய்து மாலையாகவும் சரமாகவும் தொடுப்பதில் சிறந்து விளங்குகிறார்.
- திரு. சேது பனை ஓலை, தென்னை ஓலை ஆகியவற்றின் மூலம் கூரைகள் வேய்வதில் ஆற்றல் மிக்கவர்.
- திரு. அப்துல்லா, திரு. வாசன் ஆகிய இருவரும் அம்புகள் செய்யும் தொழிலைச் செய்கின்றனர்.
- இருவரும் அம்பு எய்வதில் திறமையானவர்களே.

2.4.5 - வாக்கியத்தை வாசித்துப் புரிந்து கொள்வர்.

**ஆசிரியர் குறிப்பு**

- சூழல் படத்தைப் பார்த்து உரையாடச் செய்தல்.
- வாக்கியங்களையும் வினைமரபுச் சொற்களையும் வாசித்து அறியச் செய்தல்.
- சூழலுக்குப் பொருத்தமான வேறு சில வாக்கியங்களை மாணவர்களே உருவாக்கப் பணித்தல்.

**வி.வ.கூ:** தொழில்முனைப்பு **உ.சி.தி:** ஆக்கச் சிந்தனை **21 ஆம் நூற்றாண்டு:** சிந்தனையாளர்

நடவடிக்கை நூல் I பக்கம் : 74

# பாடம் 3 வருமானம்

## வாசித்து எழுதுக.

1




- திரு. அழகன் ஒரு பால் வியாபாரி.
- தினமும் பாலைக் கறந்து புட்டியில் ஊற்றுவார்.
- தமது வாடிக்கையாளர்களுக்கு விற்பார்.
- பலரும் பால் பருகுவதைப் பழக்கமாகக் கொண்டுள்ளனர்.

2



- திரு. மாளவன் பழரசம் தயாரிக்கும் வியாபாரம் செய்கிறார்.
- தினந்தோறும் அதிகமானோர் இங்கு வந்து பழரசம் அருந்துவர்.

3



- யசோதன் அழகான ஓவியங்களை வரைவார்.
- வண்ணம் தீட்டி அழகுப்படுத்துவார்.
- சுற்றுப்பயணிகள் அவற்றை விரும்பி வாங்குவர்.

4



- கோலம் இடுவதில் சிவகாமி திறமையானவள்.
- இக்கலையைப் பகுதிநேரத் தொழிலாகவும் செய்கிறாள்.
- திருமணக் காலங்களில் இவளின் கோலங்களுக்கு நல்ல வரவேற்பு கிடைக்கும்.

பகுதிநேரத் தொழில் செய்வதால் ஏற்படும் நன்மை தீமைகள் யாவை?

3.4.11 - வினைமரபுச் சொற்களைக் கொண்டு வாக்கியம் அமைப்பர்.

**ஆசிரியர் குறிப்பு**

- வாக்கியங்களைப் பிழையற வாசிக்கச் செய்தல்.
- வாக்கியங்களில் பயன்படுத்தப்பட்ட வினைமரபுச் சொற்களை அறியச் செய்தல்.
- மாணவர்கள் வினைமரபுச் சொற்களில் வாக்கியம் அமைக்கச் செய்தல்.

நடவடிக்கை நூல் பக்கம் : 75

**வி.வ.கூ:** தொழில்முனைப்பு **உ.சி.தி:** பயன்படுத்துதல் **21 ஆம் நூற்றாண்டு:** கொள்கையுள்ளவர்

# பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

## திருக்குறளையும் பொருளையும் அறிக.




அண்ணனின் முகத்தில் இன்றுதான் சிரிப்பைக் காண்கிறேன். சுயமாகத் தொழில் நடத்த வேண்டும் என்பது அண்ணனின் கனவு. அக்கனவு இன்று நனவானது.

கணினி பழுது பார்ப்பதில் அண்ணன் மிகவும் திறமைசாலி. எனவே, அத்திறமையைத் தனது முழு நேரத் தொழிலாகச் செய்ய ஆரம்பித்துவிட்டார்.

அண்ணனின் சுயத் தொழிலுக்கு வாடிக்கையாளர்கள் பெரிதும் ஆதரவு கொடுக்க ஆரம்பித்துவிட்டனர். வியாபார நுணுக்கங்களை நன்கு ஆராய்ந்து அறிந்த பின்னரே, இத்துறையில் முழுமூச்சாக ஈடுபட்டார். அப்பாவும் அண்ணனுக்குப் பல அறிவுரைகளைக் கூறினார். எக்காரியத்தையும் நன்கு ஆராய்ந்த பின்னரே மேற்கொள்ள வேண்டும் என்பார். தொடங்கிவிட்ட பின் ஆராய்ந்து கொள்ளலாம் என்றெல்லாம் நினைப்பது தவறு என வலியுறுத்துவார்.

அப்பாவின் அறிவுரை அண்ணனின் வெற்றிக்கு வழிகாட்டியாய் அமைந்தது. தன்னை நாடி வரும் பயனீட்டாளர்களுக்கு நிறைவான சேவையை அளிக்க வேண்டும் என்பது அண்ணனின் நோக்கமாகும்.

**சொற்களஞ்சியம்**

- முகத்தில்
- நனவானது
- ஆதரவு
- முழு மூச்சாக
- பயனீட்டாளர்

## திருக்குறளும் பொருளும்

**எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்**
**எண்ணுவம் என்பது இழுக்கு. (467)**

- நன்கு ஆராய்ந்தபின் ஒரு செயலை மேற்கொள்ள வேண்டும்; தொடங்கிவிட்டு ஆராய்ந்து கொள்ளலாம் என்பது குற்றம்.

4.3.3 - மூன்றாம் ஆண்டுக்கான திருக்குறளையும் அதன் பொருளையும் அறிந்து கூறுவர்; எழுதுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- வாசிப்புப் பகுதியை வாசிக்கச் செய்தல்.
- திருக்குறளையும் பொருளையும் அறியச் செய்தல்.
- திருக்குறளையும் பொருளையும் மனனம் செய்து மீண்டும் எழுதப் பணித்தல்.

**வி.வ.கூ:** தொழில்முனைப்பு **உ.சி.தி:** ஆக்கச் சிந்தனை **21 ஆம் நூற்றாண்டு:** சிந்தனையாளர்

நடவடிக்கை நூல் பக்கம் : 76

## பாடம் 5 இலக்கணம்

### பொருட்பெயர் அறிக.






5.3.11 - பொருட்பெயர் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- கதையை வாசிக்கச் செய்தல்.
- கதையில் கூறப்பட்ட பொருட்பெயர்களைத் தெரிவு செய்து கூறச் செய்தல்.
- மாணவர்கள் பொருட்பெயர்களைப் பட்டியலிட்டு வாசிக்கப் பணித்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** ஆய்வுச் சிந்தனை **21 ஆம் நூற்றாண்டு:** தாங்கும் வலிமை

நடவடிக்கை நூல் 1 பக்கம் : 77

# தொகுதி 12 விளையாட்டு

## பாடம் 1 இசை நாற்காலி

### கதை கூறுக.



பள்ளியில் இசை நாற்காலி - பதினைந்து நாற்காலிகளை ஒரு வட்டத்தில் - பதினாறு பேர் நாற்காலிகளைச் சுற்றி - இசை இசைக்கப்பட்டது - சுற்றி ஓடினோம் - திடீரென இசை நின்றதும் ஓடிச் சென்று ஆளுக்கொரு நாற்காலியில் - என் தோழனுக்கு இடம் கிடைக்காமல் வெளியேறி - மறுபடியும் வட்டத்தை - ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு நாற்காலியாகக் குறைக்கப்பட்டது - இறுதியில் வெற்றி பெற்றவர்.

உங்களின் மன அழுத்தத்தைக் குறைக்க நீங்கள் என்னென்ன நடவடிக்கைகளை மேற்கொள்வீர்கள்?

1.8.3 - குறிப்புகளைத் துணையாகக் கொண்டு கதை கூறுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- படத்தைப் பார்த்து உரையாடச் செய்தல்.
- கொடுக்கப்பட்ட குறிப்புகளைக் கொண்டு குழு முறையில் கதை கூறச் செய்தல்.

நடவடிக்கை நூல் 1 பக்கம் : 78-79

**வி.வ.கூ:** உலகளாவிய நிலைத்தன்மை **உ.சி.தி:** பயன்படுத்துதல் **21 ஆம் நூற்றாண்டு:** குழுவாகச் செயல்படுதல்

# பாடம் 2 ஆடுவோம் வாரீர்

## வாசித்து அறிக.



### தட்டாங்கல்

தட்டாங்கல் ஆட்டம் என்பது பாரம்பரிய விளையாட்டுகளில் ஒன்றாகும். இந்த ஆட்டத்தைச் சிறுவர்கள் பெரிதும் விரும்புவர். இதில் ஒரே மாதிரியான சிறு கூழாங்கற்களைப் பயன்படுத்தி விளையாடுவர்.

இந்த விளையாட்டைப் பாண்டிக்கல், ஐந்தாங்கல் என்றும் அழைப்பர். சங்க காலத்தில் இது தெற்றி என அழைக்கப்பட்டது. இவ்விளையாட்டினை மேலும் மகிழ்வூட்டும் வகையில் பாட்டுப் பாடிக் கொண்டே ஆடுவர்.

ஏழு கற்களைக் கொண்டு ஆடப்படும் ஆட்டத்தில் ஒன்னான், இரண்டான், மூன்றான், நான்கான், ஐந்தான், ஆறான், ஏழான், எட்டான், ஒன்பதான், பத்தான் என பத்துப் பிரிவுகள் ஆட வேண்டும். கல்லை மேலே போட்டு விட்டு அது கீழே கைக்கு வந்து சேரும் முன் கீழே கிடக்கும் மற்ற கற்களை அலுங்காமல் எடுக்க வேண்டும். அதே சமயத்தில் மேலிருந்து விழும் கல்லையும் பிடித்துவிட வேண்டும்.



### நொண்டியாட்டம்

இந்த விளையாட்டை விளையாடுவதற்குத் தரையில் கட்டம்  போட வேண்டும். ஒற்றைக் காலால் நொண்டியடித்துக் கொண்டே கட்டங்களில் குதிக்க வேண்டும். கட்டத்தில் உள்ள கோடுகளை மிதிக்காமல் விளையாட வேண்டும். எத்தனை பேர் வேண்டுமானாலும் இந்த நொண்டியாட்டத்தை ஆடலாம். நொண்டியாட்டம் குழந்தைகளுக்கு நல்ல உடற்பயிற்சியாகும். குழந்தைகளின் உடலுக்குப் புத்துணர்வை அளிக்கிறது. மேலும், இரத்த ஓட்டத்தைச் சீராக்குகின்றது. தன்னம்பிக்கையை மாணவர்களிடையே ஓங்கச் செய்ய இது சிறந்த விளையாட்டாகும்.

2.6.1 - விளையாட்டுத் தொடர்பான உரைநடைப் பகுதியை வாசித்துக் கருத்துணர் கேள்விகளுக்குப் பதிலளிப்பர்.

**ஆசிரியர் குறிப்பு**

- வாசிப்புப் பகுதியைப் பிழையற வாசிக்கச் செய்தல்.
- விளையாட்டுகளையும் அவற்றின் விதிமுறைகளையும் விளக்கி அறியச் செய்தல்.
- குழு முறையில் மாணவர்கள் வகுப்பறையில் விளையாடிப் பார்க்கப் பணித்தல்.

**வி.வ.கூ:** ஆக்கமும் புத்தாக்கமும் **உ.சி.தி:** பயன்படுத்துதல் **21 ஆம் நூற்றாண்டு:** குழுவாகச் செயல்படுதல்

நடவடிக்கை நூல் 1 பக்கம் : 80-81

# பாடம் 3 பாரம்பரிய விளையாட்டு

## கதை எழுதுக.




பாரம்பரிய விளையாட்டுக் கண்காட்சி - பள்ளி மண்டபம்




பம்பரம் - பல்லாங்குழி - ஆடுபுலி - பரமபதம் - பார்த்தல்




பொதுமக்கள் திரளாக - பங்கு கொள்ளல்



சிறப்பாக - பாரம்பரியம் - சிறப்புகளை அறிதல்

3.6.3 - 60 சொற்களில் தொடர்படத்தைக் கொண்டு கதை எழுதுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- தொடர்படங்களைப் பற்றி உரையாடச் செய்தல்.
- குறிப்புகளைப் பயன்படுத்தி கதை உருவாக்கிக் கூறச் செய்தல்.
- கதையை முறையாக எழுதப் பணித்தல்.

**வி.வ.கூ:** உலகளாவிய நிலைத்தன்மை **உ.சி.தி:** ஆக்கச் சிந்தனை **21 ஆம் நூற்றாண்டு:** அறியும் ஆர்வம்

நடவடிக்கை நூல் பக்கம் : 82-83

# பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

## உலகநீதியையும் பொருளையும் அறிக.




மாலதி: மதியழகி நாளை பொது விடுமுறை. நாம் இருவரும் நம் வசிப்பிடத்திற்குச் சற்று தூரத்தில் உள்ள ஆற்றில் குளிக்கச் செல்வோமா?


மதியழகி: வேண்டாம் மாலதி. அந்த ஆற்றில் குளிப்பது பாதுகாப்பானது அல்ல. மேலும், இதற்கு முன்பு சிறுவர்கள் சிலர் அந்த ஆற்று வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுள்ளனர் என்பது உனக்கும் தெரியும் அல்லவா?


மாலதி: ஆமாம் மதியழகி. இதுபோன்ற ஆபத்தான இடங்களுக்கு நாம் செல்லக்கூடாது.

### உலகநீதியும் பொருளும்

**போகாத விடந்தனிலே போக வேண்டாம்.**

- செல்லத்தகாத இடங்களுக்குச் செல்லக்கூடாது.







### உலகநீதியும் பொருளும்

**போகவிட்டுப் புறஞ்சொல்லித் திரிய வேண்டாம்.**

- ஒருவரைப் போகவிட்டுப் பின் அவரைப் பற்றிக் குறைகளைக் கூறித் திரிதல் கூடாது.

4.9.1 - மூன்றாம் ஆண்டுக்கான உலகநீதியையும் அதன் பொருளையும் அறிந்து கூறுவர்; எழுதுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- உரையாடலை வாசித்து அறியச் செய்தல்.
- உரையாடலில் உள்ள உலகநீதிகளையும் அவற்றின் பொருளையும் அறியச் செய்தல்.
- உலகநீதிகளுக்கு ஏற்ப வேறு சூழல் அல்லது வாக்கியங்களை உருவாக்கப் பணித்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** ஆக்கச் சிந்தனை **21 ஆம் நூற்றாண்டு:** கொள்கையுள்ளவர்

நடவடிக்கை நூல் I பக்கம் : 84

# பாடம் 5 இலக்கணம்

## இடப்பெயர் அறிக.

1


என் அக்காள் வீட்டு வாசலில் அழகான கோலம் இடுகிறாள்.

2


சுற்றுப் பயணிகள் மலேசியாவில் உள்ள இயற்கை அழகை இரசித்து மகிழ்கின்றனர்.

3


மாணவர்கள் பள்ளி மண்டபத்தில் ஒன்று கூடினர்.

4


நாங்கள் வெள்ளிக்கிழமையன்று கோவிலுக்குச் சென்றோம்.

5


லங்காவித் தீவில் படகுப் போட்டி நடைபெறவுள்ளது.

6



பெருநாள் காலங்களில் நெடுஞ்சாலைகளில் வாகன நெரிசலாக இருக்கும்.

5.3.12 - இடப்பெயர் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

**ஆசிரியர் குறிப்பு**
- வாக்கியங்களைப் பிழையற வாசிக்கப் பணித்தல்.
- வாக்கியங்களில் கூறப்பட்ட இடப்பெயர்களை அறியச் செய்தல்.
- மாணவர்கள் இடப்பெயர்களைப் பயன்படுத்தி வாக்கியங்களை உருவாக்கிக் கூறப் பணித்தல்.

**வி.வ.கூ:** மொழி **உ.சி.தி:** ஆய்வுச் சிந்தனை **21 ஆம் நூற்றாண்டு:** தகவல் நிறைந்தவர்

நடவடிக்கை நூல் I பக்கம் : 85

# தொகுதி 13 பண்பாடும் பண்பும்

## பாடம் 1 பண்பாட்டு விழுமியங்கள்

### கேள்விகள் கேட்டு உரையாடுக.

**1**



- எவ்வாறு அமர்ந்து வாழையிலை உணவை உண்ண வேண்டும்?
- ஏன் சம்மணம் இட்டு வாழையிலை உணவை உண்ண வேண்டும்?

**2**

- வீட்டு வாசலில் சீனர்கள் சிவப்பு நிறத் துணியைக் கட்டுவது எதற்கு?



**3**



- எதற்காக 'ஙாஜாட் நடனம்' ஆடப்படுகிறது?
- எவ்வாறு இந்நடனம் ஆடப்படுகிறது?

**4**

- திருமணத்திற்கு வாழை மரங்கள் கட்டுவதை எப்படித் தொடர்புபடுத்திக் கூறலாம்?



வாழையிலையில் உணவு உண்பதால் ஏற்படும் நன்மைகள் யாவை?

1.5.4 - ஏன், எப்படி, எவ்வாறு, எதற்கு எனும் கேள்விகளுக்கேற்பப் பதில் கூறுவர்.

நடவடிக்கை நூல் 1 பக்கம் : 86

**ஆசிரியர் குறிப்பு**

- படங்களைப் பார்த்து உரையாடச் செய்தல்.
- வினாக்களை வாசித்து அறியச் செய்தல்.
- வினாக்களுக்கு ஏற்ற பதிலைக் கூறப் பணித்தல்.

**வி.வ.கூ:** உலகளாவிய நிலைத்தன்மை **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21 ஆம் நூற்றாண்டு:** அறியும் ஆர்வம்

## பாடம் 2 உலகம் நமக்கு

### வாசித்து அறிக.



**இன்பத் தமிழ்**

தமிழுக்கும் அமுதென்று **பேர்!** - அந்தத்
தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு **நேர்!**
தமிழுக்கு நிலவென்று **பேர்!** இன்பத்
தமிழ் எங்கள் சமூகத்தின் விளைவுக்கு **நீர்!**
தமிழுக்கு மணமென்று **பேர்!** - இன்பத்
தமிழ் எங்கள் வாழ்வுக்கு நிருமித்த **ஊர்!**
தமிழுக்கு மதுவென்று **பேர்!** - இன்பத்
தமிழ் எங்கள் உரிமைச்செம் பயிருக்கு **வேர்!**

தமிழ் எங்கள் இளமைக்குப் **பால்** - இன்பத்
தமிழ் நல்ல புகழ்மிக்க புலவர்க்கு **வேல்!**
தமிழ் எங்கள் உயர்வுக்கு **வான்!** - இன்பத்
தமிழ் எங்கள் அசதிக்குச் சுடர்தந்த **தேன்!**
தமிழ் எங்கள் அறிவுக்குத் **தோள்!** - இன்பத்
தமிழ் எங்கள் கவிதைக்கு வயிரத்தின் **வாள்!**
தமிழ் எங்கள் பிறவிக்குத் தாய்! - இன்பத்
தமிழ் எங்கள் வளமிக்க உளமுற்ற தீ!

- பாரதிதாசன்




**இணையத் தளம்**
https://youtu.be/J2mIZcb7uqg

2.2.25 - சந்தச் சொற்கள் அடங்கிய கவிதையைச் சரியான உச்சரிப்புடன் வாசிப்பர்.

**ஆசிரியர் குறிப்பு**

- பாடலின் வரிகளைச் சரியாக உச்சரிக்கப் பணித்தல்.
- சந்தச் சொற்களைப் பட்டியலிடப் பணித்தல்.
- QR நோக்குக் குறியீடு மூலம் பாடலை முழுமையாகப் பாடி மகிழச் செய்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21 ஆம் நூற்றாண்டு:** அன்பானவர்/ பரிவுள்ளவர்

நடவடிக்கை நூல் பக்கம் : 87

# பாடம் 3 பண்பும் நாமும்

## வாசித்து எழுதுக.


விடியலில் எழ நீ பழகிக் கொள்
விளங்காப் பாடங் கற்றுக் கொள்
படித்ததை நினைக்கப் பழகிக் கொள்
பணிவோடு பேசக் கற்றுக் கொள்!

சினத்தை அடக்கப் பழகிக் கொள்
சிரிப்பதை என்றும் மறவாதே!
பணத்தைப் பெரிதாய் எண்ணாமல்
பண்பினை எண்ணக் கற்றுக் கொள்

மற்றவர் தொழிலைப் பழிக்காதே!
மண்மேல் எவரும் ஓரினமே!
கற்றவர் பேச்சைக் கேட்க விழை!
கல்லார் பேச்சைத் தள்ள முனை!

அச்சம் உன்னை மாய்த்துவிடும்
அயலார் அஞ்சவும் செய்யாதே!
வஞ்சனை செய்ய எண்ணாதே!
வாயா டுதலை நினைக்காதே!

- பாவலரேறு பெருஞ்சித்திரனார்



பாடி மகிழ்க



3.2.4 - கவிதை, பாடல், செய்யுள் ஆகியவற்றைப் பார்த்து முறையாகவும் வரிவடிவத்துடனும் எழுதுவர்.

நடவடிக்கை நூல் பக்கம் : 88

**ஆசிரியர் குறிப்பு**

- கவிதையை ஏற்றத் தொனியுடன் வாசிக்கப் பணித்தல்.
- கவிதையில் கூறப்பட்ட பண்புகளைக் கூறச் செய்தல்.
- கவிதையை அழகான வரிவடிவத்தில் எழுதப் பணித்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** சீர்தூக்கிப் பார்த்தல் **21 ஆம் நூற்றாண்டு:** சிந்தனையாளர்

## பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

### மரபுத்தொடரின் பொருளை அறிக.




### மரபுத்தொடரும் பொருளும்

**ஆறப் போடுதல்**
- ஒரு காரியத்தைக் காலந்தாழ்த்திச் செய்தல்

4.6.3 - மூன்றாம் ஆண்டுக்கான மரபுத்தொடர்களையும் அவற்றின் பொருளையும் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

**ஆசிரியர் குறிப்பு**
- உரைநடையைப் பாகமேற்று வாசிக்கச் செய்தல்.
- மரபுத்தொடரையும் பொருளையும் விளக்கப் பணித்தல்.
- உரையாடலை பாகமேற்று நடித்துக் காட்டப் பணித்தல்.

நடவடிக்கை நூல் I பக்கம் : 8௯

 **வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** ஆக்கச் சிந்தனை **21 ஆம் நூற்றாண்டு:** கொள்கையுள்ளவர்

## பாடம் 5 இலக்கணம்

### காலப்பெயர் அறிக.



தோழர்களே! வாருங்கள்! கோடைக்கால வெயிலில் நடக்காதீர்கள். குளிர் காலத்துத் தென்றலாக உங்கள் அனைவரையும் வரவேற்கக் காத்திருக்கிறேன். தினமும் என்னைத் தேடி பலர் வருவார்கள். என் பசுமை அவர்களை ஈர்க்கின்றது என்பதை அறிவேன். ஞாயிற்றுக்கிழமை, பொதுவிடுமுறை என்று வந்தாலே குடும்பத்துடன் என்னைக் காண வருவார்கள்.

பசுமையான பூங்காவாக இருக்கும் என்னை அவர்கள் நேசிக்கின்றனர். அதிகாலை நேரத்தில் பலரும் இங்கு வந்து மெதுவோட்டம், உடற்பயிற்சி போன்ற நடவடிக்கைகளைச் செய்கின்றனர். பிற்பகல் நேரத்தில் மக்கள் நடமாட்டம் குறைவுதான். என் முகமும் அச்சமயம் சற்று வாடிவிடும். ஆனால், மாலை நேரத்தில் மீண்டும் மக்கள் நடமாட்டம் அதிகரித்து என்னைக் குதூகலப்படுத்தும்.

சிறுவர்கள் அனைவரையும் செல்லக் குழந்தைகள் போல பார்ப்பேன். அவர்கள் ஊஞ்சலில் ஆடி மகிழ்வதைக் கண்டு இரசிப்பேன். இரவு நேரம் சற்றுக் குளிரும் அல்லவா! அப்பொழுதும் ஒரு சிலர் என்னை நாடி வருவதுண்டு.

பள்ளி விடுமுறைக் காலங்களில் வேறு பல இடத்திலிருந்தும் புதிய முகங்களாய் மக்கள் என்னைத் தேடி வருவார்கள். உல்லாசமாக அமர்ந்து காற்று வாங்கிச் செல்வது என் கண்களுக்குக் குளிர்ச்சியாக அமையும். பலருக்குப் பொழுதுபோக்கும் இடமாக இருக்கும். பசும் பூங்காவான நான் மகிழ்ச்சிக் கொள்கிறேன்.

**சொற்களஞ்சியம்**
- கோடைகாலம்
- ஈர்க்கின்ற
- நடமாட்டம்
- வாடிவிடும்
- உல்லாசமாக


5.3.13 - காலப்பெயர் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

**ஆசிரியர் குறிப்பு**
- வாசிப்புப் பகுதியை வாசித்து அறியச் செய்தல்.
- வாசிப்புப் பகுதியில் உள்ள காலப்பெயர்களை அடையாளங்காணப் பணித்தல்.
- காலப்பெயர்களை வரிபடத்தில் பட்டியலிடப் பணித்தல்.

**வி.வ.கூ:** சுற்றுச்சூழல் நிலைத்தன்மையைப் பராமரித்தல் **உ.சி.தி:** ஆக்கச் சிந்தனை **21 ஆம் நூற்றாண்டு:** சிந்தனையாளர்

நடவடிக்கை நூல் I பக்கம் : 10

## தொடர்வண்டிச் சுற்றுலா விளையாட்டு.



எண்ணித் துணிக கருமம் துணிந்தபின் ......................................

மக்கள் கூட்டம் -
வீரர்கள்- ...........
ஆடுகள்- ...........



## விளையாடும் முறை

நான்கு பேர் விளையாடலாம். கட்டத்தில் உள்ள வினாக்களுக்கு விடை கூற வேண்டும். அம்புக் குறிகளின்படி விரைவாகவும் நகரலாம். முதலில் வெற்றிக் கட்டத்தை அடைபவரே வெற்றியாளர்.

தொழிற்பெயர் 5 கூறுக.

தொட்டால் - அடிச்சொல் கூறுக.

ஒன்றன்பால் பலவின்பால் 2 கூறுக.

மாணவர்கள் சிரித்தனர். எழுவாய் கூறுக.

ஆறப் போடுதல் - பொருள் கூறுக.





எட்டுத் திசைகளைக் கூறுக.

சோளம் - கதிர்
திராட்சை -...
வாழைப்பழம் -...

ஆத்திரக்காரனுக்கு.....

**ஆசிரியர் குறிப்பு**

- விளையாட்டின் விதிமுறைகளைப் பற்றி விளக்கம் பெறச் செய்தல்.
- மாணவர்கள் விதிமுறைகளைப் பின்பற்றி விளையாடப் பணித்தல்.
- விடைகளைப் பட்டியலிடப் பணித்தல்.

**வி.வ.கூ:** மொழி **உ.சி.தி:** மதிப்பிடுதல் **21 ஆம் நூற்றாண்டு:** தகவல் நிறைந்தவர்

# தொகுதி 14 குடியியல்

## பாடம் 1 ஒற்றுமையே பலம்

படத்தைப் பார்த்து உரையாடுக.




1.7.7 - தனிப்படத்தையொட்டிப் பொருத்தமான சொல், சொற்றொடர், வாக்கியம் ஆகியவற்றைப் பயன்படுத்திப் பேசுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- படத்தையொட்டி உரையாடப் பணித்தல்.
- சொல், சொற்றொடர், வாக்கியம் ஆகியவற்றைப் பயன்படுத்திப் பேசப் பணித்தல்.
- சொல், சொற்றொடர், வாக்கியம் ஆகியவற்றை முறையாக எழுதப் பணித்தல்.

**வி.வ.கூ:** சுற்றுச்சூழல் நிலைத்தன்மையைப் பராமரித்தல் **உ.சி.தி:** ஆக்கச் சிந்தனை **21 ஆம் நூற்றாண்டு:** சிந்தனையாளர்

நடவடிக்கை நூல் 2 பக்கம் : 1-2

## பாடம் 2 கூடி விளையாடுவோம்

### செய்தியை வாசித்து அறிக.




தைப்பிங், 6 செப் -
இப்பகுதி வாழ் மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து மாற்றுத் திறனாளிகளுக்காக விளையாட்டுப் போட்டி நடத்தினர்.

பல்லின மக்கள் வாழும் இப்பகுதியில் மாற்றுத் திறனாளிகள் பலர் போட்டிகளில் பங்கெடுத்தனர். ஒற்றுமையை மட்டுமே பலமாகக் கொண்டு மக்கள் செயல்பட்டதைக் கண்டு பலரும் பெருமை கொண்டனர். விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதன் மூலம் மாற்றுத் திறனாளிகளிடம் தன்னம்பிக்கையை உருவாக்க முடியும் என ஏற்பாட்டுக் குழுத் தலைவர் திரு.தமிழ்வாணன் கூறினார். இனம், மொழி, மதம் என்பன ஆக்ககரமான செயல்களுக்குத் தடையல்ல என்று அவர் கூறினார். மேலும், இயலாமை என்ற எண்ணத்தை நாம் அனைவரும் விரட்டினால் மட்டுமே வாழ்வில் சிறந்து விளங்க முடியும்; எதையும் சாதிக்கவும் இயலும் என்றார்.

விளையாட்டுப் போட்டிகள் அனைத்தும் இனிதே நடந்து முடிவுற்றன. இலைமறை காயாக இருந்த பலரின் திறமைகள் இதன் மூலம் அறியப்பட்டன. முதன்முறையாக மேற்கொண்ட இந்நடவடிக்கை சிறந்த வெற்றியைத் தந்ததற்குக் காரணம் ஒற்றுமையே!

2.3.5 - செய்தியைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப வாசிப்பர்.

**ஆசிரியர் குறிப்பு**


- செய்தியைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு, நிறுத்தக்குறிகளுக்கேற்ப வாசிக்கப் பணித்தல்.
- செய்தியை ஓர் அறிவிப்பாளர் போல பாகமேற்று வாசிக்கச் செய்தல்.
- செய்தியில் கூறப்பட்ட விவரங்களைப் பற்றி வாய்மொழியாகக் கேள்விகள் கேட்டு உரையாடச் செய்தல்.

**வி.வ.கூ:** உலகளாவிய நிலைத்தன்மை **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21 ஆம் நூற்றாண்டு:** கொள்கையுள்ளவர்

நடவடிக்கை நூல் 2 பக்கம் : 3-4

## பாடம் 3 குடும்ப தினம்

### வாசித்து எழுதுக.



குடும்ப தினம் மூலம் நாம் பெறும் நற்பண்புகள் யாவை?

- அம்மா பலவகையான சமையலைக் கற்றுக் கொண்டார்.
- அப்பா பட்டம் செய்யும் முறையைக் கற்றார்.
- திருமதி லிம் பூச்சரம் தொடுத்தார்.



## தகவல் களம்

**ஆண்பால், பெண்பால் இரண்டுக்கும் பொருந்தும் சில சொற்கள்**

- நோயாளி
- கோழை
- ஏழை
- அதிபர்

- திருமதி கமரியா மீன்குழம்பு சுவையாகச் சமைத்தார்.
- மாமா தேங்காய் துருவியதைப் பார்த்துச் சிரித்தோம்.
- சிறுமியர் பன்னாங்குழி ஆடினர்.
- சிறுவர்கள் நொண்டியாட்டம் ஆடினர்.

3.4.9 - ஆண்பால், பெண்பால், பலர்பால் சொற்களைக் கொண்டு வாக்கியம் அமைப்பர்.

நடவடிக்கை நூல் 2 பக்கம் : 5-6

**ஆசிரியர் குறிப்பு**

- சூழல் படத்தைப் பார்த்து உரையாடச் செய்தல்.
- வாக்கியங்களை வாசித்து ஆண்பால், பெண்பால், பலர்பால் சொற்களை அறியச் செய்தல்.
- மாணவர்கள் சில வாக்கியங்கள் உருவாக்கப் பணித்தல்.

**வி.வ.கூ:** தொழில்முனைப்பு **உ.சி.தி:** பயன்படுத்துதல் **21 ஆம் நூற்றாண்டு:** அன்பானவர்/ பரிவுள்ளவர்

# பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

## பழமொழியையும் பொருளையும் அறிக.



சரவாக் மாநிலத்திற்கு மாற்றலாகி வந்து சில மாதங்கள் ஆகிவிட்டன. பொதுவிடுமுறையான அன்று சில இடங்களைச் சுற்றிப் பார்க்கச் சென்றோம்.

நீண்ட வீடுகளில் வாழும் இபான் இனத்தவர் எங்களைப் பார்த்துப் புன்னகைத்தனர். ஒரு நீண்ட வீடு நூறு முதல் நூற்று ஐம்பது குடும்பங்கள் வாழும் இடமாக அமைந்துள்ளது. வெள்ளப் பேரிடரிலிருந்து தற்காக்கும் வகையில் வீட்டின் நீண்ட கால்கள் அவ்வீட்டைத் தாங்கிக் கொண்டிருந்தன. உருட்டுக்கட்டைகளாலான ஏணிப்படிகளில் ஏறிச் சென்றோம். பல வாயிற்படிகளையும் கதவுகளையும் கண்டோம். கடைசி வீட்டில் வசித்த குழுத் தலைவரைக் கண்டு அப்பா உள்ளேச் செல்ல அனுமதி கேட்டார். இஃது இபான் இனத்தாரின் முக்கியமான நடைமுறையாகும்.

மறவாமல் காலணிகளைக் கழற்றிவிட்டு வீட்டின் உள்ளே சென்றோம். வீட்டினுள் சென்றதும் தலை குனிந்து மூத்தவர்களை வணங்குவது இவர்களின் மரபு என்பதால் நாங்களும் அப்படியே செய்தோம். 'ருவாய்' என்று அழைக்கப்படும் வரவேற்பு அறையில் எங்களை அமரச் செய்தனர். அன்போடு அளித்த அரிசி பானத்தையும் மறுப்புச் சொல்லாமல் வாங்கிக் குடித்தோம். "நாம் இவற்றை எல்லாம் கடைப்பிடிக்க வேண்டுமா அப்பா?" என்று அவ்வளவு நேரமாய் மனத்தில் தேக்கி வைத்திருந்த கேள்வியைக் கேட்டேன். "**ஊருடன் கூடி வாழ்** என்று நான் அடிக்கடி கூறுவதை மறந்துவிட்டாயா கண்மணி?" என்றார் அப்பா. மேலும், "பெரியோரை மதித்தலும் நமது பண்பல்லவா!" என்று கூறினார். "உண்மைதான் அப்பா, இப்போது நினைவிற்கு வந்துவிட்டது," என்றேன்.

### பழமொழியும் பொருளும்

**ஊருடன் கூடி வாழ்.**

- நாம் வாழும் இடத்து மக்களின் பழக்க வழக்கங்களுக்கு ஏற்ப அவர்களோடு இணைந்து வாழ வேண்டும்.

4.7.3 - மூன்றாம் ஆண்டுக்கான பழமொழிகளையும் அவற்றின் பொருளையும் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

**ஆசிரியர் குறிப்பு**
- உரையாடலைப் பாகமேற்று வாசிக்கச் செய்தல்.
- பழமொழியையும் பொருளையும் வாசித்து அறியச் செய்தல்.
- பழமொழிக்கேற்பச் சூழல் அல்லது கதையை உருவாக்கிக் கூறப் பணித்தல்.

நடவடிக்கை நூல் 2 பக்கம் : 7

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** சீர்தூக்கிப் பார்த்தல் **21 ஆம் நூற்றாண்டு:** கொள்கையுள்ளவர்

பாடம் 5 இலக்கணம்

## சினைப்பெயர் அறிக.

1



காலையும் மாலையும் உடற்பயிற்சி செய்தோம். கால்களை நீட்டி மடக்கினோம். இரண்டு கைகளையும் உயர்த்திப் பயிற்சி செய்தோம். தலையை மெல்ல அசைத்தோம். கண்களைச் சிமிட்டினோம். உடற்பயிற்சியின் அவசியத்தை உணர்ந்து கடைப்பிடித்தோம்.

2



ஆற்றின் ஓரம் மாமரம் ஒன்று செழிப்பாக வளர்ந்தது. பசுமையான இலைகள் மேலும் அம்மரத்திற்கு அழகைக் கூட்டின. கிளைகள் படர்ந்து வளர்ந்தன. சில மாதங்களுக்குப் பிறகு மஞ்சள் நிறப் பூக்கள் பூத்துக் குலுங்கின. மாங்காய்கள் கனிந்து மாம்பழங்களாயின. இனிப்பான அக்கனிகளைப் பலரும் சுவைத்து மகிழ்ந்தனர்.

3



பாட்டி தமது கைகளைச் சுத்தமாகக் கழுவினார். வடையைச் பொரிக்க ஆரம்பித்தார். மரக்கிளையில் அமர்ந்திருந்த காகம் அவ்விடத்திற்கு வந்தது. காகம் தனக்குப் பசிப்பதாகக் கூறியது. விறகுகள் ஈரமாக உள்ளன என்று பாட்டி கூறினார். காகம் பாட்டிக்கு உதவி செய்ய நினைத்தது. காய்ந்த இலைகளையும் சிறு குச்சிகளையும் காகம் தன் அலகால் கௌவிக் கொண்டு வந்தது. பாட்டி காகத்தின் உழைப்புக்கு நன்றி கூறினார். காகம் தலையை அசைத்து வடைக்காகக் காத்திருந்தது. அவ்வப்போது தனது மெல்லிய கால்களையும் கூர்மையான நகங்களையும் பார்த்துக்கொண்டது.

5.3.14 - சினைப்பெயர் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- பத்திகளைப் பிழையற வாசிக்கச் செய்தல்.
- பத்திகளில் உள்ள சினைப்பெயர்களைக் கண்டறிந்து கூறப் பணித்தல்.
- வரிபடத்தில் சினைப்பெயர்களைப் பட்டியலிட்டுக் கூறப் பணித்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** ஆய்வுச் சிந்தனை **21 ஆம் நூற்றாண்டு:** சிந்தனையாளர்

நடவடிக்கை நூல் 2 பக்கம் : 8-9


# தொகுதி 15 குடும்ப விழா

## பாடம் 1 அன்பான உறவுகள்

படங்களைப் பார்த்து கலந்துரையாடுக.

எதற்கு

எப்படி




ஏன்

எவ்வாறு

1.6.4 - ஏன், எப்படி, எவ்வாறு, எதற்கு எனும் வினாச் சொற்களைச் சரியாகப் பயன்படுத்திக் கேள்விகள் கேட்பர்.

**ஆசிரியர் குறிப்பு**

- படங்களைப் பார்த்துக் கலந்துரையாடச் செய்தல்.
- வினாச் சொற்களைப் பயன்படுத்திக் கேள்விகள் கேட்கப் பணித்தல்.
- குழுமுறையில் பொருத்தமான வினாக்கள் தயாரிக்கப் பணித்தல்.

நடவடிக்கை நூல் 2 பக்கம் : 10

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** ஆய்வுச் சிந்தனை **21 ஆம் நூற்றாண்டு:** அன்பானவர்/ பரிவுள்ளவர்

## பாடம் 2 நாடக விழா

### வாசித்து அறிக.



தமிழ்மொழி இயல், இசை, நாடகம் எனும் மூன்று கூறுகளைக் கொண்டதாகும். இவற்றுள் நாடகக் கலை என்பது கலைகளின் அரசியாகக் கருதப்படுகிறது.

இயலும் இசையும் கலந்து கதையை நடித்துக் காட்டுவது நாடகக் கலையாகும். நாடகக் கலையின் சிறப்பு யாதென்றால், ஒன்பது வகையான உணர்ச்சிகளை ஒருவர் தம் மெய் அசைவுகளின் மூலம் நடிப்பதுவேயாகும். இத்திறமையே நாடகக் கலையின் தனிச்சிறப்பு என்றும் கூறலாம்.

நாடகங்களை இருவகையாகப் பிரிக்கலாம். வேத்தியல், பொதுவியல் என்பனவே அவை இரண்டும். வேத்தியல் என்பது அரச குடும்பத்தினருக்காக நடத்தப்படும் நாடகங்களாகும். பொதுவியல் என்பது மக்களுக்காக நடித்துக் காட்டப்படும் நாடகங்களாகும்.

மற்றொரு முக்கியக் கலையாக நடனக் கலையைக் கூறலாம். நடனம் என்பது தாளத்துக்கும் இசைக்கும் ஏற்ப உடலை அசைத்து நிகழ்த்தப்படும் அற்புதக் கலையாகும். இக்கலையானது, மனிதர்கள் தங்களின் எண்ணங்களை மற்றவர்களுடன் பரிமாறிக் கொள்ளவும் பயன்படுகின்றது. பல நடனங்கள் கதை கூறும் பாணியிலும் அமைந்திருக்கும். எனினும், எல்லா நடனங்களும் தம்முன் போதுமான இயல்புகளைக் கொண்டே அமையப் பெற்றிருக்கும் எனலாம். நம் மூதாதையர் பலர் நடனத்திற்காகவே தங்களை



அர்ப்பணித்துக் கொண்டனர். வாழ்வின் மிக உன்னதமான கலையாக நடனக் கலையைப் போற்றி வந்தனர். அற்புதமான நாட்டியத்திற்கு இப்புவியில் அனைத்து உயிர்களும் மயங்கும் என்பதே அவர்களின் அசையாத நம்பிக்கை. இதற்குச் சான்றாக நமது புராணங்களும் இதிகாசங்களும் அற்புதக் காவியங்களாக நமக்குத் தரப்பட்டுள்ளன.

நடனங்களுக்கு உயிர் கொடுத்துப் பல தரப்பினர் தனியாகவும் குழுக்களாகவும் செயல்பட்டு வருகின்றனர். இதனால், நம் பாரம்பரிய நடனங்கள் உலகம் முழுவதும் மேடையில் அரங்கேற்றம் பெறுகின்றன.



இவ்விரு கலைகளையும் அடுத்து இசையையும் இனியதொரு கலை என்றே கூறலாம். இசை என்னும் சொல் 'இயை' எனும் அடிச்சொல்லில் இருந்து தோன்றியதே. இசை என்பது ஒழுங்கு செய்யப்பட்ட அழகு ஒலியாகவும் கருதப்படுகின்றது. மேலும், இசை என்றாலே ஒருவரை இசைய வைப்பது என்றும் பொருள்படுகின்றது. இசையின் ஒலிக்குறிப்பு சுரம் எனப்படும். இனிமை உடையது என்பதுவே இதன் பொருளாகும். சுரங்கள் மொத்தம் ஏழு என்று பெயர் பெற்றுள்ளன. சுரங்கள் சேர்வதால் இராகம் உண்டாகின்றது. இனிமையான இராகங்களைப் பலர் கேட்டு இரசித்து மகிழ்கின்றனர்.

**வெளிநாட்டுச் சுற்றுப்பயணிகளுக்கு நம் பாரம்பரிய கலைகளை எவ்வாறு அறிமுகப்படுத்தலாம்?**

2.6.2 - கலை தொடர்பான உரைநடைப் பகுதியை வாசித்துக் கருத்துணர் கேள்விகளுக்குப் பதிலளிப்பர்.

நடவடிக்கை நூல் 2 பக்கம் : 11-12

**ஆசிரியர் குறிப்பு**

- வாசிப்புப் பகுதியைப் பிழையற வாசிக்கச் செய்தல்.
- வாசிப்புப் பகுதியில் கூறப்பட்ட முக்கியக் கருத்துகளைப் பற்றி உரையாடப் பணித்தல்.
- வாசிப்புப் பகுதி தொடர்பாக வாய்மொழிக் கேள்விகள் கேட்டு உரையாடப் பணித்தல்.

**வி.வ.கூ:** உலகளாவிய நிலைத்தன்மை **உ.சி.தி:** ஆய்வுச் சிந்தனை **21 ஆம் நூற்றாண்டு:** தகவல் நிறைந்தவர்

# பாடம் 3 குடும்பச் சுற்றுலா

## வாசித்து எழுதுக.



வாழ்க்கை எனும் பயணத்தில் சுற்றுலா என்பது இன்றியமையாத ஒன்றாகும். அதிலும் குடும்பமாகச் சுற்றுலா மேற்கொள்வது சிறப்பு வாய்ந்த அங்கமாகும்.

குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் சேர்ந்து சுற்றுலா செல்வதால் மனத்தில் பெரும் மகிழ்ச்சி ஏற்படுகின்றது. அன்றாட வாழ்க்கையில் உத்வேகத்துடன் இயங்க வழிவகுக்கின்றது.

பல இடங்களைக் குடும்பமாகச் சுற்றிப் பார்ப்பதால், பொது அறிவை வளர்த்துக் கொள்ளலாம். மேலும், குடும்ப உறவுகள் வலுவடைந்து சிறப்புற வழிவகுக்கும். மகிழ்ச்சியான வாழ்வுக்குப் புரிந்துணர்வு அவசியம். சுற்றுலா செல்வதன்வழி உறவுகளுக்கிடையே புரிந்துணர்வு, பொறுமை போன்ற உணர்வை வலுப்படுத்த முடியும்.

சுற்றுலா செல்வதன்வழி குடும்ப உறவுகளுக்கிடையில் அன்பு பெருகும். ஒன்றாக அமர்ந்து பிரச்சனைகளைப் பகிர்ந்து கொள்ளும் வாய்ப்பும் அமைகின்றது. இதன்மூலம் எவ்விதச் சிக்கல்களையும் சுமுகமான முறையில் களையவும் இயலும்.

வளமான வாழ்வுக்கு அடித்தளம் அன்பு, பாசம், நேசம் ஆகியவையே. இவை யாவும் குடும்பச் சுற்றுலாவின் மூலம் நாம் பெற முடியும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. மனம்விட்டுப் பேசும்போது பலரின் மனச் சுமைகள் நீங்கும். எனவே, சுகமான வாழ்வுக்கும் சுமுகமான உறவுகளுக்கும் குடும்பச் சுற்றுலா பெரிதும் பங்காற்றுகின்றது.

### சொற்களஞ்சியம்

- இன்றியமையாத
- உத்வேகத்துடன்
- வலுவடைந்து
- புரிந்துணர்வு
- சுமுகமான

3.6.4 - 60 சொற்களில் கருத்து விளக்கக் கட்டுரை எழுதுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- விளக்கக் கட்டுரையை வாசிக்கப் பணித்தல்.
- கட்டுரையில் கூறப்பட்ட கருத்துகளை மாணவர்கள் கூறச் செய்தல்.
- கட்டுரையை அழகான கையெழுத்தில் எழுதி வாசிக்கப் பணித்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** சீர்தூக்கிப் பார்த்தல் **21 ஆம் நூற்றாண்டு:** அன்பானவர்/ பரிவுள்ளவர்

நடவடிக்கை நூல் 2 பக்கம் : 13-14

## பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

### திருக்குறளையும் பொருளையும் அறிக.




சபைகூடுதலின் போது என் பெயரைக் கூறி மேடைக்கு வரும்படி அழைக்கிறார்கள். சக மாணவர்களின் கரவொலி என்னை வியப்பில் ஆழ்த்துகிறது. படபடக்கும் மனத்துடன் மேடை ஏறுகிறேன்.

என்னைப் பற்றி பொறுப்பாசிரியர் பேச ஆரம்பிக்கின்றார். "இதோ! இன்று உங்கள் முன் நிற்பவர் உங்கள் அனைவருக்கும் அறிமுகமான மாணவர் நீலமேகன். நம் பள்ளிச் சட்ட திட்டங்களை முறையே கடைப்பிடித்து நடப்பவன். ஒழுக்கம் நிறைந்த மாணவன். இம்மாணவனிடம் உள்ள பணிவும் அன்பும் பள்ளி ஆசிரியர்கள் அனைவரையும் பிரமிக்க வைக்கின்றது. இம்மாணவன் பள்ளியில் மட்டுமன்றி வீட்டிலும் பெற்றோரை மதித்து நடப்பவன். இம்மாணவனிடம் உள்ள ஒழுக்கமே இவனுக்குச் சிறப்புச் சேர்த்துப் பெருமைப்படுத்துகின்றது. எனவே, இம்மாதத்தின் சிறந்த மாணவனாக நீலமேகனைத் தேர்ந்தெடுக்கின்றோம். பதக்கம் வழங்கிச் சிறப்பு செய்யத் தலைமையாசிரியரை அன்புடன் அழைக்கிறோம்," என்று கூறி முடிக்கிறார். 'சிறந்த மாணவன்' என்ற பதக்கம் பெற்ற நான் ஆசிரியர்கள் அனைவரையும் கரம் கூப்பி வணங்கி நன்றி கூறுகிறேன்.

"நீலமேகன்!... நீலமேகன்! எழுந்திரு! எழுந்திரு! என்னப்பா என்றுமே இல்லாமல் இன்று ஏதேதோ உளறுகிறாயே! உடம்பு ஏதும் சரியில்லையோ..!" என்று பதற்றத்துடன் அம்மாவின் குரல் காதில் கேட்கிறது. அப்படியென்றால்... இவ்வளவு நேரம் நான் கண்டது... சிறு புன்னகையுடன் விழித்துப் பார்க்கிறேன்.

### திருக்குறளும் பொருளும்

**ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்**
**உயிரினும் ஓம்பப் படும். (131)**

- ஒழுக்கம் ஒரு மனிதனுக்குப் பெருஞ் சிறப்பைத் தரவல்லது. இவ்வொழுக்கத்தை உயிரினும் மேலாகக் கருதிக் காக்க வேண்டும்.

**இணையத் தளம்**

https://youtu.be/ouVvJZ1wrKk?t=3

4.3.3 - மூன்றாம் ஆண்டுக்கான திருக்குறளையும் அதன் பொருளையும் அறிந்து கூறுவர்; எழுதுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- திருக்குறள் தொடர்பான வாசிப்புப் பகுதியை வாசிக்கச் செய்தல்.
- திருக்குறளையும் பொருளையும் மனனம் செய்து கூறப் பணித்தல்.
- திருக்குறளையும் பொருளையும் கொண்டு புத்தகக் குறியீட்டு அட்டை செய்யப் பணித்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** சீர்தூக்கிப் பார்த்தல் **21 ஆம் நூற்றாண்டு:** கொள்கையுள்ளவர்

நடவடிக்கை நூல் 2 பக்கம் : 15

# பாடம் 5 இலக்கணம்

## பண்புப்பெயர் அறிக.

கருமை நிறத்து மேகமே!
கனத்த மழை உனதாகுமே!


உயர்ந்து வளர்ந்த தென்னையே!
உந்தன் அருமை பெரியதே!

பசுமை நிறைந்த மரங்களே!
பாரில் நீங்கள் வேண்டுமே!

கசப்பு என்ற வேப்பமே!
நோயை விரட்டப் போதுமே!

மெய்சிலிர்க்கும் இளங் காற்றே!
மென்மை உனக்குச் சொந்தமே!

நேசம் கொண்ட மனிதனே!
நேர்மை உமது நெறியாகுமே!



படத்தில் நீ காணும் பண்புப்பெயர்களைக் கூறுக.

5.3.15 - பண்புப்பெயர் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- கவிதையை ஏற்றத் தொனியுடன் வாசிக்கச் செய்தல்.
- கவிதையில் உள்ள பண்புப்பெயர்களை வாசிக்கப் பணித்தல்.
- மேலும், சில பண்புப்பெயர்களை மாணவர்கள் கூறப் பணித்தல்.


நடவடிக்கை நூல் 2 பக்கம் : 16

**வி.வ.கூ:** சுற்றுச்சூழல் நிலைத்தன்மையைப் பராமரித்தல் **உ.சி.தி:** ஆக்கச் சிந்தனை **21 ஆம் நூற்றாண்டு:** கொள்கையுள்ளவர்

# தொகுதி 16 எங்கள் கதை

## பாடம் 1 நடித்துக் காட்டுக

### போலித்தம் செய்க.



- நான்தான் நொய்வமரம் (ரப்பர்).
- எனது தாயகம் அமேசான் நதிக்கரை.
- முதன்முதலில் கோலகங்சார் தாவரத் தோட்டத்திற்கு வந்தேன்.
- என் தந்தை எச்.என். ரிட்லி.



- என் பெயர் தொடர்வண்டி.
- மிகவும் கனமானவன் நான்.
- கற்சாலையில் செல்ல இயலாதவன்.
- தண்டவாளம் என்பதே நான் செல்லும் பாதை.
- என் தந்தை ஜோர்ஜ் ஸ்டீபன்சன்.



- உலகையே ஒளிமயமாக்கினேன்.
- என் தந்தை வறுமையில் வாழ்ந்தவர். ஆனாலும், உழைப்பால் உயர்ந்தவர்.
- பல கண்டுபிடிப்புகளைக் கண்டுபிடித்தவர்.
- நாகரிக உலகத்தின் தந்தை எனப் போற்றப்பட்டவர்.
- தாமஸ் ஆல்வா எடிசன் என்பவரே எனதருமைத் தந்தை.

1.3.3 - செவிமடுத்தவற்றைப் போலித்தம் செய்வர்.

**ஆசிரியர் குறிப்பு**

- ஆசிரியர் வாசிப்புப் பகுதியை வாசிக்க மாணவர்கள் செவிமடுக்கச் செய்தல்.
- மாணவர்கள் செவிமடுத்தவற்றைப் போலித்தம் செய்யப் பணித்தல்.
- கருத்துகளை விவரித்துக் கூறப் பணித்தல்.

**வி.வ.கூ:** உலகளாவிய நிலைத்தன்மை **உ.சி.தி:** சிந்தனை வியூகம் **21 ஆம் நூற்றாண்டு:** சிந்தனையாளர்

நடவடிக்கை நூல் 2 பக்கம் : 17

பாடம் 2 வரலாறு

## வாசித்து அறிக.

### இந்தியர்கள்



சுதந்திரத்திற்கு முன்னர், இந்தியர்கள் பெரும்பாலோர் ரொய்வ தோட்டத்தில் வேலை செய்தனர். பலர் ரொய்வமரம் சீவும் தொழிலாளர்களாகவும் சிலர் நிர்வாகத்திலும் பணி புரிந்தனர். அனைவரும் தோட்டப் பாட்டாளிகள் என்றும் அழைக்கப்பட்டனர். தொழிலாளர்கள் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட குடியிருப்புப் பகுதியிலேயே வசித்தனர். பல தோட்டங்கள் இன்று உருமாற்றம் பெற்றுவிட்டன. ஆங்காங்கே நிறைய தொழிற்சாலைகள் கட்டப்பட்டுள்ளன. வாழ்க்கைத் தரத்தின் உயர்வுக்கு ஏற்ப இந்தியர்கள் நகர்ப்புறங்களுக்குச் சென்று வசிக்கின்றனர்.

### மலாய்க்காரர்கள்



மலாய்க்காரர்கள் கடற்கரை, ஆற்றங்கரை ஓரங்களில் அன்றைய நாளில் வசித்து வந்தனர். விவசாயம், மீன் பிடித்தல் போன்றவையே இவர்களின் முக்கியத் தொழில்களாக இருந்தன. ஆனால், நாட்டின் மேம்பாட்டுக்கு ஈடுகொடுக்கும் வகையில் இன்று பல பகுதிகள் பட்டணங்களாக மாறிவிட்டன. பலர் உயர்நிலைப் பதவிகளில் பணி புரிகின்றனர். தரம் உயர்ந்த வசிப்பிடங்களில் வசிக்கின்றனர்.

### சீனர்கள்



சீனர்கள் பெரும்பான்மையினர் பேராக், சிலாங்கூர் ஆகிய மாநிலங்களில் வசித்தனர். அங்கு ஈயச் சுரங்கத் தொழிலாளர்களாக வேலை செய்தனர். சிலர் நகர்ப்பகுதியில் வியாபாரம் செய்ய ஆரம்பித்தனர். அவர்கள் பொருளாதாரத்தை வலுவடையச் செய்தனர்.

2.4.6 - பத்தியை வாசித்துப் புரிந்து கொள்வர்.


**ஆசிரியர் குறிப்பு**

- பத்திகளை ஏற்றத் தொனியுடன் வாசிக்கச் செய்தல்.
- பத்தியில் கூறப்பட்ட கருத்துகளை மீண்டும் கூறப் பணித்தல்.
- பத்திகளைச் சொல்வதெழுதுதல் பயிற்சியாக எழுதப் பணித்தல்.

**வி.வ.கூ:** உலகளாவிய நிலைத்தன்மை **உ.சி.தி:** ஆய்வுச் சிந்தனை **21 ஆம் நூற்றாண்டு:** நாட்டுப்பற்று

நடவடிக்கை நூல் 2 பக்கம் : 18

# பாடம் 3 நான் ஒரு குடை



## வாசித்து தன்கதை எழுதுக.

வெயிலிலிருந்தும் மழையிலிருந்தும் அனைவரையும் பாதுகாப்பேன். நான்தான் குடை. நான் கிள்ளானிலுள்ள ஒரு தொழிற்சாலையில் பிறந்தேன். என் பெயர் 'டவர்'. என் நிறம் சிவப்பு. நான் இரும்பாலும் நெகிழியாலும் செய்யப்பட்டேன்.

என்னைச் செய்து முடித்தவுடன் ஒரு நெகிழிப் பையில் வைத்தனர். என்னுடன் நண்பர்கள் பலர் இருந்தனர். எங்கள் அனைவரையும் ஒரு பெரிய பெட்டியில் வைத்து கனவுந்தில் ஏற்றினர். சில மணி நேரப் பயணத்திற்குப் பிறகு, நாங்கள் பகாவ் எனும் பட்டணத்தை அடைந்தோம். அங்கே ஒருவர் எங்களை இறக்கி ஒரு சிற்றங்காடிக்கு எடுத்துச் சென்றார். சற்று நிமிர்ந்து பார்த்தேன். 'கவின் சிற்றங்காடி' எனப் பெயர்ப் பலகை இருந்தது.

அக்கடையின் முதலாளி திரு. கவின் எங்கள் மேல் விலையட்டையை ஒட்டினார். என் விலை RM18.00. நாங்கள் அனைவரும் அச்சிற்றங்காடியில் வரிசையாகத் தொங்கவிடப்பட்டோம். கால ஓட்டத்தில் என் நண்பர்கள் ஒவ்வொருவராக என்னை விட்டுப் பிரியத் தொடங்கினர். எனக்கான நாளை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருப்பதே என் வேலையாகிப் போனது.

ஒருநாள் கனத்த மழை பெய்தது. ஒருவர் அவசர அவசரமாகச் சிற்றங்காடிக்குள் நுழைந்தார். பேரம் எதுவும் பேசாமல் என்னை வாங்கினார். கடையைவிட்டு வெளியே சென்ற அவர் என் காலடியில் ஒரு விசையை அழுத்த, அவரை மழையில் இருந்து பாதுகாக்க நான் அழகாய் விரிந்தேன்.

இன்றுவரை என் கடமை தவறாமல் அவரை மழையிலிருந்தும் வெயிலிலிருந்தும் பாதுகாத்து வருகிறேன். என் உயிர் உள்ளவரை அவருக்குக் கடமையாற்ற உறுதி கொண்டுள்ளேன்.

3.6.1 - 60 சொற்களில் தன்கதை எழுதுவர்.

நடவடிக்கை நூல் 2 பக்கம் : 19

**ஆசிரியர் குறிப்பு**

- வாசிப்புப் பகுதியை வாசிக்கச் செய்தல்.
- குடையின் தன்கதை பற்றி உரையாடச் செய்தல்.
- தன்கதை கூறும் கட்டுரையை முறையாக எழுதப் பணித்தல்.

**வி.வ.கூ:** அறிவியலும் தொழில்நுட்பமும் **உ.சி.தி:** ஆக்கச் சிந்தனை **21 ஆம் நூற்றாண்டு:** தகவல் நிறைந்தவர்

# பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

## இணைமொழிகளையும் பொருளையும் அறிக.

காலை 10:00 மணி
வரலாற்று மாநிலமான மலாக்கா மாநிலத்தில் உள்ள பாட்டியின் இல்லம் சென்றோம். பாட்டியும் தாத்தாவும் வசிக்கும் இடம் ஓர் அழகான கிராமம்.

காலை 10:30 மணி
பாட்டி, தாத்தா, அக்காள், தம்பி, அம்மா, அப்பா அனைவரும் ஒன்றாக அமர்ந்து காலைச் சிற்றுண்டியை உண்டோம். தாத்தா சமைத்திருந்த வஞ்சரை மீன் குழம்பு என்னைச் சுண்டி இழுத்தது. எனக்கு ஒரு புதிய மிதிவண்டி வாங்கியுள்ளதாக தாத்தா கூறினார். மீன் குழம்பின் சுவையை நாக்குச் சுவைத்தது. மனம் மட்டும் புத்தம் புதிய மிதிவண்டியைக் காண ஆவல் கொண்டது.

காலை 11:00 மணி
தாத்தா புதிய மிதிவண்டியை எனக்குப் பரிசாக அளித்தார். அகம் மகிழ்ந்தேன். மிதிவண்டியின் வடிவமும் நிறமும் என்னை மிகவும் கவர்ந்தன. அனைவரின் அனுமதியோடு சற்றுத் தூரம் மிதிவண்டியைச் செலுத்தினேன். பச்சை நிறத்தில் உடை உடுத்தியது போன்று எங்கும் பசுமையோ பசுமை. **சுற்றும் முற்றும்** பார்த்து இயற்கையை இதமாக இரசித்தேன். புதிய மிதிவண்டி எனக்கு மேலும் உற்சாகம் அளித்தது.

காலை 11:30 மணி
பழ மரங்களையும் பாக்கு மரங்களையும் பார்த்து இரசித்து வந்ததால் நேரம் போனதே தெரியவில்லை. செம்மண் சாலை என்பதால் சில இடங்களில் **மேடு பள்ளமாக** இருந்தது. ஆனாலும், புதிய மிதிவண்டியை மிகவும் கவனமாகவே செலுத்தினேன். இனிய நினைவுகளைக் கொடுத்த நாளாக இந்நாள் அமைந்ததை எண்ணி எனக்குள் மகிழ்ந்தேன்.

## இணைமொழிகளும் பொருளும்

**சுற்றும் முற்றும்**
- நாலாப்பக்கமும் / சுற்றிலும்

**மேடு பள்ளம்**
- சமமற்ற நிலப்பகுதி

4.4.3 - மூன்றாம் ஆண்டுக்கான இணைமொழிகளையும் அவற்றின் பொருளையும் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

**ஆசிரியர் குறிப்பு**
- நாட்குறிப்பைப் பிழையற வாசிக்கச் செய்தல்.
- நாட்குறிப்பில் கூறப்பட்ட இணைமொழிகளையும் பொருளையும் அறியச் செய்தல்.
- இணைமொழிகளைப் பயன்படுத்தி வாக்கியங்கள் அமைக்கப் பணித்தல்.

**வி.வ.கூ:** சுற்றுச்சூழல் நிலைத்தன்மையைப் பராமரித்தல் **உ.சி.தி:** ஆக்கச் சிந்தனை **21 ஆம் நூற்றாண்டு:** கொள்கையுள்ளவர்

நடவடிக்கை நூல் 2 பக்கம் : 20

பாடம் 5 இலக்கணம்

## தொழிற்பெயர் அறிக.



நண்பர்களே! நான்தான் யசோதா.
என் மகிழி கவிதை புனைதல், ஓவியம் வரைதல், அழகுப் பூச்செடிகளை நடுதல் போன்றவையாகும்.



தோழர்களே! இதோ நான் வந்துவிட்டேன். நான்தான் சித்தார்த்தன். என் மகிழி பூப்பந்து விளையாடுதல், தொலைக்காட்சி பார்த்தல், தபால் தலை சேகரித்தல் போன்றவையாகும்.



நான் மாலதி. எனக்குக் கோலம் இடுதல், சிறுகதை எழுதுதல், திரட்டேடு தயாரித்தல் போன்றவை மிகவும் பிடித்த மகிழியாகும்.



மாணவர்களே! என் பெயர் சேதுராமன். என் எதிர்கால ஆசை பொறியியலாளராகப் பணிபுரிதல் ஆகும். பொருள்களை ஏற்றுமதி, இறக்குமதி செய்யும் நடவடிக்கைகள் எனக்குப் பிடிக்கும். சுற்றுலா செல்லுதல், இசைக் கருவிகள் இசைத்தல் என்பன எனக்குப் பிடித்த மகிழியாகும்.

மகிழியால் மாணவர்கள் அடையும் நன்மைகள் யாவை?

5.3.16 - தொழிற்பெயர் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

நடவடிக்கை நூல் 2 பக்கம் : 21-22

**ஆசிரியர் குறிப்பு**
- குறிப்புகளைப் பிழையற வாசிக்கப் பணித்தல்.
- குறிப்புகளில் கூறப்பட்ட தொழிற்பெயர்களைக் கூறச் செய்தல்.
- மாணவர்கள் தொழிற்பெயர்களைப் பயன்படுத்திப் பேசப் பணித்தல்.

**வி.வ.கூ:** தொழில்முனைப்பு **உ.சி.தி:** ஆக்கச் சிந்தனை **21 ஆம் நூற்றாண்டு:** சிந்தனையாளர்

# தொகுதி 17 நேசம் வளர்ப்போம்

## பாடம் 1 இனிய நினைவுகள்

### கதை கூறுக.

1




செம்மலர் - பிறந்தநாள் - நண்பர்கள் - உறவினர்கள் முதியோர் இல்லம்

2



சுத்தம் - முதியோர்கள் - முகமலர்ச்சி - பலவிதமான பலகாரங்கள் - சோகங்கள் - மறந்து - கலகலப்பாக

3



கதைகள் - விடுகதைகள் - பாடல்கள் - ஆடல் - உரையாடல்

4



மாலையில் - இல்லம் திரும்புதல் - அன்பு - மறக்கமுடியாத - மீண்டும்

1.8.3 - குறிப்புகளைத் துணையாகக் கொண்டு கதை கூறுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- குறிப்புகளைப் பிழையற வாசிக்கப் பணித்தல்.
- குறிப்புகளில் துணையாகக் கொண்டு கதை கூறப் பணித்தல்.
- குறிப்புகளைத் துணையாகக் கொண்டு கதையை எழுதப் பணித்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** சீர்தூக்கிப் பார்த்தல் **21 ஆம் நூற்றாண்டு:** அன்பானவர்/ பரிவுள்ளவர்

நடவடிக்கை நூல் 2 பக்கம் : 23-24

# பாடம் 2 உயர் குணங்கள்

## வாசித்து அறிக.

சில பறவைகள், மனிதர்கள் வாழும் பகுதிகளில் வசிக்கின்றன. அவற்றுள் சில பறவைகள் மனிதர்களால் வளர்க்கப்படுகின்றன.

காகங்கள் மனிதர்கள் வாழும் பகுதியில் காணப்படும் பறவையாகும். காகம் என்று கூறும்போதே நம் எண்ணத்தில் தோன்றுவது ஒற்றுமை, அன்பு, கூடி வாழ்தல் போன்ற உயர்ந்த குணங்களாகும்.

காக்கை தமக்குக் கிடைக்கும் எளிய உணவையும் சக நண்பர்களோடு பகிர்ந்து உண்ணும் குணமுடைய பறவையாகும். மனிதர்களாகிய நாமும் இத்தகைய உயர்ந்த குணங்களை அன்றாட வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டும். பெற்றோர், உடன்பிறப்பு, நண்பர்கள் என அனைவரையும் மதித்து நடக்க வேண்டும். அவர்கள் அனைவரின் மீதும் அன்பு செலுத்த வேண்டும். அன்பினால் எதையும் சாதிக்க முடியும் என்பதை அறிந்து செயல்பட வேண்டும்.





**இயற்கையை நேசிக்கும் பண்பை எவ்வாறு வெளிப்படுத்தலாம்?**

இயற்கை, வளர்ப்புப் பிராணிகள், பூச்செடிகள் போன்றவற்றின் மீதும் அன்பு பாராட்டி மகிழ வேண்டும். மனித வாழ்வின் சிறந்த அடித்தளமே அன்பு என்பதை உணர்ந்திருக்க வேண்டும். கூடி வாழும் காக்கைகள் போல் அனைவரும் ஒற்றுமையாக வாழ முற்படுவதே சிறப்பாகும். அன்பினால் இயற்கையைப் பேணலாம். நல்ல மனித உறவை மேம்படுத்தலாம். மனித நேயத்தை வளர்க்கலாம்.

2.4.6 - பத்தியை வாசித்துப் புரிந்து கொள்வர்.

நடவடிக்கை நூல் 2 பக்கம் : 25-26

**ஆசிரியர் குறிப்பு**

- வாசிப்புப் பகுதியைப் பிழையற வாசிக்கப் பணித்தல்.
- வாசிப்புப் பகுதியில் கூறப்பட்ட முக்கியக் கருத்துகளைக் கேட்டு உரையாடச் செய்தல்.
- வாய்மொழியாகக் கேள்விகள் கேட்டுப் பதில் அளிக்கப் பணித்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** ஆக்கச் சிந்தனை **21 ஆம் நூற்றாண்டு:** அன்பானவர்/ பரிவுள்ளவர்



KPM

# பாடம் 3 மனித நேயம்

## படத்தைப் பார்த்து எழுதுக.




3.6.2 - 60 சொற்களில் தனிப்படத்தைக் கொண்டு கதை எழுதுவர்.

நடவடிக்கை நூல் 2 பக்கம் : 27-28

**ஆசிரியர் குறிப்பு**

- படத்தைப் பார்த்து உரையாடப் பணித்தல்.
- படத்தைப் பார்த்துக் கதையைக் கூறப் பணித்தல்.
- தனிப்படத்துக்குக் கதையை எழுதப் பணித்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** சீர்தூக்கிப் பார்த்தல் **21 ஆம் நூற்றாண்டு:** அன்பானவர்/ பரிவுள்ளவர்

## பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

### இரட்டைக்கிளவிகளையும் பொருளையும் அறிக.

1



காலை வேளையில் கடற்கரையில் நடந்தோம். கதிரவனின் ஒளிபட்டுக் கடல்நீர் **தகதக**வென காட்சியளித்தது. அலைகள் கரையை வந்து மோதின. வெகுதூரத்தில், கப்பல்கள் உருவில் மிகச் சிறியதாகத் தென்பட்டன. அனைத்தையும் பார்த்து இரசித்தோம். இறைவன் படைத்த அற்புதங்களைக் கண்டு வியந்தோம்.

2

கதைப் புத்தகம் படித்துக் கொண்டிருந்த கவிதாவுக்கு நேரம் போனதே தெரியவில்லை. கடிகாரத்தைப் பார்த்த அவள் அதிர்ந்து போனாள். இன்னும் சிறிது நேரத்தில் அவளின் பெற்றோர் வீடு திரும்பிவிடுவர். அம்மா சொல்லிச் சென்ற அனைத்து வேலைகளையும் **மளமள**வெனச் செய்து முடித்தாள். வீடு திரும்பிய பெற்றோர் கவிதாவின் பொறுப்புணர்வைப் பாராட்டினர்.



### இரட்டைக்கிளவிகளும் பொருளும்

**தகதக**
- செந்நிறமான ஒளி / கொழுந்துவிட்டு எரிதல்

**மளமள**
- ஒன்றை விரைவாகவும் சுறுசுறுப்பாகவும் செய்தல்

4.5.3 - மூன்றாம் ஆண்டுக்கான இரட்டைக்கிளவிகளைச் சூழலுக்கேற்பச் சரியாகப் பயன்படுத்துவர்.

**ஆசிரியர் குறிப்பு**
- பத்திகளை வாசிக்கப் பணித்தல்.
- பத்தியில் கொடுக்கப்பட்ட இரட்டைக்கிளவிகளையும் பொருளையும் அறியச் செய்தல்.
- இரட்டைக்கிளவிகளுக்கு ஏற்ப வாக்கியங்கள் உருவாக்கிக் கூறப் பணித்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** சூழலமைவுக் கற்றல் **21 ஆம் நூற்றாண்டு:** கொள்கையுள்ளவர்

நடவடிக்கை நூல் 2 பக்கம் : 29

# பாடம் 5 இலக்கணம்

## தனி வாக்கியம் அறிக.



- மாணவர்கள் பேச்சுப் போட்டியில் பங்கு பெற்றனர்.
- மீராவும் சரளாவும் வெற்றி பெற்றனர்.



- ஔவையார் நீதி நூல்களை இயற்றினார்.
- மாலினியும் மதியழகியும் கட்டுரை எழுதினர்.
- தம்பி மீன் தொட்டியைக் கழுவினான்.



- பறவைகள் இரை தேடின.
- தொழிலாளர்கள் உணவு உண்டனர்.
- உழவன் வயலை உழுதான்.



- மீன்கள் குளத்தில் நீந்தின.
- அப்பா வயலின் வாசித்தார்.



- அம்மா வீணை மீட்டினார்.
- கற்பகம் தேவாரம் பாடினாள்.
- பொற்கொடியும் மலர்க்கொடியும் பூமாலை தொடுத்தனர்.

5.4.6 - தனி வாக்கியம் அறிந்து கூறுவர்; எழுதுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- வாக்கியங்களைப் பிழையற வாசிக்கப் பணித்தல்.
- தனி வாக்கியங்களின் அமைப்பை அறியச் செய்தல்.
- மாணவர் சுயமாகத் தனி வாக்கியங்களை உருவாக்கி எழுதப் பணித்தல்.

நடவடிக்கை நூல் 2 பக்கம் : 30-32



**வி.வ.கூ:** மொழி **உ.சி.தி:** பயன்படுத்துதல் **21 ஆம் நூற்றாண்டு:** அறியும் ஆர்வம்

# தொகுதி 18 அனுபவங்கள்

## பாடம் 1 சிரித்து மகிழ்வோம்

### போலித்தம் செய்திடுக.










1.3.3 - செவிமடுத்தவற்றைப் போலித்தம் செய்வர்.

**ஆசிரியர் குறிப்பு**

- உரையாடலைத் தொனியுடன் வாசிக்கப் பணித்தல்..
- உரையாடலைப் போலித்தம் செய்து காட்டப் பணித்தல்.
- சில சூழல்களைத் தேர்ந்தெடுத்துப் போலித்தம் செய்யப் பணித்தல்.

**வி.வ.கூ:** ஆக்கமும் புத்தாக்கமும் **உ.சி.தி:** சூழலமைவுக் கற்றல் **21 ஆம் நூற்றாண்டு:** தொடர்புகொள்ளும் திறன்

நடவடிக்கை நூல் 2 பக்கம் : 33-35



KPM

# பாடம் 2 புதுமை கண்டேன்

## வாசித்து அறிக.



மாறுபட்ட முறையில் உன் வீட்டுச் சுற்றுப்புறத்தை அமைக்க என்ன செய்வாய்?

- மாலை வேளையில் பூந்தோட்டத்திற்குச் சென்றேன்.
- பலா மரத்தடியில் சற்று நேரம் அமர்ந்தேன்.
- அழகிய பல வண்ண மலர்களைக் கண்டு இரசித்தேன்.
- மல்லிகை மலர்கள் மலர்ந்து மணம் வீசின.
- தென்றல் வீசியதால் இலைகள் அசைந்தன.
- மேற்கில் சூரியன் மறையக் கண்டேன்.
- இரண்டு அணில்கள் கொய்யா மரத்தில் ஏறிச் சென்றன.
- மீன்கள் குளத்தில் நீந்தின.
- இயற்கையின் எழிலைக் கண்டு பூரித்துப் போனேன்.

**சொற்களஞ்சியம்**

- வேளை
- அமர்ந்தேன்
- தென்றல்
- பிம்பமாக
- பூரித்து

2.4.5 - வாக்கியத்தை வாசித்துப் புரிந்து கொள்வர்.

**ஆசிரியர் குறிப்பு**

- வாக்கியங்களைப் பிழையற வாசிக்கப் பணித்தல்.
- வாக்கியங்களில் கூறப்பட்ட கருத்துகளைக் கூறச் செய்தல்.
- வாக்கியங்களைச் சொல்வதெழுதுதல் பயிற்சியாக எழுதப் பணித்தல்.

**வி.வ.கூ:** சுற்றுச்சூழல் நிலைத்தன்மையைப் பராமரித்தல் **உ.சி.தி:** சூழலமைவுக் கற்றல் **21 ஆம் நூற்றாண்டு:** அறியும் ஆர்வம்

நடவடிக்கை நூல் 2 பக்கம் : 36-37

# பாடம் 3 முதல் கதை

## கதை எழுதுக.




3.6.3 - 60 சொற்களில் தொடர்படத்தைக் கொண்டு கதை எழுதுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- தொடர்படத்தைப் பார்த்து உரையாடச் செய்தல்.
- தொடர்படத்தையொட்டிய கதையை உருவாக்கிக் கூறப் பணித்தல்.
- பொருத்தமான கதையை உருவாக்கி எழுதப் பணித்தல்.

**வி.வ.கூ:** ஆக்கமும் புத்தாக்கமும் **உ.சி.தி:** எதிர்காலவியல் **21 ஆம் நூற்றாண்டு:** தகவல் நிறைந்தவர்

நடவடிக்கை நூல் 2 பக்கம் : 38-40


## பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

### உவமைத்தொடரையும் பொருளையும் அறிக.

**நகமும் சதையும்** போல பழகிய தோழர்கள் மூவர் ஒரு நாள் சந்தித்துக் கொண்டனர். ஒரு நதிக்கரையோரம் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தனர். கருமேகங்கள் சூழ திடீரெனக் கனத்த மழை பெய்ய ஆரம்பித்தது. மூவரும் ஒரு மரத்தடியில் நின்று கொண்டனர். விடாமல் பெய்த மழையால் நதியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது.

நண்பர்கள் மூவரும் மறுகரைக்குச் செல்ல வேண்டும். நீந்திச் செல்வதைத் தவிர வேறு வழியில்லை. ஆனால், மூவரில் ஒருவனுக்கு நீச்சல் தெரியாது. எனவே, அடுத்து என்ன செய்யலாம் என யோசித்தனர். மரக்கட்டைகளைச் சேர்த்துத் தெப்பமாகக் கட்டி அதன் மூலம் ஆற்றைக் கடக்கலாம் என நண்பர்களில் ஒருவன் கூறினான். எனினும், மூவரில் இருவருக்கு அவ்வாறு நதியைக் கடப்பதை நினைத்தாலே பயமாக இருந்தது.

நதியில் வெள்ளம் கரைபுரளத் தொடங்கிவிட்டது. எப்படியாயினும் மூவரும் ஒன்றாகவே அக்கரைக்குச் செல்ல வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தனர். தெப்பம் கட்டுவதே சிறந்தது என முடிவெடுத்தனர். மரக்கட்டைகளைச் சேகரித்தனர். கிடைத்த பொருள்களைக் கொண்டு மளமளவென்று தெப்பம் ஒன்றை உருவாக்கினர்.



மூவரும் நதியைக் கடக்க ஆரம்பித்தனர். நதியின் நடுப்பகுதியில் நண்பர்களைப் பயம் ஆட்கொண்டது. மூவருக்கும் அக்கரைக்குச் சென்று சேர்ந்துவிடுவோம் என்ற நம்பிக்கை நிரம்பி இருந்தது. தெப்பம் வலுவிழந்து மூழ்க ஆரம்பித்தது. அதிர்ந்து போன நண்பர்களில் ஒருவன் அலறினான். தடுமாறி நதியில் விழுந்தான். மற்ற இரு நண்பர்களும் பதறிப் போயினர். எனினும், விழுந்த நண்பனின் கையைப் பற்றி இழுத்தனர். சிறிது நேரப் போராட்டத்திற்குப் பிறகு நண்பனை இழுத்துக் கொண்டுவந்து கரையை அடைந்தனர்.

அன்பான நண்பனை ஆபத்தில் அறியலாம் என்பதுபோல நண்பர்கள் மூவரும் ஒருவரை ஒருவர் விட்டுக் கொடுக்கவில்லை. துன்பம் வந்தபோதும் துணை நின்று நட்பை நிலை நாட்டினர். மறுகரைக்கு வந்து சேர்ந்த மூவரும் மனம் மகிழ்ந்தனர். தங்களின் உண்மையான தோழமையை எண்ணி மனம் நெகிழ்ந்தனர். நட்பின் பலம் எத்துணைப் பெரிது என்பதையும் உணர்ந்தனர். இத்தகைய நட்பு என்றும் நீடிக்க வேண்டும் என இறைவனை வேண்டினர்.




### சொற்களஞ்சியம்

- நதிக்கரை
- தெப்பம்
- சேகரித்தனர்
- வலுவிழந்து
- நெகிழ்ந்தனர்

## உவமைத்தொடரும் பொருளும்

**நகமும் சதையும் போல**

- மிக நெருக்கமாக

4.11.1 - மூன்றாம் ஆண்டுக்கான உவமைத்தொடர்களையும் அவற்றின் பொருளையும் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- உவமைத்தொடரை விளக்கும் கதையை வாசிக்கச் செய்தல்.
- உவமைத்தொடரையும் பொருளையும் கூறப் பணித்தல்.
- உவமைத்தொடருக்குப் பொருத்தமான வேறு சூழல் அல்லது கதையை உருவாக்கிக் கூறப் பணித்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** சீர்தூக்கிப் பார்த்தல் **21 ஆம் நூற்றாண்டு:** அன்பானவர்/ பரிவுள்ளவர்

நடவடிக்கை நூல் 2 பக்கம் : 41

# பாடம் 5 இலக்கணம்

## காற்புள்ளி அறிக.




நொறுக்குத் தீனியை மட்டுமே விரும்பித் தின்னும் உன் நண்பனுக்கு நீ கூறும் ஆலோசனை யாவை?




5.5.3 - காற்புள்ளி அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- உரையாடலைப் பிழையற வாசிக்கச் செய்தல்.
- வாக்கியங்களில் காற்புள்ளி பயன்பாட்டு இடங்களை அறியச் செய்தல்.
- நிறுத்தக்குறிகளுக்கேற்ப உரையாடலை நடித்துக் காட்டப் பணித்தல்.

**வி.வ.கூ:** மொழி **உ.சி.தி:** கட்டுவியம் **21 ஆம் நூற்றாண்டு:** அறியும் ஆர்வம்

நடவடிக்கை நூல் 2 பக்கம் : 42

## தொகுதி 19 மனமகிழ் நடவடிக்கைகள்



### பாடம் 1 சிறப்புகள் அறிவோம்

வாசித்துக் கலந்துரையாடுக.



கும்மி அடித்தல் பெண்களுக்குரிய ஆட்டம். இது கிராமப்புறங்களில் மிகவும் புகழ் பெற்றது. வட்டமாக நின்று குனிந்து, நிமிர்ந்து, அசைந்து கும்மியடிப்பார்கள். இதற்கான இசைப்பாடலும் உண்டு. பாடியபடியே ஆடுவது இதன் சிறப்பு.





கோலாட்டம் பற்றி நான் கூறப்போகிறேன் நண்பர்களே, இவ்வாட்டதை சிறிய கோல்களைக் கொண்டு அடித்து ஆடுவார்கள். இதனாலேயே கோலாட்டம் எனப் பெயர் பெற்றது. அழகான பல வண்ணக் கோல்களைப் பயன்படுத்தி ஆண்களும் பெண்களும் ஆடுவார்கள். இதற்குரியப் பாடல்களும் உள்ளன. பாரம்பரிய ஆடைகளை உடுத்திக் கொண்டு பல அசைவுகளுடன் கோலாட்டம் ஆடுவது காண்பதற்குக் கண்கவரும் வகையில் இருக்கும்.





நான் நீச்சல் பற்றிய விவரங்களைப் பகிர்ந்துகொள்ளப் போகிறேன். நீச்சல் விளையாட்டு மட்டுமல்ல சிறந்த உடற்பயிற்சியும்கூட. தலைமுதல் கால்வரை உடலின் அனைத்துப் பகுதிகளுக்கும் பயிற்சி தருவது நீச்சலாகும். உயிரைக் காப்பாற்றவும் பாதுகாக்கவும் சிறந்த கலை எனவும் கருதப்படுகின்றது. உலக அளவில் நீச்சல் முக்கிய விளையாட்டுப் போட்டியாகவும் நடத்தப்படுகின்றது.



நான் விரும்பும் மனமகிழ் நடவடிக்கைகளில், இசை நடனம் முதலிடம் வகிக்கின்றது. இசையுடன் இணைந்து உடல் அசைவுகளைச் செய்யும் நடவடிக்கையாக இது முக்கியத்துவம் பெற்றுள்ளது. நடனம் ஆடுவது போன்ற அசைவுகள் நமது உற்சாகத்தை மேலோங்கச் செய்கின்றன. மேலும், இந்நடவடிக்கையானது மனதிற்கு மிகுந்த மகிழ்ச்சியையும் அளிக்கின்றது என்றால் அது மிகையாகாது. இசையைக் கேட்டுக் கொண்டு உடல் அசைவுகளைச் செய்வது அனைவரையும் ஈர்க்கும் நடவடிக்கையாகவே கருதப்படுகின்றது. இந்நடவடிக்கையானது உடல் உறுப்புகளுக்குச் சிறந்த பயிற்சியாகவும் அமைகின்றது.







மனமகிழ் மையங்களுக்குச் சென்று பலவித நடவடிக்கைகள் மேற்கொள்வதே என் விருப்பமாகும். இவ்வகை மையங்களில், நீரில் சறுக்கும் விளையாட்டுகள், தொங்குச் சக்கர வண்டிகளில் செல்லுதல், தானுந்து விளையாட்டுகள், படகுகள் செலுத்துதல், மிதிவண்டி செலுத்துதல் போன்ற பல நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். அனைவரின் மனதைக் கவரும் வகையில் பலதரபட்ட நடவடிக்கைகள் மனமகிழ் மையங்களில் உள்ளன. வயதுக்கு ஏற்றவாறு அனைத்து நடவடிக்கைகளும் பிரிக்கப்பட்டுள்ளன. சிறுவர்கள் இவ்விடங்களுக்குத் தங்கள் பெற்றோர்களின் துணையுடன் செல்வதே சிறப்பு. மேலும், நாம் நமது பாதுகாப்பைப் பேண வேண்டுவது மிக அவசியமாகும்.



உனக்குப் பிடித்த மனமகிழ் நடவடிக்கைகளைப் பொருத்தமான வரிபடத்தில் எழுதிக் காட்டுக.

1.4.3 - செவிமடுத்த உரையாடலிலுள்ள முக்கியக் கருத்துகளைக் கூறுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- உரையாடலை ஏற்றத் தொனியுடன் வாசிக்கப் பணித்தல்.
- உரையாடலில் கூறப்பட்ட முக்கியக் கருத்துகளை வாசிக்கப் பணித்தல்.
- கண்டறிந்த முக்கியக் கருத்துகளை வரிபடத்தில் எழுதப் பணித்தல்.

**வி.வ.கூ:** உலகளாவிய நிலைத்தன்மை **உ.சி.தி:** ஆய்வுச் சிந்தனை **21 ஆம் நூற்றாண்டு:** அறியும் ஆர்வம்

நடவடிக்கை நூல் 2 பக்கம் : 43

# பாடம் 2 சதுரங்கம்

## வாசித்து அறிக.



சதுரங்கம் மிகவும் புகழ்பெற்ற விளையாட்டுகளில் ஒன்றாகும். சதுரங்கம் என்றால் நான்கு அங்கம் என்று பொருள்படும். அரசர்களுக்கு நான்கு அங்கமாக யானைப்படை, குதிரைப்படை, தேர்ப்படை, காலாட்படை அணி செய்கின்றன. இது சதுரங்கச் சேனை எனப்படும்.

இதனைப் பின்பற்றியே இவ்விளையாட்டும் சதுரங்கம் எனப் பெயர் பெற்றது. சதுரமான ஒரு பலகையில் அறுபத்து நான்கு கட்டங்கள் இருக்கும். இருவர் விளையாடும் விளையாட்டு என்பதால் இருவருக்கும் உரிய கட்டங்கள் நிறம் வேறுபட்டு இருக்கும். கறுப்பு, வெள்ளை என்ற இரு வண்ணங்களில் இக்கட்டங்கள் அமைந்திருக்கும்.

இரண்டு விளையாட்டாளர்களுக்கும் தனித்தனியே ஆளுக்குப் பதினாறு காய்கள் வீதம் மொத்தம் முப்பத்திரண்டு காய்கள் இருக்கும். இக்காய்களைப் புத்திசாலித்தனமாக நகர்த்தி விளையாடுவதே இவ்விளையாட்டின் முக்கிய அம்சமாகும். இக்காய்களில் அரசன், அரசி, அமைச்சர்கள், குதிரைகள், கோட்டைகள், காலாள்கள் எனப் பெயர் சூட்டப்பட்டிருக்கும். எதிர் எதிரே இக்காய்கள் அடுக்கப்பட வேண்டும். விளையாட்டாளர்கள் விதிமுறைப்படியே காய்களை நகர்த்த இயலும். எதிர் விளையாட்டாளரின் அரசனைக் கைப்பற்றுவதே ஆட்டத்தின் நோக்கமாகும்.

6ஆம் நூற்றாண்டிலேயே இவ்விளையாட்டுத் தோன்றியதாகக் கூறப்படுகின்றது. இன்று உலகம் முழுவதும் சதுரங்க விளையாட்டு புகழ்பெற்றுத் திகழ்கின்றது எனலாம்.

மூலம்: சிறுவர் களஞ்சியம்

உலகப் புகழ்பெற்ற இந்தியச் சதுரங்க விளையாட்டாளர் யார் என்று உனக்குத் தெரியுமா?

2.6.1 - விளையாட்டுத் தொடர்பான உரைநடைப் பகுதியை வாசித்துக் கருத்துணர் கேள்விகளுக்குப் பதிலளிப்பர்.

**ஆசிரியர் குறிப்பு**


- உரைநடைப் பகுதியைப் பிழையற வாசிக்கச் செய்தல்.
- உரைநடைப் பகுதியில் கூறப்பட்ட முக்கியக் கருத்துகளை உரையாடச் செய்தல்.
- வாய்மொழி கேள்விகளுக்கு விடை கூறப் பணித்தல்.

நடவடிக்கை நூல் 2 பக்கம் : 44

**வி.வ.கூ:** உலகளாவிய நிலைத்தன்மை **உ.சி.தி:** ஆக்கச் சிந்தனை **21 ஆம் நூற்றாண்டு:** சிந்தனையாளர்

# பாடம் 3 உடற்பயிற்சி

## வாசித்து எழுதுக.




3.6.4 - 60 சொற்களில் கருத்து விளக்கக் கட்டுரை எழுதுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- கொடுக்கப்பட்ட கருத்துகளைக் கொண்டு உரையாடச் செய்தல்.
- கொடுக்கப்பட்ட கருத்துகளை அடிப்படையாகக் கொண்டு கட்டுரை எழுதப் பணித்தல்.

**வி.வ.கூ:** உலகளாவிய நிலைத்தன்மை **உ.சி.தி:** பயன்படுத்துதல் **21 ஆம் நூற்றாண்டு:** சிந்தனையாளர்

# பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

## மரபுத்தொடர்களையும் பொருளையும் அறிக.

கண்ணகி: வான்மதி, நம் வகுப்பில் பயிலும் சேகரனிடம் நீ ஏன் பேசுவதை நிறுத்திக் கொண்டாய்?

வான்மதி: எனக்குச் சேகரின் செய்கைகள் பிடிக்கவில்லை. அவன் அதிகமாகப் பொய் பேசுகிறான். எல்லாவற்றையும் மிகைப்படுத்திப் பேசுவதையே பழக்கமாக்கிக் கொண்டுள்ளான்.

கண்ணகி: நானும் அவன் **அள்ளி விடுவதை** உணர்கின்றேன். என்றாவது ஒருநாள் அவன் நிச்சயம் திருந்திவிடுவான் என்ற நம்பிக்கை இருக்கிறது. அதுவரை சற்றுக் கவனமாகவே பழக வேண்டும்.

வான்மதி: உன் அண்ணன் திடீர் பணக்காரர் ஆகும் திட்டத்தில் ஏமாற்றப்பட்டார் என்று கூறி வருத்தப்பட்டாயே! என்னவாயிற்று?

கண்ணகி: உன்னிடம் அதைப்பற்றிக் கூற மறந்துவிட்டேன் வான்மதி! ஐந்து பேர் கொண்ட ஒரு கும்பல் என் அண்ணனை ஏமாற்றிப் பணம் பறித்துக் **கம்பி நீட்ட** நினைத்தது. ஆனாலும், நமது காவல்துறை அதிகாரிகளிடம் கையும் களவுமாக மாட்டிக் கொண்டனர். என் அண்ணனின் பணத்தையும் மீட்டுக் கொடுத்து விட்டனர்.

வான்மதி: நல்ல வேளை கண்ணகி. பலருக்கு இது நல்ல படிப்பினையாக அமையட்டும்.

### மரபுத்தொடரும் பொருளும்

**அள்ளி விடுதல்**
- ஒன்றை மிகைப்படுத்திக் கூறுதல்

**கம்பி நீட்டுதல்**
- பிறருடைய கவனத்திலிருந்து தப்பித்துப் போய்விடுதல் / நழுவுதல்

### சொற்களஞ்சியம்

- மிகைப்படுத்தி
- கும்பல்
- பறித்து
- மீட்டுக் கொடுத்தார்
- படிப்பினை

4.6.3 - மூன்றாம் ஆண்டுக்கான மரபுத்தொடர்களையும் அவற்றின் பொருளையும் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

**ஆசிரியர் குறிப்பு**
- உரையாடலைப் பாகமேற்று வாசிக்கச் செய்தல்.
- மரபுத்தொடர்களையும் பொருளையும் பற்றி விளக்கிக் கூறப் பணித்தல்.
- மரபுத்தொடர்களுக்குப் பொருத்தமான வாக்கியங்களை உருவாக்கப் பணித்தல்.


நடவடிக்கை நூல் 2 பக்கம் : 46

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** சூழலமைவுக் கற்றல் **21 ஆம் நூற்றாண்டு:** கொள்கையுள்ளவர்

## பாடம் 5 இலக்கணம்

### எழுவாய் - பயனிலை இயைபு அறிக.

**1**



- முயலும் ஆமையும் பந்தயத்தில் ஓடின.
- மிருகங்கள் வேடிக்கைப் பார்த்தன.

**2**

- கயல்விழி திரைச்சீலை தைக்கிறாள்.
- அம்மா துணிகளை மடிக்கிறார்.



**3**



- பொற்கொல்லன் நகைகள் செய்கிறான்.
- வாடிக்கையாளர் பேரம் பேசுகின்றார்.

**4**

- சிறுவர்கள் திடலில் விளையாடுகின்றனர்.
- ஆசிரியர்கள் ஓரமாக நிற்கின்றனர்.




**5**



- தம்பியும் அண்ணனும் ஓவியம் வரைந்தனர்.
- அத்தை வண்ணம் தீட்டினார்.

**6**

- ஓநாய் சருகுமானைத் துரத்தியது.
- சருகுமான் ஓநாயை உதைத்தது.



5.6.1 - எழுவாய் - பயனிலை இயையு அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- வாக்கியங்களைப் பிழையற வாசிக்கச் செய்தல்.
- வாக்கியங்களில் எழுவாய் - பயனிலை இயைபு அறிந்து கூறப் பணித்தல்.
- மாணவர்கள் சரியான எழுவாய் - பயனிலை இயைபுடன் வாக்கியங்கள் அமைக்கப் பணித்தல்..

**வி.வ.கூ:** மொழி **உ.சி.தி:** பயன்படுத்துதல் **21 ஆம் நூற்றாண்டு:** அறியும் ஆர்வம்

நடவடிக்கை நூல் 2 பக்கம் : 47

## செயப்படுபொருள் அறிக.




**அ**

நீலவாணன் பேரங்காடிக்குச் சென்றான். இளஞ்சிவப்பு நிறச் சட்டை வாங்கினான். அழகிய பொம்மைகளைத் தேடினான். பல வண்ண வாழ்த்து அட்டைகளைக் கண்டான். பொருள்களுக்கான பணத்தைச் செலுத்தினான். தன்னை அழைத்துச் செல்ல கைப்பேசியில் தந்தையைத் தொடர்பு கொண்டான். தன் தந்தையின் வருகைக்காகக் காத்திருந்தான்.

**ஆ**



தமிழரசி தோட்டத்தில் முளைத்த புற்களை வெட்டினாள். மண்வெட்டியால் சிறுசிறு குழிகளைத் தோண்டினாள். மல்லிகைச் செடிகளை நட்டாள். செடிகள் செழிக்க உரம் இட்டாள். எல்லாப் பூச்செடிகளுக்கும் நீர் ஊற்றினாள். மல்லிகைச் செடிகள் பூத்துக் குலுங்கின. தமிழரசி பூக்களைப் பார்த்து மகிழ்ந்தாள். நண்பர்களுடன் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொண்டாள். மேலும், சில வண்ணப் பூச்செடிகளை நட எண்ணம் கொண்டாள்.

### தகவல் களம்

**கழிவறையா? கழிப்பறையா?**
**கழிவறை** என்றால் மிக மோசமான அறையாகும்.
**கழிப்பறை** என்றால் கழிவுப் பொருள்களைக் கழிக்கின்ற அறையாகும்.

### சொற்களஞ்சியம்

- பேரங்காடி
- செலுத்தினான்
- செழிக்க
- பூத்துக் குலுங்கின
- எண்ணம்

5.6.2 - செயப்படுபொருள் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

**ஆசிரியர் குறிப்பு**
- பத்திகளைப் பிழையற வாசிக்கச் செய்தல்.
- வாக்கியங்களில் உள்ள செயப்படுபொருளைப் பட்டியலிட்டுக் கூறச் செய்தல்.
- செயப்படுபொருள் உள்ள வாக்கியங்களை அமைக்கப் பணித்தல்.

நடவடிக்கை நூல் 2 பக்கம் : 48

**வி.வ.கூ:** மொழி **உ.சி.தி:** சீர்தூக்கிப் பார்த்தல் **21 ஆம் நூற்றாண்டு:** கொள்கையுள்ளவர்

# தொகுதி 20 பாதுகாப்பு

## பாடம் 1 எங்கும் பாதுகாப்பு

### வினாக்களுக்குப் பதில் அளித்திடுக.




1.5.4 - ஏன், எப்படி, எவ்வாறு, எதற்கு எனும் கேள்விகளுக்கேற்பப் பதில் கூறுவர்.

நடவடிக்கை நூல் 2 பக்கம் : 49

**ஆசிரியர் குறிப்பு**

- சூழலைப் பார்த்து உரையாடச் செய்தல்.
- வினாச் சொற்களைப் பயன்படுத்தி வினாக்கள் உருவாக்கப் பணித்தல்.
- குழு முறையில் பொருத்தமான வினாக்களை கேட்டு எழுதப் பணித்தல்.

**வி.வ.கூ:** அறிவியலும் தொழில்நுட்பமும் **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21 ஆம் நூற்றாண்டு:** தகவல் நிறைந்தவர்

# பாடம் 2 சாலை விதிமுறைகள்


## வாசித்து அறிக.

1



நாங்கள் சாலையைக் கடக்க மேம்பாலத்தைப் பயன்படுத்துவோம்.

2




நான் உந்துருளியில் செல்லும்போது அவசியம் தலைக்கவசம் அணிவேன்.

3



மகிழுந்தில் பயணிக்கும்போது பாதுகாப்புப் பட்டையை அணிவேன்.

4



பாதசாரிகளும் வாகனமோட்டிகளும் சமிக்ஞை விளக்கின் ஒளிர்தலுக்கு ஏற்ப சென்றனர்.

5



பார்வையை இழந்த நான் சிறப்புப் பாதையில் பாதுகாப்பாக நடக்கிறேன்.

2.4.5 - வாக்கியத்தை வாசித்துப் புரிந்து கொள்வர்.

**ஆசிரியர் குறிப்பு**

- வாக்கியங்களைப் பிழையற வாசிக்கப் பணித்தல்.
- வாக்கியங்களில் கூறப்பட்ட விதிமுறைகளைக் கூறச் செய்தல்.
- வாக்கியங்களைச் சொல்வதெழுதுதல் பயிற்சியாக எழுதப் பணித்தல்.

நடவடிக்கை நூல் 2 பக்கம் : 50

**வி.வ.கூ:** உலகளாவிய நிலைத்தன்மை **உ.சி.தி:** பயன்படுத்துதல் **21 ஆம் நூற்றாண்டு:** கொள்கையுள்ளவர்

# பாடம் 3 சமிக்ஞை விளக்கு

## வாசித்து தன்கதை எழுதுக.




3.6.1 - 60 சொற்களில் தன்கதை எழுதுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- கொடுக்கப்பட்ட குறிப்புகளை வாசித்து அறியச் செய்தல்.
- குறிப்புகளைப் பயன்படுத்தித் தன்கதை கூறப் பணித்தல்.
- தன்கதை கூறும் கட்டுரையைப் பிழையற எழுதப் பணித்தல்.

**வி.வ.கூ:** அறிவியலும் தொழில்நுட்பமும் **உ.சி.தி:** பயன்படுத்துதல் **21 ஆம் நூற்றாண்டு:** கொள்கையுள்ளவர்


நடவடிக்கை நூல் 2 பக்கம் : 51-53

பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

## பழமொழியையும் பொருளையும் அறிக.



வணக்கம் ஐயா. நான் செந்தில்நாதன் பேசுகிறேன். நீங்கள் திரு. செங்குட்டுவன்தானே ஐயா?



வணக்கம். நான் செங்குட்டுவன்தான் பேசுகிறேன்.



ஐயா! பணச்சிக்கல் ஏற்பட்டதால் எனது படிப்பை அன்று தொடர முடியாமல் தவித்தேன். நீங்கள்தான் தக்க சமயத்தில் எனக்குப் பணம் கொடுத்து மேற்படிப்புக்கு ஏற்பாடு செய்தீர்கள்.



ஓ! அப்படியா! மிக்க மகிழ்ச்சி. இப்போது என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்?



தலைநகரில் உள்ள ஒரு நிறுவனத்தில் உயர் அதிகாரியாகப் பணிபுரிகின்றேன். என் வெற்றிக்குக் காரணம் நீங்கள் செய்த உதவிதான் ஐயா! எனது இன்றைய சிறப்பான வாழ்வுக்கு ஒளியேற்றியவர் நீங்கள். உங்களை என்றும் மறவேன். உங்கள் நல்வாழ்வுக்கு என்றென்றும் இறைவனை வேண்டுவேன்.

### பழமொழியும் பொருளும்

**உப்பிட்டவரை உள்ளளவும் நினை.**

- உதவி செய்தவரின் நன்றியை நம் உயிருள்ளவரை மறக்கக்கூடாது.

4.7.3 - மூன்றாம் ஆண்டுக்கான பழமொழிகளையும் அவற்றின் பொருளையும் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- உரையாடலைப் பிழையற வாசிக்கப் பணித்தல்.
- பழமொழியையும் பொருளையும் மனனம் செய்யப் பணித்தல்.
- பழமொழிக்குப் பொருத்தமான வாக்கியங்களை உருவாக்கப் பணித்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** கட்டுவியம் **21 ஆம் நூற்றாண்டு:** கொள்கையுள்ளவர்

நடவடிக்கை நூல் 2 பக்கம் : 54

# பாடம் 5 இலக்கணம்

## காற்புள்ளி அறிக.

**அ**

கந்தன் கடைக்குச் சென்றான். கடையில் வெற்றிலை, பூ, பழங்கள், இனிப்புப் பண்டங்கள் போன்றவற்றை வாங்கினான். கடைக்காரரிடம் பொருள்களைப் பெற்றுக் கொண்டு பணத்தைச் செலுத்த பணப்பையைத் திறந்தான். ஆனால், அதில் பணம் இல்லை. “கடவுளே! என்ன செய்வேன்? அம்மா கொடுத்த பணத்தை எங்கு வைத்தேன்?” என்று மனம் கலங்கினான்.



**ஆ**



மணிமலர் நூலகம் சென்று, நூல்களைத் தேர்ந்தெடுத்து, வாசித்து மகிழ்ந்தாள். ஆயினும், தினமும் செல்ல முடியவில்லையே என வருத்தம் அடைந்தாள். திங்கள், செவ்வாய், புதன் ஆகிய கிழமைகளில் கட்டாயம் அங்குச் சென்று வாசிப்பாள். எனினும், மாணவர்கள் சிலர் நூல்நிலையத்தின் விதிமுறைகளைக் கடைப்பிடிக்காது இருந்தனர். இதனால், மணிமலர் அவர்கள்மீது கோபம் கொண்டாள். எனவே, நூலகப் பொறுப்பாசிரியரிடம் அவர்களைப் பற்றிப் புகார் கொடுக்க முடிவு செய்தாள்.

### சொற்களஞ்சியம்

- பண்டங்கள்
- கலங்கினான்
- வருத்தம்
- விதிமுறைகள்
- புகார் கொடுக்க

5.5.3 - காற்புள்ளி அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- வாசிப்புப் பகுதியை வாசித்து அறியச் செய்தல்.
- காற்புள்ளி பயன்படுத்திய வாக்கியங்களை வாசிக்கச் செய்தல்.
- மாணவர்கள் பொருத்தமான சில வாக்கியங்களை உருவாக்கப் பணித்தல்.

**வி.வ.கூ:** மொழி **உ.சி.தி:** பயன்படுத்துதல் **21 ஆம் நூற்றாண்டு:** தகவல் நிறைந்தவர்

நடவடிக்கை நூல் 2 பக்கம் : 55



# பாடம் 1 எங்கள் பண்டிகைகள்

## வினாக்கள் கேட்டு உரையாடுக.





எப்படி

ஏன்





சபா, சரவாக் மாநிலங்களில் கொண்டாடப்படும் பண்டிகைகளைக் கூறுக.




1.6.4 - ஏன், எப்படி, எவ்வாறு, எதற்கு எனும் வினாச் சொற்களைச் சரியாகப் பயன்படுத்திக் கேள்விகள் கேட்பர்.

**ஆசிரியர் குறிப்பு**

- பண்டிகை தொடர்பான சூழல்கள் பற்றி உரையாடச் செய்தல்.
- வினாச் சொற்களைப் பயன்படுத்திப் பொருத்தமான கேள்விகளைக் கேட்கப் பணித்தல்.
- சூழல் படத்தைப் பார்த்து வினாக்களைக் கேட்கப் பணித்தல்.

**வி.வ.கூ:** உலகளாவிய நிலைத்தன்மை **உ.சி.தி:** ஆய்வுச் சிந்தனை **21 ஆம் நூற்றாண்டு:** அறியும் ஆர்வம்

நடவடிக்கை நூல் 2 பக்கம் : 56

## பாடம் 2 திருமுறை விழா

### ஏற்றத் தொனியுடன் வாசித்திடுக.

கோலாலம்பூர், 6 அக் -
தேசிய அளவிலான திருமுறை விழா வெகு விமரிசையாக நடைபெற்றது. இவ்விழா தலைநகரிலுள்ள நகராண்மைக் கழகப் பொது மண்டபத்தில் நடைபெற்றது.

திருமுறை விழாவில் தேவாரம், ஆன்மிக நாடகம், கோலப்போட்டி, சமயப் பேச்சுப்போட்டி, சமயப் புதிர்ப்போட்டி போன்ற போட்டிகள் இடம்பெற்றன. மாநில அளவில் நடத்தப்பட்டு வெற்றி பெற்ற தமிழ்ப்பள்ளி மாணவர்கள் தேசிய அளவில் நடத்தப்பட்ட இப்போட்டிகளில் பங்கு பெற்றனர்.

இப்போட்டியானது ஆண்டுதோறும் நடைபெறும் ஒரு நிகழ்ச்சியாகும். தமிழ்ப்பள்ளி மாணவர்களிடையே இலைமறை காயாக இருக்கும் திறமைகளை வெளிக்கொணர சிறந்த தளமாக இவ்விழா அமைகின்றது. பல மாநிலங்களிலிருந்தும் மாணவர்கள் வருகை புரிந்து போட்டிகளில் கலந்து சிறப்பித்தனர். மாணவர்களின் தன்னம்பிக்கை, திறமை, ஆற்றல், உத்வேகம் அனைத்தும் போற்றத்தக்கதாகவே அமைந்தன. போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு மாண்புமிகு கல்வித் துணையமைச்சர் பரிசுகளை வழங்கிப் பாராட்டினார்.







2.3.5 - செய்தியைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப வாசிப்பர்.

**ஆசிரியர் குறிப்பு**

- செய்தியை வாசித்து அறியச் செய்தல்.
- ஏற்றத் தொனியுடன் செய்தியை வாசிக்கச் செய்தல்.
- வாய்மொழியாக வினாக்கள் கேட்டு உரையாடப் பணித்தல்.

**வி.வ.கூ:** தகவல் தொடர்புத் தொழில்நுட்பம் **உ.சி.தி:** சீர்தூக்கிப் பார்த்தல் **21 ஆம் நூற்றாண்டு:** தகவல் நிறைந்தவர்

நடவடிக்கை நூல் 2 பக்கம் : 57

# பாடம் 3 இறைபக்தி

## படத்தைப் பார்த்துக் கதை எழுதுக.




3.6.2 - 60 சொற்களில் தனிப்படத்தைக் கொண்டு கதை எழுதுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- படத்தைப் பார்த்து உரையாடப் பணித்தல்.
- திருநாவுக்கரசர் கதையைப் பதிவு நாடா மூலம் கேட்கப் பணித்தல்.
- படத்தின் சூழலை அடிப்படையாகக் கொண்டு கதை எழுதப் பணித்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** சீர்தூக்கிப் பார்த்தல் **21 ஆம் நூற்றாண்டு:** கொள்கையுள்ளவர்


நடவடிக்கை நூல் 2 பக்கம் : 58

## பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

### பல்வகைச் செய்யுளையும் பொருளையும் அறிக.

மகன்: அப்பா, தேவார வகுப்பில் இன்று நான் திருநாவுக்கரசர் பற்றித் தெரிந்து கொண்டேன்.

அப்பா: அப்படியா! மிகவும் சிறப்பாயிற்றே! நீ தெரிந்துகொண்டதை எனக்கும் கூறுவாயா?




மகன்: ஆமாம் அப்பா. சமண சமயத்தில் சேர்ந்த சிறிது காலத்துக்குப் பிறகு சூலை நோய்க்கு ஆளாகி அவதிப்பட்டார்.

அப்பா: அவரின் தமக்கை திலகவதி அம்மையார் இறைவனை வேண்டச் செய்து தம்பியின் சூலை நோயைக் குணமடைய வழிகாட்டினார்.

மகன்: நீங்களும் தெரிந்து வைத்திருக்கிறீர்களே அப்பா. மருள் நீக்கியார் குணமடைந்த பிறகு மீண்டும் சைவ சமயத்திற்கு திரும்பினார். இதனால், சமணர்கள் கோபம் கொண்டனர். அவரைத் தண்டிக்கும் பொருட்டுச் சுண்ணாம்புக் காளவாயிலில் இட்டுத் துன்புறுத்தினர். திருநாவுக்கரசர் இறைவனின் திருவடியைப் போற்றி மனம் உருகிப் பாடினார்; இன்னலிலிருந்து மீண்டார்.

அப்பா: அச்சமயம் இறைவனை நினைத்து திருநாவுக்கரசர் ‘மாசில் வீணையும்’ என்று தொடங்கும் பாடலைப் பாடினார். அப்பாடலை இராகத்தோடு உன்னால் பாட இயலுமா?

மகன்: கண்டிப்பாக முடியும் அப்பா.

**மாசில் வீணையும் மாலை மதியமும்**
**வீசு தென்றலும் வீங்(கு)இள வேனிலும்**
**மூசு வண்டறை பொய்கையும் போன்றதே**
**ஈசன் எந்தை இணையடி நீழலே.**




## செய்யுளும் மொழியணியும்

**மாசில் வீணையும் மாலை மதியமும்**
**வீசு தென்றலும் வீங்(கு)இள வேனிலும்**
**மூசு வண்டறை பொய்கையும் போன்றதே**
**ஈசன் எந்தை இணையடி நீழலே.**

- குற்றமற்ற வீணையின் இசை காதுக்கு இனிமை அளிப்பது போலவும் மாலை வேளை உதிக்கும் சந்திரன் கண்களுக்குக் குளிர்ச்சியளிப்பது போலவும் மென்காற்று உடலுக்கு இதமளிப்பது போலவும் இளவேனில் பருவம் உண்பதற்குச் சுவையான பழங்களைத் தருவது போலவும் தாமரை மலர்களிலுள்ள தேனை உறிஞ்ச வண்டுகள் ரீங்காரமிடும் குளிர்ச்சியான தடாகம் போலவும் பேரின்பத்தை அளிக்கவல்லது என் தந்தையாகிய இறைவனின் திருவடிகளின் நிழலாகும்.

4.10.1 மூன்றாம் ஆண்டுக்கான பல்வகைச் செய்யுளையும் அதன் பொருளையும் அறிந்து கூறுவர்; எழுதுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- உரையாடலை வாசித்துப் புரிந்து கொள்ளச் செய்தல்.
- செய்யுளையும் பொருளையும் மனனம் செய்து கூறப் பணித்தல்
- செய்யுளையும் பொருளையும் அழகான கையெழுத்தில் எழுதப் பணித்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** ஆய்வுச் சிந்தனை **21 ஆம் நூற்றாண்டு:** அறியும் ஆர்வம்

நடவடிக்கை நூல் 2 பக்கம் : 59


# பாடம் 5 இலக்கணம்

## தனி வாக்கியம் அறிக.

சிங்கம் ஒன்று காட்டில் வசித்தது. அதற்குக் கடுமையான பசி உண்டானது. சிங்கம் உணவு தேடி அலைந்தது. நெடுந்தூரம் நடந்து சென்றது; களைப்படைந்தது; அப்படியே படுத்துவிட்டது.

மரத்தடியில் முயல் ஒன்று தூங்கிக் கொண்டிருந்தது. சிங்கம் முயலைப் பிடிக்க எண்ணம் கொண்டது. அவ்வழியே புள்ளிமான் ஒன்று ஓடி வருவதைக் கண்டது. ஆதலால், சிறிய உருவம் கொண்ட முயல் தனக்குத் தேவையில்லை என நினைத்தது சிங்கம். புள்ளிமானைத் துரத்திச் சென்றது. புள்ளிமான் புதரில் ஓடி மறைந்து கொண்டது. சிங்கம் சுற்றும் முற்றும் தேடியது.

சிங்கத்தின் கண்களுக்கு எதுவும் தென்படவில்லை. மீண்டும் முயலைத் தேடி வந்தது. முயல் அவ்விடத்தை விட்டு ஓடிவிட்டது. சிங்கம் ஏமாற்றம் அடைந்தது. தன் பேராசையை நினைத்து வருந்தியது. மீண்டும் உணவிற்காகக் காட்டிற்குள் வேட்டையைத் தொடர்ந்தது.



5.4.6 - தனி வாக்கியம் அறிந்து கூறுவர்; எழுதுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- கதையை வாசித்து அறியச் செய்தல்.
- கதையில் கூறப்பட்ட தனி வாக்கியங்களைக் கண்டறிந்து கூறப் பணித்தல்.
- மாணவர்கள் சுயமாகச் சில தனி வாக்கியங்கள் அமைத்துக் கூறப் பணித்தல்.

**வி.வ.கூ:** மொழி **உ.சி.தி:** உருவாக்குதல் **21 ஆம் நூற்றாண்டு:** அறியும் ஆர்வம்


நடவடிக்கை நூல் 2 பக்கம் : 60

# தொகுதி 22 இலக்கியம்

## பாடம் 1 குழந்தைக் கவிஞர்

### கதையைக் கூறுக.

- சிறுவன் பள்ளிக்குச் செல்வான்
- பெற்றோர் கொடுக்கும் பணத்தைச் சேர்த்தல்
- அப்பணத்தில் புத்தகங்கள் வாங்குதல்
- அப்புத்தகத்தை நண்பர்களுக்கும் இரவல் கொடுத்தல்
- சிறுவயதிலேயே நூலகமாகத் திகழ்தல்.
- அவர்தான் குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா
- குழந்தைகளிடம் அதிக அன்பு
- அவரின் மகள் அலமு
- ஒருநாள் அவள் அழுதல்
- அழுகையை நிறுத்த கண்ணாடியைக் காட்டுதல்
- மகள் சிரித்தல்
- குழந்தைகள் மகிழ பாடல்கள் இயற்றுதல்
- எளிய பாடல்
- சிரிக்கவும் சிந்திக்கவும்





**இணையத் தளம்**
https://drive.google.com/open?id=1RA3EOUlztn7I6kEta0F49LMTWNQUgbPU

1.8.3 - குறிப்புகளைத் துணையாகக் கொண்டு கதை கூறுவர்.

**ஆசிரியர் குறிப்பு**
- குழந்தைக் கவிஞர் தொடர்பான குறிப்புகளை வாசிக்கப் பணித்தல்.
- குறிப்புகளைக் கொண்டு கதையை உருவாக்கச் செய்தல்.
- கதையை முழுமையாகக் கூறப் பணித்தல்.

**வி.வ.கூ:** மொழி **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21 ஆம் நூற்றாண்டு:** அறியும் ஆர்வம்

நடவடிக்கை நூல் 2 பக்கம் : 61


KPM

# பாடம் 2 ஐம்பெரும் காப்பியங்கள்

## வாசித்து அறிக.




சீவக சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி என்பன தமிழில் ஐம்பெருங்காப்பியங்கள் ஆகும்.

சிலப்பதிகாரம் மிகச் சிறந்த காப்பியங்களில் ஒன்றாகும். இக்காப்பியத்தை எழுதியவர் இளங்கோவடிகள். கோவலன் கண்ணகி கதையினைக் கூறும் காப்பியம் இதுவாகும். சேர நாடு, பாண்டிய நாடு, சோழ நாடு என்ற மூன்று நாடுகளின் பெருமைகளைக் கூறும் காப்பியமாகவும் அமைகின்றது.

சோழ நாட்டில் பிறந்த கண்ணகி, பாண்டிய நாடு சென்று நீதி கேட்டு, சேர நாட்டில் தெய்வமாகும் கதையைக் கூறுகிறது.

சிலப்பதிகாரத்தின் தொடர்ச்சியாக மணிமேகலை எனும் காப்பியம் அமைந்துள்ளது. இது கோவலன் மாதவியின் மகளான மணிமேகலையின் கதையாகும். மணிமேகலையின் துறவு என்ற பெயரும் இக்காப்பியத்திற்கு உண்டு. சிலப்பதிகாரமும் மணிமேகலையும் இரட்டைக் காப்பியம் என அழைக்கப்படுகிறது. மணிமேகலையை எழுதியவர் சீத்தலைச் சாத்தனார் என்பவராவார்.

சீவக சிந்தாமணி எனும் காப்பியம் திருத்தக்க தேவர் என்பவரால் இயற்றப்பட்டது. இக்காப்பியத்தை மணநூல் என்றும் அழைப்பர். வளையாபதி எனும் காப்பியம் சமண நூல் எனும் பெயரைப் பெற்றுள்ளது. குண்டலகேசி என்பதும் ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றாகும். இக்காப்பியமானது பௌத்த மதக் காப்பியமாகக் கருதப்படுகின்றது. குண்டலகேசி எனும் பெண், காளன் எனும் கள்வனை மணந்ததாகக் கூறும் கதையாக இக்காப்பியம் அமைகின்றது.

**இணையத் தளம்**
https://ilakkiyam.com/iyal/25_tamil

2.4.6 - பத்தியை வாசித்துப் புரிந்து கொள்வர்.

நடவடிக்கை நூல் 2 பக்கம் : 62-63

**ஆசிரியர் குறிப்பு**
- வாசிப்புப் பகுதியைப் பிழையற வாசிக்கப் பணித்தல்.
- ஐம்பெருங்காப்பியங்கள் பற்றி உரையாடச் செய்தல்.
- வாய்மொழியாகக் கேள்விகள் கேட்டு விடையளிக்கப் பணித்தல்.

**வி.வ.கூ:** மொழி **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21 ஆம் நூற்றாண்டு:** சிந்தனையாளர்


# பாடம் 3 நெல்லிக்கனி

## படங்களைப் பார்த்துக் கதையை எழுதுக.




1

அதியமான் வேட்டை
மலையடிவாரம் - ஓய்வு
நெல்லி மரம் - நெல்லிக்கனி



2

நீண்ட நாள் உயிர்வாழ
அபூர்வகனி - ஔவையார்
உண்ண வேண்டும்



3

ஔவையிடம் கனியைக் - அதியமானின்
கொடை - ஔவையார் பாராட்டு -
கிடைப்பதற்கு அரிய கனி - தன்னலம் கருதா -
அதியமான்

**தகவல் களம்**

**கடையெழு வள்ளல்கள்**

1 பாரி
2 திருமுடிக்காரி
3 அதியமான்
4 பேகன்
5 வல்வில் ஓரி
6 ஆய்
7 நள்ளி

3.6.3 - 60 சொற்களில் தொடர்படத்தைக் கொண்டு கதை எழுதுவர்.

**ஆசிரியர் குறிப்பு**


- தொடர்படங்களைப் பார்த்து உரையாடப் பணித்தல்.
- குறிப்புகளை வாசித்துக் கதையை உருவாக்கிக் கூறப் பணித்தல்.
- குறிப்புகளைக் கொண்டு முழுக் கதையைக் கூறி எழுதப் பணித்தல்.


**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** சூழலமைவுக் கற்றல் **21 ஆம் நூற்றாண்டு:** அன்பானவர்/ பரிவுள்ளவர்

நடவடிக்கை நூல் 2 பக்கம் : 64-66

## பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

### திருக்குறளையும் பொருளையும் அறிக.






**இணையத் தளம்**

https://youtu.be/jzZZ5୨0pPpE

## திருக்குறளும் பொருளும்

**தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே**
**நாவினாற் சுட்ட வடு. (129)**

- நெருப்பினால் சுட்ட புண் வெளியில் தழும்பு இருந்தாலும் உள்ளே ஆறிவிடும். ஆனால், உள்ளம் புண்படும்படி பேசுகின்ற பேச்சால் ஏற்படுகின்ற பாதிப்பு என்றும் மறையாது.

4.3.3 - மூன்றாம் ஆண்டுக்கான திருக்குறளையும் அதன் பொருளையும் அறிந்து கூறுவர்; எழுதுவர்.

**ஆசிரியர் குறிப்பு**
- உரையாடலைப் பாகமேற்று வாசிக்கச் செய்தல்.
- திருக்குறளையும் பொருளையும் மனனம் செய்யப் பணித்தல்.
- திருக்குறளையும் பொருளையும் சொல்வதெழுதுதல் பயிற்சியாக எழுதச் செய்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** சீர்தூக்கிப் பார்த்தல் **21 ஆம் நூற்றாண்டு:** கொள்கையுள்ளவர்

நடவடிக்கை நூல் 2 பக்கம் : 67

## பாடம் 5 இலக்கணம்

### பண்புப்பெயர் அறிக



புதிய ஆண்டே வருக
புதுமை யாவும் தருக
துதிக்கும் எங்கள் வாழ்வில்
தூய்மை சேர்க்க வருக!

நாடு செழிக்க வருக
நன்மை விளைய வருக
வீடு தோறும் இன்பம்
விளைய நீயும் வருக!

மானம் போற்ற வருக
மடமை நீக்க வருக
போன ஆண்டின் துயரம்
போக்க நீயும் வருக!

- குழந்தைக் கவிதைகள்

நம் நாட்டில் உள்ள சிறப்புகள் சிலவற்றைக் கூறுக.

5.3.15 - பண்புப்பெயர் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- கவிதையை நயமுடன் வாசிக்கச் செய்தல்.
- கவிதையில் காணும் பண்புப்பெயர்களை வாசிக்கப் பணித்தல்.
- மாணவர்கள் சுயமாகப் பண்புப்பெயர்களை உருவாக்கிக் கூறப் பணித்தல்.

**வி.வ.கூ:** நாட்டுப் பற்று **உ.சி.தி:** ஆக்கச் சிந்தனை **21 ஆம் நூற்றாண்டு:** சிந்தனையாளர்

நடவடிக்கை நூல் 2 பக்கம் : 68-69

# தொழிற்பெயர் அறிக

1




தமிழ்மொழிப் பாடத்தைச் சிறப்புறக் கற்பித்தல் என்பதே என் ஆசிரியரின் தினசரி நோக்கமாகும்.

2

தன் தோட்டத்தில் உள்ள மல்லிகை மலர்களைக் கொய்தல், அவற்றைச் சரமாகவும் மாலையாகவும் தொடுத்தல், பட்டணத்தில் உள்ள பூக்கடைகளுக்கு அனுப்புதல் போன்றவையே அப்பாவின் வேலையாகும்.



3



ஓய்வு நேரங்களில் இசையைக் கேட்டல், இசைக் கருவிகளை இசைத்தல் என்பன அண்ணனின் மகிழியாகும்.

4

தாத்தாவும் பாட்டியும் தங்களின் வீட்டுப் பின்புறத்தில் காய்கறிகளைப் பயிர் செய்தல், உரம் இடுதல், முற்றிய காய்களைப் பறித்தல் போன்ற பணிகளை முழு நேரத் தொழிலாகச் செய்கின்றனர்.



5.3.16 - தொழிற்பெயர் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

நடவடிக்கை நூல் 2 பக்கம் : 70

**ஆசிரியர் குறிப்பு**


- பத்திகளைப் பிழையற வாசிக்கப் பணித்தல்.
- பத்திகளில் உள்ள தொழிற்பெயர்களை அறிந்து வாசிக்கச் செய்தல்.
- தொழிற்பெயர்களில் மாணவர்கள் வாக்கியங்கள் அமைக்கப் பணித்தல்.

**வி.வ.கூ:** தொழில்முனைப்பு **உ.சி.தி:** ஆக்கச் சிந்தனை **21 ஆம் நூற்றாண்டு:** கொள்கையுள்ளவர்


# தொகுதி 23 தகவல் தொடர்புத் தொழில்நுட்பம்

## பாடம் 1 கணினியின் தேவை

**கேள்விகள் கேட்டு உரையாடுக.**




கணினியால் ஏற்படும் நன்மைகள் யாவை?




1.6.4 - ஏன், எப்படி, எவ்வாறு, எதற்கு எனும் வினாச் சொற்களைச் சரியாகப் பயன்படுத்திக் கேள்விகள் கேட்பர்.

**ஆசிரியர் குறிப்பு**

- கணினி பயன்பாடு தொடர்பான படங்களைப் பார்த்து உரையாடப் பணித்தல்.
- படங்களுக்குப் பொருத்தமான வினாக்களைக் கேட்கப் பணித்தல்.
- குழு முறையில் வினாக்கள் தயாரிக்கும் பயிற்சியைச் செய்ய பணித்தல்.

**வி.வ.கூ:** தகவல் தொடர்புத் தொழில்நுட்பம் **உ.சி.தி:** ஆய்வுச் சிந்தனை **21 ஆம் நூற்றாண்டு:** தொடர்பு கொள்ளும் திறன்

நடவடிக்கை நூல் 2 பக்கம் : 71

# பாடம் 2 உலகம் நம் கைகளில்

## வாசித்து அறிக.

### இணையம்

இணையம் என்பது பல கணினி வலையமைப்புகளின் கூட்டிணைப்பைக் குறிக்கின்றது. இணையம் எனும் சொல் செப்புக் கம்பிகளினாலும் ஒளிநார் இழைகளினாலும் இணைக்கப்பட்டுள்ள கணினி வலைகளைக் குறிக்கும். ஜே.சி.ஆர் லிக்லைடர் என்பவர் இணையத் தந்தையாக அழைக்கப்படுகின்றார்.

### மின்னஞ்சல்

மின்னஞ்சல் என்பது தகவல்களைக் கணினியின்வழி பரிமாறிக்கொள்ளும் முறையாகும். கணினியும் இணையத் தொடர்பும் இருந்தால் நாம் மின்னஞ்சலை மற்றவர்களுக்கு அனுப்பலாம். இப்படி மின்னியல் மூலம் பெற்றுக் கொள்ளும் தகவலையே மின்னஞ்சல் என்று பெயரிட்டனர். மின்னஞ்சல் முறையை உருவாக்கியவர் சிவா ஐயாதுரை. இவர் ஒரு தமிழர் என்பது பெருமைக்குறியதாகும்.

### புலனம்

புலனம், கட்செவி மடல் என்ற மற்றொரு பெயரையும் கொண்டுள்ளது. கைப்பேசியின் வழி செய்திகள், படங்கள், நிழல்படங்கள், ஒலிக்கோப்புகள் எனப் பலவற்றை நண்பர்களுக்கு அனுப்பிப் பகிர்ந்துகொள்கின்றனர். ஒருவரின் இருப்பிட வரைபடத்தையும்கூட பகிர்ந்துகொள்ளும் வசதிகள் புலனத்தில் உண்டு. புலனத்தை உருவாக்கியவர்கள் ஜோன் கோம் மற்றும் பிரைன் அக்டன் ஆவர்.

இணைய வசதிகள் சில தீமைகளையும் அளிக்கின்றன. அவை யாவை?

2.3.4 - துணுக்குகளைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப வாசிப்பர்.

**ஆசிரியர் குறிப்பு**

- துணுக்குகளைப் பிழையற வாசிக்கப் பணித்தல்.
- வாய்மொழியாகக் கேள்விகள் கேட்டு உரையாடப் பணித்தல்.
- முக்கியக் கருத்துகளைத் தெரிவு செய்து கூறப் பணித்தல்.

நடவடிக்கை நூல் 2 பக்கம் : 72

**வி.வ.கூ:** தகவல் தொடர்புத் தொழில்நுட்பம் **உ.சி.தி:** ஆய்வுச் சிந்தனை **21 ஆம் நூற்றாண்டு:** தொடர்புகொள்ளும் திறன்

## பாடம் 3 நன்மையும் தீமையும்

### வாசித்து எழுதுக.



திறன்பேசி

| நன்மைகள் | தீமைகள் |
|---|---|
| பிறருடன் சுலபமான முறையில் தொடர்பு கொள்ளலாம். | அதிகமாகப் பயன்படுத்துவதால் மூளை, காது, கண் ஆகிய உறுப்புகள் பாதிக்கப்படுகின்றன. |
| செய்திகள் அனுப்பவும் ஒளிப்படங்கள் எடுக்கவும் பயன்படுத்தலாம். | வாகனம் செலுத்தும்போது பயன்படுத்துவதால் சாலை விபத்துகள் ஏற்படுகின்றன. |
| முக்கியத் தேதி, நாள்களைச் சுலபமாகப் பதிவு செய்யலாம். | தீய வழிகளில் பிறரை ஏமாற்றுதல், மிரட்டுதல், அவதூறு பரப்புதல் போன்றவற்றில் ஈடுபடுகின்றனர். |

3.6.4 - 60 சொற்களில் கருத்து விளக்கக் கட்டுரை எழுதுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- திறன்பேசியைப் பற்றி உரையாடச் செய்தல்.
- கொடுக்கப்பட்ட நன்மைகள், தீமைகள் ஆகியவற்றை வாசித்துக் கூறப் பணித்தல்.
- கருத்துகளைக் கொண்டு கட்டுரையை எழுதப் பணித்தல்.


**வி.வ.கூ:** தகவல் தொடர்புத் தொழில்நுட்பம் **உ.சி.தி:** சீர்தூக்கிப் பார்த்தல் **21 ஆம் நூற்றாண்டு:** தொடர்புகொள்ளும் திறன்

நடவடிக்கை நூல் 2 பக்கம் : 73

## பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

### பழமொழியையும் பொருளையும் அறிக.






கூடுதலான திறன்களை நாம் கற்றுக் கொள்வதால் அடையும் நன்மைகள் யாவை?

## பழமொழியும் பொருளும்

**ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?**

- எதையும் இளமையில் எளிதாகவும் விரைந்தும் கற்றுக் கொள்ளலாம்; முதுமையில் அவ்வாறு செய்ய இயலாது.

4.7.3 - மூன்றாம் ஆண்டுக்கான பழமொழிகளையும் அவற்றின் பொருளையும் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- உரையாடலைப் பாகமேற்று வாசிக்கச் செய்தல்.
- பழமொழியையும் பொருளையும் வாசித்து அறியப் பணித்தல்.
- பழமொழிக்கேற்பச் சூழல் அல்லது கதையை உருவாக்கிக் கூறப் பணித்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** ஆக்கச் சிந்தனை **21 ஆம் நூற்றாண்டு:** கொள்கையுள்ளவர்

நடவடிக்கை நூல் 2 பக்கம் : 74

பாடம் 5 **இலக்கணம்**

## காலப்பெயர் அறிக.



அன்று நடந்த துயரத்தை நினைத்துத் துளசி வேதனையில் மூழ்கினாள். ஒவ்வொரு வாரமும் சனிக்கிழமை இரவு தன் அப்பாவுடன் இரவுச் சந்தைக்குச் செல்வது எவ்வளவு இன்பமான அனுபவம்!

கோடைக்காலத்தில் இளநீர் வாங்கி வந்து அருந்தச் செய்தது, நீங்காத நினைவுகளாய் துளசியின் மனத்தில் வலம் வந்தது. அதிகாலையில் எழுந்து மகளுக்குப் பிடித்த சிற்றுண்டியைத் தயாரித்துக் கொடுப்பதை அப்பா அன்றாடக் கடமையாகக் கொண்டிருந்தார். காலையில் பள்ளிக்கு அனுப்புவதும் பிற்பகலில் வீட்டிற்கு அழைத்து வருவதும் அப்பாவின் முதன்மைப் பணியாகும்.

மாலை வேளையில் மகளுடன் சற்று நேரம் மெதுவோட்டப் பயிற்சி செய்வதை அப்பா மறந்ததேயில்லை. அனைத்தும் இன்று நடந்தவை போல துளசி உணர்கிறாள். அந்த ஒரு ஞாயிற்றுக்கிழமை அப்பாவின் வாழ்வில் வராமல் போயிருந்தால்... ஆம்! அன்றுதான் துளசி தன் அப்பாவுடன் உரையாடிய இறுதிநாள்.

உந்துருளியில் பிரயாணம் செய்து கொண்டே திறன்பேசியின் மூலம் மகளுடன் உரையாடுகிறார். அப்பா ஆனந்தமாய் பேசிய பேச்சுகள் திடீரென நின்றுபோயின. அப்பா! அப்பா! என்னப்பா ஆயிற்று? என்ற துளசியின் குரல் மட்டுமே ஒலித்தது. அப்பா சாலை ஓரத்தில்... அருகில் அவரது திறன்பேசி உயிரற்றுக் கிடந்தது. அப்பாவுக்குத் துளசியின் குரல் கேட்குமா?

**சொற்களஞ்சியம்**

- வேதனையில்
- அருந்த
- மெதுவோட்டம்
- உணர்கிறாள்
- ஆனந்தமாய்

5.3.13 - காலப்பெயர் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

**ஆசிரியர் குறிப்பு**


- கதையைப் பிழையற வாசிக்கப் பணித்தல்.
- கதையில் கூறப்பட்ட காலப்பெயர்களைக் கூறப் பணித்தல்.
- மாணவர்கள் காலப்பெயர்களுக்குப் பொருத்தமான வாக்கியங்கள் அமைக்கச் செய்தல்.

நடவடிக்கை நூல் 2 பக்கம் : 75



**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** சூழலமைவுக் கற்றல் **21 ஆம் நூற்றாண்டு:** தாங்கும் வலிமை

## சினைப்பெயர் அறிக.



நான் ஓர் ஒட்டகம். என் கண்ணிமைகள் பாலைவனத்து மணல் கண்ணில் நுழையாமல் தடுக்கும். எனது மெல்லிய கால்கள் மணலில் சுலபமாக நடக்க உதவுகின்றன. சாக்குப்பை போன்ற தோல் குளிரைத் தாங்கும் போர்வையாகின்றது. எனது தடித்த தட்டையான உதடுகளும் பற்களும் முள்நிறைந்த கள்ளிச்செடியைக் கடிக்கப் பயன்படுகின்றன. நான் தண்ணீரைச் சேமித்து வைக்க எனக்குத் திமில் உள்ளது. 'பாலைவனக் கப்பல்' என என்னைச் சிறப்புப் பெயர் கொண்டும் அழைப்பர்.



நாங்கள் பூச்சி இனத்தைச் சேர்ந்தவர்கள். எங்களின் உடலைத் தலை, மார்பு, வயிறு என மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம். எங்களில் சிலருக்கு இரண்டு உணர் இழைகள் உள்ளன. இவை மணம், உணர்வு அறியப் பயன்படும். மேலும், எங்களுள் சிலருக்குக் கண் அமைப்பு விந்தையாகவே இருக்கும். எங்கள் இனத்தைச் சேர்ந்த சிலருக்கு ஆறு கால்களும் உள்ளன. தட்டாரப் பூச்சி எங்கள் நண்பன். இப்பூச்சியின் கண் ஒரு கூட்டுக் கண் அமைப்பாக இருக்கும். இதில் ஆயிரக்கணக்கான சிறு கண்கள் உள்ளன.

5.3.14 - சினைப்பெயர் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- பத்திகளில் கூறப்பட்ட சினைப்பெயர்களைக் கண்டறிந்து கூறப் பணித்தல்.
- சினைப்பெயர்கள் வாக்கியங்களை மாணவர்கள் உருவாக்கிக் கூறச் செய்தல்.

நடவடிக்கை நூல் 2 பக்கம் : 76


**வி.வ.கூ:** மொழி **உ.சி.தி:** பயன்படுத்துதல் **21 ஆம் நூற்றாண்டு:** சிந்தனையாளர்

# தொகுதி 24 போதைப் பொருள்

## பாடம் 1 வேண்டாம் நமக்கு

### கலந்துரையாடுக.






**சொற்களஞ்சியம்**

- நீண்ட காலம்
- கோளாறுகள்
- விளைவுகள்
- குறுகிய காலம்

போதைப் பொருள்களின் தீமைகளை மாணவர்கள் அறிந்துகொள்ள எவ்வாறான நடவடிக்கைகளைப் பள்ளியில் மேற்கொள்ளலாம்?

1.4.3 - செவிமடுத்த உரையாடலிலுள்ள முக்கியக் கருத்துகளைக் கூறுவர்.

நடவடிக்கை நூல் 2 பக்கம் : 77

**ஆசிரியர் குறிப்பு**

- உரையாடலைப் பாகமேற்று வாசிக்கப் பணித்தல்.
- உரையாடலில் கூறப்பட்ட கருத்துகளை வரிசையாகக் கூறப் பணித்தல்.
- போதைப் பொருளின் தீமைகள் பற்றி தன் கருத்துகளைக் கூறப் பணித்தல்.

**வி.வ.கூ:** உலகவளாவிய நிலைத்தன்மை **உ.சி.தி:** சீர்தூக்கிப் பார்த்தல் **21 ஆம் நூற்றாண்டு:** தகவல் நிறைந்தவர்

## பாடம் 2 கருத்தரங்கு

### வாசித்து அறிக.

‘அறிவோம் தெளிவோம்’ எனும் தலைப்பில் எதிர்வரும் சனிக்கிழமை, ஈப்போ மாநகரில் கருத்தரங்கு நடைபெறவுள்ளது. பள்ளி மாணவர்களிடையே ஏற்படும் போதைப் பொருள் தாக்கங்கள், மனநிலை பாதிப்பு, கண்டறியும் வழிமுறைகள், சிக்கல்களுக்குத் தீர்வு காணுதல் போன்றவை இக்கருத்தரங்கில் விவாதிக்கப்படவுள்ளன.

**நிகழ்ச்சி நிரல்**

| | |
|---|---|
| மாலை 6:00 மணி | பிரமுகர்கள் வருகை |
| மாலை 6:30 மணி | தமிழ் வாழ்த்து - செல்வி திருப்பாவை |
| மாலை 6:35 மணி | வரவேற்புரை - திரு. க.மணியரசு |
| மாலை 6:45 மணி | கருத்தரங்கு ஆரம்பம் |
| இரவு 8:00 மணி | கேள்வி பதில் அங்கம் |
| இரவு 8:20 மணி | நன்றியுரை - திருமதி வ.செங்கமலம் |
| இரவு 8:25 மணி | விருந்தோம்பல் |

ஆசிரியர்கள், பெற்றோர், மாணவர்கள் அனைவரும் இக்கருத்தரங்கில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம். உங்கள் சிக்கல்கள் தீர இஃது ஒரு களமாகவும் அமையும்.

வருகை தாருங்கள்!
நன்மை அடையுங்கள்!



பள்ளியில் மாணவர்கள் பயனுற என்னென்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளலாம்?

2.3.6 - நிகழ்ச்சி நிரலைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப வாசிப்பர்.

**ஆசிரியர் குறிப்பு**

- நிகழ்ச்சி நிரலை ஏற்றத் தொனியுடன் வாசிக்கச் செய்தல்.
- நிகழ்ச்சி நெறியாளர் போல் பாகமேற்று வாசிக்கப் பணித்தல்.
- வாய்மொழியாகக் கேள்விகள் கேட்டு உரையாடச் செய்தல்.

நடவடிக்கை நூல் 2 பக்கம் : 78


**வி.வ.கூ:** உலகளாவிய நிலைத்தன்மை **உ.சி.தி:** ஆக்கச் சிந்தனை **21 ஆம் நூற்றாண்டு:** தாங்கும் வலிமை

## பாடம் 3 அறிவுரை கேளீர்!

### வாசித்து எழுதுக.




ஆசிரியர் வகுப்பறைக்குள் நுழைந்தார். மாணவர்கள் எழுந்து நின்று வணக்கம் கூறினர். அன்றைய பாடத்தைப் பற்றிய பீடிகையை ஆசிரியர் ஆரம்பித்தார். போதைப் பொருள், பகடிவதை போன்றவற்றைப் பற்றி விளக்கினார். பல தீமைகளைப் பற்றிய காணொலியைக் கண்டனர். பல வினாக்களைக் கேட்டு விளக்கம் பெற்றனர். தீய பழக்கங்களைத் தவிர்க்க வேண்டும் என்பதை உணர்ந்தனர். பண்புள்ள மாணவர்களே மிகச் சிறந்தவர் என அறிந்தனர்.



நானும் என் நண்பர்களும் தாத்தாவின் பூந்தோட்டத்திற்குச் சென்றோம். தாத்தாவும் பாட்டியும் செடிகளுக்கு உரம் இட்டனர்; தண்ணீர் ஊற்றினர். தாத்தா பூச்செடிகளுக்குப் பூச்சிக்கொல்லி மருந்தைத் தெளித்தார். தாத்தா அச்சமயம் சுவாசக்கவசம் அணிந்திருந்தார். நாங்களும் சுவாசக்கவசத்தை அணிந்துகொண்டோம். பூச்சிக்கொல்லி மருந்தின் மணத்தை மோந்து விடக்கூடாது என்றார். அவ்வேளையில் ஆசிரியர் கூறிய அறிவுரைகளும் எங்கள் நினைவிற்கு வந்தன.

போதைப் பித்தர்களினால் ஏற்படும் சமுதாயச் சீர்கேடுகளைக் கூறுக.

**சொற்களஞ்சியம்**

- பீடிகை
- காணொலி
- பூச்சிக்கொல்லி
- சுவாசக்கவசம்
- அறிவுரைகள்

3.5.2 - வாக்கியங்களைக் கோவையாக எழுதுதல்.

**ஆசிரியர் குறிப்பு**

- வாசிப்புப் பகுதிகளை வாசித்து அறியச் செய்தல்.
- குறிப்பிட்ட தலைப்பில் வாக்கியங்களைக் கோவையாகக் கூறப் பணித்தல்.

நடவடிக்கை நூல் 2 பக்கம் : 79

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21 ஆம் நூற்றாண்டு:** கொள்கையுள்ளவர்

# பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

## மரபுத்தொடரையும் பொருளையும் அறிக.



அமுதன்: வணக்கம் இனியன். ஏன் சோகமாக இருக்கிறாய்?

இனியன்: வணக்கம் அமுதன். வணிகத் துறையில் பட்டம் பெற்றும் என்னுடைய கணினி வியாபாரம் எதிர்பார்த்த அளவிற்கு இலாபகரமானதாக இல்லை. வருத்தமாக இருக்கிறது.

அமுதன்: அப்படி இல்லை, இனியன். ஒரு துறையில் ஈடுபட ஏட்டுக்கல்வி மட்டும் போதாது. அத்துறையொட்டிய அனுபவமும் தேவை. நானும் உன் போல் பட்டம் பெற்றிருந்தாலும் என் அப்பாவுடைய வியாபாரத்திற்கு உதவியதில் நல்ல அனுபவம் பெற்றேன். அந்த அனுபவமும் வியாபார நுணுக்கமுமே நான் வியாபாரத்தில் வெற்றி அடைய வழிவகுத்தது.

இனியன்: உண்மைதான் அமுதன். ஒரு துறையில் ஈடுபட முழுமையான அனுபவம் இல்லாத காரணத்தால்தான் நான் வெற்றி பெறவில்லை. நான் கற்ற கல்வி **ஏட்டுச் சுரைக்காய்** போலானதே என இப்போதுதான் உணர்கிறேன்.

### மரபுத்தொடரும் பொருளும்

**ஏட்டுச் சுரைக்காய்**

- நடைமுறைக்குப் பயன்படாத அறிவு /அனுபவத்தோடு ஒட்டாத கல்வி

4.6.3 - மூன்றாம் ஆண்டுக்கான மரபுத்தொடர்களையும் அவற்றின் பொருளையும் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

நடவடிக்கை நூல் 2 பக்கம் : 80

**ஆசிரியர் குறிப்பு**

- கதையை வாசித்து அறியச் செய்தல்.
- மரபுத்தொடரையும் பொருளையும் விளக்கிக் கூறப் பணித்தல்.
- மரபுத்தொடருக்குப் பொருத்தமான வாக்கியங்கள் அமைத்துக் கூறச் செய்தல்.


**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** சூழலமைவுக் கற்றல் **21 ஆம் நூற்றாண்டு:** தாங்கும் வலிமை

## பாடம் 5 இலக்கணம்

### பொருட்பெயர் அறிக.

தமயந்தி பட்டம் செய்யும் முறையைக் கற்றுக் கொண்டாள். கடைக்குச் சென்று வண்ணத் தாள்கள், பசை, கத்தரிக்கோல் போன்ற பொருள்களை வாங்கினாள். வீடு திரும்பியதும் பொருள்கள் அனைத்தையும் தன் அண்ணனிடம் காட்டினாள். மூங்கிலைச் சிறியதாக வெட்டினார்கள். இருவரும் சேர்ந்து அழகிய பட்டம் ஒன்றனைச் செய்து முடித்தனர். இருவரின் கற்பனைத் திறனைக் கண்டு அப்பா பாராட்டினார்.





சிறுவன் ஒருவன் தனியாக நடந்து வந்தான். வழியில் வேப்பமரம் ஒன்றனைக் கண்டான். கிளிகள் இரண்டு அம்மரக்கிளையில் அமர்ந்திருப்பதைப் பார்த்தான். கிளிகளின் அழகை இரசித்தான். கிளிகளின் அலகு வளைந்திருந்தது. கிளிகள் எவ்வாறு பழங்களைத் தின்னும் என்று சிந்தித்தவாறு நடந்தான். வழியில் கல் தடுக்கிக் கீழே விழுந்தான். தான் விழுந்ததைக் கிளிகளும் பார்த்திருக்கும் என எண்ணி வெட்கிச் சிரித்தான்.

உன் பள்ளிச் சிற்றுண்டிச்சாலையில் உள்ள பொருட்பெயர்களைக் கூறுக.

5.3.11 - பொருட்பெயர் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

நடவடிக்கை நூல் 2 பக்கம் : 81

**ஆசிரியர் குறிப்பு**

- வாசிப்புப் பகுதிகளைப் பிழையற வாசிக்கச் செய்தல்.
- பொருட்பெயர்களை அடையாளங்கண்டு கூறப் பணித்தல்.
- பொருட்பெயர்களை வரிபடத்தில் எழுதப் பணித்தல்.

**வி.வ.கூ:** மொழி **உ.சி.தி:** சிந்தனை வியூகம் **21 ஆம் நூற்றாண்டு:** கொள்கையுள்ளவர்

## இடப்பெயர் அறிக.

அடர்ந்த காடு ஒன்றனில் மூன்று குரங்குகள் சந்தித்துக் கொண்டன. இணைப்பிரியாத நண்பர்கள் என்பதால் ஓர் ஆலமரத்தடியில் அமர்ந்து உரையாடின. அருகிலுள்ள அருவியில் குளித்து மகிழ்ந்தன. நகைச்சுவையாகப் பேசிக்கொண்டே ஆற்றோரம் விளையாடித் திரிந்தன.

மூன்று குரங்குகளும் மாந்தோப்பில் பழுத்திருந்த மாம்பழங்களைப் பறித்து உண்டன. ஒரு விதையைத் தாங்களே நடுவது என முடிவு செய்தன. மூன்றும் வேலைகளைப் பிரித்துக் கொண்டன. முதல் குரங்கு ஒரு மலையடிவாரத்தில் மாவிதையை மண்ணில் புதைத்தது. இரண்டாவது குரங்கு தினமும் நீர் ஊற்றும் பணியை எடுத்துக்கொண்டது. மூன்றாவது குரங்கு அவ்விதையை யாரும் திருடாதவாறு பாதுகாக்கும் கடமையைச் செய்ய ஒப்புக்கொண்டது.

சில வாரங்களுக்குப் பிறகு மூன்று குரங்குகளும் மீண்டும் சந்தித்தன. விதை இன்னும் துளிர்விடவில்லையே என வருத்தம் கொண்டன.



“நான் என் வேலையைச் சரியாகத்தானே செய்தேன்,” என்றது முதல் குரங்கு. “நானும் தினமும் நீர் ஊற்றி என் கடமையை நிறைவேற்றுகிறேனே!” என்றது இரண்டாவது குரங்கு. “நான் மட்டும் என்ன சோம்பேறி என்று நினைத்தீர்களா? யாரும் இவ்விதையைத் திருடிவிடவில்லை என்பதை உறுதி செய்ய தினமும் விதையைக் குழியிலிருந்து எடுத்துப் பார்த்து விட்டு மீண்டும் அங்கேயே புதைக்கிறேன்,” என்றது பெருமிதத்துடன்.

5.3.12 - இடப்பெயர் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

**ஆசிரியர் குறிப்பு**
- வாசிப்புப் பகுதியைப் பிழையற வாசித்து அறியச் செய்தல்.
- இடப்பெயர்களைத் தெரிவு செய்து கூறப் பணித்தல்.
- இடப்பெயரைப் பயன்படுத்திச் சூழலை உருவாக்கிக் கூறச் செய்தல்.

நடவடிக்கை நூல் 2 பக்கம் : 82



**வி.வ.கூ:** மொழி **உ.சி.தி:** சூழலமைவுக் கற்றல் **21 ஆம் நூற்றாண்டு:** சிந்தனையாளர்

# தொகுதி 25 கல்வி

## பாடம் 1 தெளிவு வேண்டும்

### முக்கியக் கருத்துகளைக் கூறுக.



1 உண்மையான கல்வி என்பது தகவல்களைச் சேகரிப்பதா ஐயா?

2 அதுவன்று. மனத்தின் இயல்பான ஆற்றலை விளையச் செய்வதே உண்மையான கல்வியாகும்.

3 இன்றைய இளைய தலைமுறையினருக்குத் தேவையான கல்வி யாது ஐயா?

4 நல்ல ஒழுக்கத்தை உருவாக்குவது, பரவலான அறிவைத் தருவது, ஒருவனைத் தன் சொந்தக் காலில் நிற்கச் செய்வது முதலியன நம் இளம் தலைமுறையினருக்குத் தேவையான கல்வியாகும்.

5 கற்றலைப் பற்றி நீங்கள் கூற நினைப்பது என்ன ஐயா?

6 கற்றலில் மூன்று நிலைகள் உள்ளன. அவை தகவல், அறிவு, ஞானம் என்பனவாகும்.

7 சற்று விளக்கமாகக் கூற இயலுமா ஐயா?

8 உலகை அறிந்துகொள்ளப் பயன்படுவது தகவல். தன் மனத்தை ஆராய்ந்து தெளிவது அறிவு. வாழ்வினை விளக்குவது ஞானம்.

1.4.3 - செவிமடுத்த உரையாடலிலுள்ள முக்கியக் கருத்துகளைக் கூறுவர்.

**ஆசிரியர் குறிப்பு**

- உரையாடலைப் பிழையற வாசிக்கப் பணித்தல்.
- உரையாடலில் கூறப்பட்ட முக்கியக் கருத்துகளைக் கோவையாகக் கூறப் பணித்தல்.

நடவடிக்கை நூல் 2 பக்கம் : 83

**வி.வ.கூ:** உலகளாவிய நிலைத்தன்மை **உ.சி.தி:** ஆக்கச் சிந்தனை **21 ஆம் நூற்றாண்டு:** சிந்தனையாளர்

# பாடம் 2 கோள்களை அறிவோம்

## வாசித்து அறிக.



வானிலுள்ள கோள்கள், அவற்றின் இயக்கம், அதனால் ஏற்படும் பருவக்கால மாற்றங்கள் ஆகியவற்றைக் கணித்துக் கூறக்கூடிய தெளிவு அன்றைய தமிழர்களிடம் இருந்தது. வானிலையைப் பற்றிக் கணித்துக் கூறுபவர்களை அறியன், கணியன், நாழிகைக் கணக்கர் என அழைத்தனர்.

சூரியக் குடும்பத்தில் சூரியனே முதன்மையாகப் போற்றப்படுகிறது. சூரியனைச் சுற்றிக் கோள்கள் சூழ்ந்துள்ளன எனவும் சூரியனின் வெப்பத்தாலேயே புவியில் பருவக்கால மாற்றங்கள் தோன்றுகின்றன எனவும் சங்ககால இலக்கியங்கள் தெளிவுபடுத்துகின்றன.

பண்டையத் தமிழர்கள் சூரியன் முதலான ஒன்பது கோள்களைக் கோள்மீன் எனவும், அசுவின் முதலான இருபத்தேழு விண்மீன்களை நாள்மீன் எனக் கூறினர். ஒவ்வொரு கோளுக்கும் காரணப் பெயரிட்டு அழைத்தனர்.

செந்நிறமுடைய கோளைச் செவ்வாய் என்றனர். புதிதாய் அறிந்ததனால் புதன் என்றனர். இக்கோளுக்கு அறிவன் என்ற பெயரும் உண்டு. வியா என்றால் பெரிய எனப் பொருள்படும். எனவே, வானில் உலவும் பெரிய கோளை வியாழன் என்றழைத்தனர். வெண்மை நிறமுடைய கோள் வெள்ளி எனப்பட்டது. இவை யாவும் சங்கப் புலவர்களின் வானியல் அறிவையும் சிந்தனையையும் புலப்படுத்துகின்றன.

### சொற்களஞ்சியம்

- இயக்கம்
- வானிலை
- புவியில்
- விண்மீன்கள்
- புலப்படுத்துகின்றன

2.6.3 - மொழி தொடர்பான உரைநடைப் பகுதியை வாசித்துக் கருத்துணர் கேள்விகளுக்குப் பதிலளிப்பர்.

**ஆசிரியர் குறிப்பு**

- உரைநடைப் பகுதியை வாசித்து அறியச் செய்தல்.
- கூறப்பட்ட முக்கியக் கருத்துகளை விளக்கிக் கூறச் செய்தல்.
- வாய்மொழிக் கேள்விகளுக்கு விடை எழுதுதப் பணித்தல்.

நடவடிக்கை நூல் 2 பக்கம் : 84



**வி.வ.கூ:** அறிவியலும் தொழில் நுட்பமும் **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21 ஆம் நூற்றாண்டு:** தகவல் நிறைந்தவர்

# பாடம் 3 கற்போம் சிறப்போம்

## வாசித்து எழுதுக.

**அ**




நண்பர்கள் மூவர் பிறந்தநாள் விழாவிற்குச் சென்றனர். வணக்கம் கூறி வீட்டினுள் நுழைந்தனர். நண்பனுக்குப் பிறந்தநாள் வாழ்த்துக் கூறினர். பலவகை உணவுகள் பரிமாறப்பட்டன. காவியன் பழம் தின்றான். மாலதி உணவு உண்டாள். வாசன் தேநீர் பருகிவிட்டுக் கடலையைக் கொறித்தான். மூவரும் நன்றி கூறி வீடு திரும்பினர்.

**ஆ**

பழங்காலத்தில் பனை ஏடுகளில் எழுதினர். ஏடுகளைப் பொத்துத் தைத்துக் கட்டினர். இதனால், பொத்தகம் என்று அழைத்தனர். இச்சொல் மருவி புத்தகம் என்றானது. எனவே, இன்று நாம் புத்தகம் என்ற சொல்லைப் பயன்படுத்துகிறோம்.

**இ**




மாணவர்கள் கல்விச் சுற்றுலா சென்றனர். பேருந்தில் மகிழ்ச்சியாகப் பேசிக் கொண்டே சென்றனர். முதலில் பினாங்குப் பட்டினத்தைச் சுற்றிப் பார்த்தனர். இயற்கைக் காட்சிகளைக் கண்டு இரசித்தனர். மறுநாள் வீடு திரும்பினர். வரும் வழியில் ஈப்போ பட்டணத்தையும் சுற்றிப் பார்த்தனர். பல இனிய நினைவுகளுடன் இல்லம் வந்தடைந்தனர்.

3.5.2 - வாக்கியங்களைக் கோவையாக எழுதுவர்.

**ஆசிரியர் குறிப்பு**
- பத்திகளை வாசித்து அறியச் செய்தல்.
- வாக்கியங்களைக் கோவையாக வாசிக்கப் பணித்தல்.
- பத்திகளைச் சொல்வதெழுதுதல் பயிற்சியாக எழுதப் பணித்தல்.

நடவடிக்கை நூல் 2 பக்கம் : 85

**வி.வ.கூ:** உலகளாவிய நிலைத்தன்மை **உ.சி.தி:** சீர்தூக்கிப் பார்த்தல் **21 ஆம் நூற்றாண்டு:** தகவல் நிறைந்தவர்

# பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

## இரட்டைக்கிளவியையும் பொருளையும் அறிக.

வெளியில் கனத்த மழை. புகழேந்தி சன்னலின் ஓரம் நின்று மழை நீரை வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தான். அவனுக்கு வெகு நாள்களாகவே மழையில் நனைந்து விளையாட மிகுந்த ஆவல். அன்று அவனது ஆசையை நிறைவேற்றிக் கொள்ளச் சரியான நேரம் என நினைத்தான். ஆம்! அம்மாவும் அப்பாவும் பட்டணத்திற்குச் சென்றிருந்தனர்.



அம்மாவும் அப்பாவும் வீடு திரும்புவதற்குள் மழையில் நனைந்து ஆனந்தமாய் விளையாடிட வேண்டும் என்ற ஆவல். புகழேந்தி மழை நீரைக் கையில் பிடிப்பதும் சட்டையில் பிடிப்பதும் வானத்தைப் பார்த்துக் கண்களை மூடிக் கொண்டு நடப்பதும் எனப் பலவாறு விளையாடி மகிழ்ந்தான். புகழேந்தி தான் பாலர்ப்பள்ளியில் பாடிய பல சிறுவர்கள் பாடல்களையும் பாடி மகிழ்ந்தான்.

கறுப்பு நிற மகிழுந்து வீட்டின் வாசலில் வந்து நின்றுவிட்டதைச் சட்டெனக் கவனித்தான். “ஐயோ! நன்றாக மாட்டிக் கொண்டேனே!” என்று தனக்குள் கூறிக் கொண்டான். அம்மாவும் அப்பாவும் மகிழுந்திலிருந்து இறங்கியதைக் கண்டான். பயந்து நடுங்கியபடி தன் பெற்றோர் முன் நின்றான். இருவரின் முகத்திலும் கோபக் கனல் வீசியது. அப்பா **நறநற**வெனப் பற்களைக் கடித்துக் கொண்டே புகழேந்தியைப் பார்த்தார்.

அடுத்து என்ன நடக்குமோ எனப் பலவாறு எண்ணிக்கொண்டே புகழேந்தி குளியலறைக்குச் சென்றான்.

### சொற்களஞ்சியம்

- ஆவல்
- வானத்தை
- வாசலில்
- கோபக்கனல்
- நடுங்கினான்

### இரட்டைக்கிளவியும் பொருளும்

**நறநற**

- சினத்தால் பல்லைக் கடிக்கும் ஓசை

4.5.3 - மூன்றாம் ஆண்டுக்கான இரட்டைக்கிளவிகளைச் சூழலுக்கேற்பச் சரியாகப் பயன்படுத்துவர்.

நடவடிக்கை நூல் 2 பக்கம் : 86


**ஆசிரியர் குறிப்பு**

- வாசிப்புப் பகுதியை வாசிக்கப் பணித்தல்.
- இரட்டைக்கிளவியையும் பொருளையும் அறிந்து கூறச் செய்தல்.
- இரட்டைக்கிளவிக்குப் பொருத்தமான வாக்கியங்களை மாணவர்கள் உருவாக்கிக் கூறப் பணித்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** சீர்தூக்கிப் பார்த்தல் **21 ஆம் நூற்றாண்டு:** சிந்தனையாளர்

## பாடம் 5 இலக்கணம்

### எழுவாய் - பயனிலை இயைபு அறிக.



- காற்று வீசியது.
- கிளைகள் அசைந்தன.
- இலைகள் உதிர்ந்தன.
- பழங்கள் விழுந்தன.



- வேடன் வந்தான்.
- மான் ஓடியது.
- பறவைகள் பறந்தன.
- புலி பதுங்கியது.



- பாடகன் பாடினான்.
- நடிகர்கள் நடித்தனர்.
- சிறுமிகள் ஆடினர்.
- இளைஞர்கள் இரசித்தனர்.




- ஆசிரியர் கற்பித்தார்.
- மாணவன் வாசித்தான்.
- மாணவி எழுதினாள்.
- மாணவர்கள் கவனித்தனர்.

5.6.1 - எழுவாய் - பயனிலை இயைபு அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

**ஆசிரியர் குறிப்பு**


- வாக்கியங்களை வாசிக்கப் பணித்தல்.
- எழுவாய் - பயனிலை இயைபு அறிந்து கூறச் செய்தல்.
- மாணவர்கள் சுயமாக வாக்கியங்கள் அமைத்து விளக்கப் பணித்தல்.

**வி.வ.கூ:** மொழி **உ.சி.தி:** பயன்படுத்துதல் **21 ஆம் நூற்றாண்டு:** தகவல் நிறைந்தவர்

நடவடிக்கை நூல் 2 பக்கம் : 87


## செயப்படுபொருள் அறிக.

### சூழல் 1



- விவசாயி வயலை உழுதான்.
- பெண் நாற்று நடுகிறார்.
- சிறுவர்கள் ஆற்று மீன்களைப் பிடித்தனர்.
- தாத்தா மாம்பழங்களைப் பறித்தார்.
- மாடுகள் புற்களைத் தின்கின்றன.
- ஆற்றுநீர் பெருகியது.
- எருது ஏர் இழுத்தது.

### சூழல் 2



- அண்ணன் மணல் வீடு கட்டினான்.
- தம்பி பந்தை உதைத்தான்.
- அக்காள் பாட்டியைப் பார்த்து கை அசைத்தாள்.
- அம்மா சோறு ஊட்டினார்.
- அப்பா நாளிதழ் வாசித்தார்.
- வியாபாரி பனிக்கூழ் விற்றான்.
- குமாரி மிதவையை மாட்டிக் கொண்டாள்.
- கனிமொழி பணம் செலுத்துகிறாள்.
- குழந்தை உணவை உண்கின்றது.

5.6.2 - செயப்படுபொருள் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

**ஆசிரியர் குறிப்பு**
- வாக்கியங்களை வாசிக்கச் செய்தல்.
- வாக்கியங்களிலுள்ள செயப்படுபொருளைக் கண்டறிந்து கூறப் பணித்தல்.
- மாணவர்கள் சுயமாக வாக்கியங்கள் அமைத்துச் செயப்படுபொருளை விளக்கிக் கூறச் செய்தல்.

**வி.வ.கூ:** மொழி **உ.சி.தி:** சூழலமைவுக் கற்றல் **21 ஆம் நூற்றாண்டு:** சிந்தனையாளர்

நடவடிக்கை நூல் 2 பக்கம் : 88

Dengan ini **SAYA BERJANJI** akan menjaga buku ini dengan baiknya dan bertanggungjawab atas kehilangannya serta mengembalikannya kepada pihak sekolah pada tarikh yang ditetapkan

**Skim Pinjaman Buku Teks**

Sekolah ________________________________________

| Tahun | Darjah | Nama Penerima | Tarikh Terima |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

Nombor Perolehan : __________________________

Tarikh Penerimaan : __________________________

**BUKU INI TIDAK BOLEH DIJUAL**